செப்டம்பர் - அக்டோபர் 2026

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



# நீதிமொழிகளின் புத்தகம்

- இதயத்தைக் காத்துக்கொள்ளுதல்
- கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொள்வது
- இருதயத்தைக் காப்பதற்கான ஞானம்
- கடுமையான உலகில் மென்மையான சொற்கள்
- ஞானிகள் ஞானிகளிடமிருந்து கற்றுக்கொள்கிறார்கள்
- சுயக்கட்டுப்பாட்டின் முக்கியத்துவம்
- நமது பாதைகளை வழிநடத்தக் கடவுளை அனுமதித்தல்

## நீதிமொழிகளின் புத்தகம்

# ஆதியிலே



புது சிருஷ்டியின் வளர்ச்சிக்குப் பயன்படக்கூடிய பல ஞானக் கருத்துக்களை நீதிமொழிகளின் புத்தகம் கொண்டுள்ளது. நீதிமொழிகள் 4:23ல் ஒரு சிறப்பான வழிகாட்டுதல் காணப்படுகிறது. அது வாசகரை நோக்கி, "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்" என்று அறிவுறுத்துகிறது. ஒரு கிறிஸ்தவர் எவ்வாறு தன் இருதயத்தைக் காத்துக்கொள்ளலாம் என்பதைப் புரிந்துகொள்ள உதவும் ஏழு நீதிமொழிகளை இக்கட்டுரை ஆராய்கிறது, அத்துடன் இருதயத்தை எவ்வாறு பாதுகாப்பது, ஒழுங்குபடுத்துவது மற்றும் எவ்வாறு தேவனுடைய சித்தத்திற்கேற்ப முழுமையாகச் செதுக்கி அமைப்பது என்பதையும் இது விளக்குகிறது. "**இருதயத்தைக் காத்துக்கொள்ளுதல்**" என்ற பாடம், நீதிமொழிகள் 4:23 ஐயும், "இருதயம்" என்பதன் வேத அர்த்தத்தையும் ஆராய்வதன் மூலம் ஒரு அடித்தளத்தை அமைக்கிறது. இது இருதயத்தை உணர்வுகளின் இருப்பிடமாகவும், சித்தத்தின் மையமாகவும், அடையாளத்தின் ஆணிவேராகவும் கருதுகிறது. இருதயத்தைக் காப்பது என்பது வெளித்தோற்ற நடத்தையை விட மேலானது என்பதை இந்தக் கட்டுரை காட்டுகிறது, அதற்கு நமது உணர்வுகள், சித்தம் மற்றும் அடையாளம் ஆகியவற்றை தேவனுடைய ஆட்சிக்கும் கிறிஸ்துவின் ஊழியத்திற்கு கீழ்ப்படுத்துவது அவசியம்.

"**கண்டிப்பை ஏற்றுக்கொள்ளுதல்**" என்ற பாடம், நீதிமொழிகள் 9:8ஐயும் பரிகாசம் செய்பவனும் ஞானியும் கண்டிப்பிற்கு காட்டும் முரண்பட்ட பதில்களையும் ஆராய்கிறது. இருதயத்தைக் காப்பதற்கான ஒரு முக்கியமான வழி, தாழ்மையுடனும், கற்றுக்கொள்ளும் மனதுடனும், கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொள்ளும் விருப்பத்துடனும் இருப்பதுதான் என்பதை இது காட்டுகிறது. ஞானத்தின் ஆவியுடன் ஏற்றுக்கொள்ளப்படும்போது, கண்டிப்பு ஒரு ஆசீர்வாதமாக மாறி, இருதயத்தை நீதியில் காக்க உதவுகிறது. "இருதயத்தைக் காப்பதற்கான ஞானம்" என்ற பாடம், நீதிமொழிகள் 12:10ஐ ஆராய்ந்து, இரக்கம் தேவனுடைய நீதியால் வழிநடத்தப்பட வேண்டும் என்பதைக் காட்டுகிறது. இரக்கம் என்று தோன்றும் சில காரியங்கள், பாவத்தை மன்னிக்கும் போதும், அவசியமான திருத்தத்தைத் தவிர்க்கும்போதும், அல்லது மாம்சத்தை சத்தியத்திலிருந்து மறைக்கும்போதும் ஆவிக்குரிய ரீதியில் தீங்கு விளைவிக்கக்கூடும். உண்மையான இரக்கம் மனந்திரும்புதல், சுகம் மற்றும் மறுசீரமைப்பை நாடுகிறது.

"**கடுமையான உலகில் மென்மையான வார்த்தைகள்**" என்ற பாடம் நமது வார்த்தைகள் இருதயத்தின் நிலையை எவ்வாறு வெளிப்படுத்துகின்றன என்பதைக் காட்ட நீதிமொழிகள் 15:1-2 ஐ ஆதாரமாகக் கொள்கிறது. இருதயத்தைக் காப்பதில் நாவைக் கட்டுப்படுத்துதல், கிருபையுடன் பேசுதல், ஊக்கமளித்தல், மற்றும் அவசியமான திருத்தத்தைக் கூட ஞானத்தோடும் அன்போடும் பயன்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

"**ஞானிகள் ஞானிகளிடமிருந்து கற்றுக்கொள்கிறார்கள்**" என்ற பாடம், நீதிமொழிகள் 13:20ஐ ஆராய்கிறது. இருதயத்தை வடிவமைப்பதில் தோல்களும் செல்வாக்குகளும் முக்கியப் பங்கு வகிக்கின்றன என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. இருதயத்தைக் காப்பதில், ஞானமான ஆலோசனைக்குச் செவிகொடுப்பது, வேத உதாரணங்களிலிருந்து கற்றுக்கொள்வது, சீர்கெட்ட செல்வாக்குகளைத் தவிர்ப்பது, மற்றும் தெளிவான மனசாட்சியுடன் தேவனுடைய ஆசீர்வாதத்தைத் தேடுவது ஆகியவை அடங்கும்.

"**சுயக்கட்டுப்பாட்டின் முக்கியத்துவம்**" என்ற பாடம், நீதிமொழிகள் 16:32 ஐயும், ஒழுக்கமுள்ள விளையாட்டு வீரரைப் பற்றிய பவுலின் உருவகத்தையும் ஆராய்கிறது. இருதயத்தைக் காப்பதற்கும், ஒரு கிறிஸ்தவரின் எண்ணங்கள், விருப்பங்கள், வார்த்தைகள் மற்றும் செயல்களை நீதியின் ஆட்சிக்குக் கீழ்ப்படியப் பயிற்றுவிப்பதற்கும் சுயக்கட்டுப்பாடு இன்றியமையாதது. "**தேவன் நம்முடைய அடிகளை வழிநடத்தட்டும்**" என்ற பாடம், நீதிமொழிகள் 16:9 ஐக் கருத்தில் கொண்டு, சிந்தனைமிக்க திட்டமிடலையும் தேவனுடைய மேலான சித்தத்திற்குத் தாழ்மையுடன் கீழ்ப்படிதலையும் சமநிலைப்படுத்துவதன் மூலம் இந்த இதழை நிறைவு செய்கிறது. இருதயத்தைக் காப்பது என்பது நம்முடைய திட்டங்களைத் திறந்த கரங்களில் வைத்துக்கொண்டு, ஆவிக்குரிய முதிர்ச்சியையும் கிறிஸ்துவைப் போன்ற தன்மையையும் நோக்கி நமது ஒவ்வொரு அடியையும் கர்த்தர் வழிநடத்துவார் என்று அவரை விசுவாசிப்பதாகும்.

கிறிஸ்துவில் உள்ள ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்துவைப் போன்ற இருதயத்தை வளர்த்துக்கொள்ளவும், அது தொடர்ந்து வளரும்போது அதைக் காக்கவும் விடாமுயற்சியுடன் நாட வேண்டும் என்பதே நம் ஜெபம் ஆகும்.

**ஆகஸ்ட் / செப்டம்பர் 2026,**
**தொகுப்பு 108, எண் 5**

**இதயத்தைக் காத்துக்கொள்ளுதல்** 2
எல்லாவற்றிற்கும் மேலாக

**கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொள்வது** 9
பொறுமையான மனத்தாழ்மை

**இருதயத்தைக் காப்பதற்கான ஞானம்** 14
போலி இரக்கத்தின் கொடூரம்

**கடுமையான உலகில் மென்மையான சொற்கள்** 20
கோபத்தைத் தணித்தல்

**ஞானிகள் ஞானிகளிடமிருந்து கற்றுக்கொள்கிறார்கள்** 25
மற்றவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளுதல்

**சுயக்கட்டுப்பாட்டின் முக்கியத்துவம்** 29
கோபப்படுவதில் நிதானம்

**நமது பாதைகளை வழிநடத்தக் கடவுளை அனுமதித்தல்** 36
நீதிமொழிகளிலிருந்து ஓர் அறிவுரை

எல்லாவற்றிற்கும் மேலாக

# இருதயத்தைக் காத்துக்கொள்ளுதல்



— Micah Hess

"எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்" (நீதிமொழிகள் 4:23)

இந்த வசனத்தின் மையப் பொருள் மனித இயல்பு குறித்த ஒரு முக்கிய நுண்ணறிவை (ஆழமான பார்வையை) நமக்கு அளிக்கிறது. இருதயம் நம் இருப்பின் மையத்தில் அமைந்திருந்து, வாழ்க்கைப் பாதையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்றும் இது நமக்கு உணர்த்துகிறது. இது நமது எண்ணங்கள், சொற்கள் மற்றும் செயல்கள் ஆகியவற்றின் மீது வெறும் தாக்கத்தை ஏற்படுத்துவதோடு, பெரும்பாலும் இவ்வணைத்தையும் நிர்வாகிக்கிறது.

இந்தத் தொடர்பைக் குறித்து இயேசு தெளிவாக் குறிப்பிடுகிறார் - "வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டுவரும், அவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்." (மத்தேயு15:18)நீதிமொழிகளின் ஞானத்தோடு இணைத்துப்பார்க்கையில், இருதயத்தின் நிலைக்கும் நம் அன்றாட வாழ்வின் செயல்களுக்கும் இடையே ஒரு வலுவான தொடர்பை அவருடைய வார்த்தைகள் ஏற்படுத்துகின்றன.இந்த புரிதல், நம்மை நாமே நேர்மையாக ஆராய்ந்து பார்க்கவும், வெளிப்படும் பாவங்களையும் பலவீனங்களையும் எதிர்கொள்ளவும் நம்மை அனுமதிக்கிறது.

நம் இருதயத்தைக் காத்துக்கொள்ள வேண்டும் என்ற கட்டளையை நாம் எவ்வாறு நிறைவேற்றலாம் என்பதைப் புரிந்துகொள்ள, வேதாகமத்தில் "இருதயம்" என்பது எதைக் குறிக்கிறது என்பதைச் சிந்திப்பது உதவியாக இருக்கும். இச்சொல் பரந்த அளவில் பயன்படுத்தப்பட்டாலும், குறிப்பாக மூன்று அம்சங்கள் முக்கியமானவை - உணர்வுகளின் இருப்பிடமாகவும், விருப்பத்தின் மையமாகவும், ஒருவரின் அடையாளத்தின் ஆணிவேராகவும் இருதயம் திகழ்கிறது. {வேதாகமத்தில் "இருதயம்" என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ள விதம் குறித்த விரிவான விளக்கத்திற்கு, W. E. Vine எழுதிய Vine's Expository Dictionary of New Testament Words Fwpg;ghf “Heart, Heartily”; vDk; gFjp) kw;Wk; Baker Evangelical Dictionary of Biblical Theology,(குறிப்பாக “Heart”எனும் பகுதி) ஆகியவற்றைப் பார்க்கவும். இவ்விரு நூல்களுமே, வேதாகமத்தில் குறிப்பிடப்படும் இருதயத்தை மனித வாழ்வின் உள்ளான மையப்பகுதியாக விவரிக்கின்றன, இம்மையப்பகுதியானது சிந்தனை, உணர்வுகள், விருப்பம், ஒழுக்கப் பண்பு மற்றும் ஆவிக்குரிய செயல்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். }

### உணர்வுகளின் இருப்பிடம்

இருதயம் என்பது நம்முடைய பாசங்கள் (அன்பு)- அதாவது நாம் நேசிக்கும் விஷயங்கள் - தங்கும் இடமாக இருக்கிறது என்பதை வேதாகமம் அங்கீகரிக்கிறது. மத்தேயு6:19-21ல் விசுவாசிகள் அழிவுக்கும் இழப்புக்கும் உள்ளாகக்கூடிய பூமியின் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்காமல், பரலோகத்தில் பொக்கிஷத்தைத் தேட வேண்டும் என்று இயேசு போதிக்கிறார்.

அதில் மிகவும் ஆழமாக ஊடுருவிச் செல்லும் வரி இதுதான் - "உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயம்



இருக்கும்."(மத்தேயு6:21) நாம் எதை நேசிக்கிறோமோ, எதன் மீது நம் மற்றுதலை வளர விடுகிறோமோ, அது தவிர்க்க முடியாமல் நம் இருதயத்தின் மீது ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிவிடும்.

நாம் எதை நேசிக்கிறோமோ அதுவே நமது வாழ்வுமுறையை வடிவமைக்கும் என்பதே இதன் பொருளாகும் - அதாவது நமது முடிவுகள், நமது முயற்சிகள் மற்றும் நமது நேரத்தையும் ஆற்றலையும் நாம் செலவிடும் விதம் ஆகியவற்றை அது தீர்மானிக்கும். நாம் தொடர்ந்து சுகம், உற்சாகம், அங்கீகாரம் அல்லது வெற்றியை நாடிக்கொண்டிருந்தால், அந்த விருப்பங்கள் நம்மை ஆளும் உந்துசக்திகளாக மாறிவிடக்கூடும். ஆனால், கடவுளுடைய நீதியான தரநிலைக்கு ஏற்ப நம் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவும், அவரிடமிருந்து அங்கீகாரம் பெறவும் நாம் முயன்றால், நம் இருதயம் அவரை நோக்கியே வழிநடத்தப்படும். நமது வாழ்க்கையின் வெளிப்படையான நடைமுறை, நம்முடைய அன்பு எதன் மீது உண்மையாகவே நிலைத்திருக்கிறது என்பதை வெளிப்படுத்துகிறது. எனவே, கிறிஸ்தவர்கள் தங்களது இருதயத்தின் அன்பை மிகுந்த கவனத்துடனும் பொறுப்புடனும் காத்துக்கொள்ள வேண்டும். நீதியை நேசிப்பதையும் பாவத்தை வெறுப்பதையும் விட இது மேலானது. நமது அன்பிற்குரிய விஷயங்கள் சரியான முறையில் வரிசைப்படுத்தப்படவோ அல்லது முன்னுரிமைப்படுத்தப்படவோ வேண்டும் என்பதை இது கோருகிறது.கடவுளுக்கு மட்டுமே உரிய இடத்தை வேறு எதற்காவது அளிக்கும்போது, நல்ல விஷயங்கள் கூட ஒழுங்கற்ற நிலையை அடையக்கூடும். கடவுளை காட்டிலும், வேறெதன் மீதாவது அதிக அன்பு செலுத்துவது என்பது, நம் அன்பை தவறான இடத்தில் செலுத்துவதாகும்.

நமக்குள்ளே உற்றுநோக்கி, நம் விருப்பங்களை அடையாளம் கண்டு, அவற்றை நம் உண்மையான அடையாளத்தின் வெளிப்பாடாகக் கருதிப் பின்பற்ற ஊக்குவிக்கும் உலகத்தின் சிந்தனைக்கு இது முரணாக உள்ளது. வேதாகமம் முற்றிலும் மாறுபட்ட ஒரு கண்ணோட்டத்தை முன்வைக்கிறது. தானாகவே விடப்படும் இருதயம் ஒரு நம்பகமான வழிகாட்டி அல்ல. இதைக் குறித்து எரேமியா எச்சரிக்கிறார். "எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது அதை அறியத்தக்கவன் யார்? "(எரேமியா 17:9)கிறிஸ்தவர் வெறுமனே தனது உணர்வுகளைப் பின்பற்றுவதில்லை, அவர் அவற்றை ஆண்டவரின் ஆதிக்கத்திற்கு உட்படுத்துகிறார்.

இது அன்பை ஒடுக்குவதல்ல, மாறாக அதைச் சரியான முறையில் ஒழுங்குபடுத்துவதாகும். தங்கள் தொழிலில் ஊக்கத்துடன் ஈடுபடுவதிலோ, குடும்பத்தை நேசிப்பதிலோ, நல்லுறவை அனுபவிப்பதிலோ அல்லது கடவுள் அருளியுள்ள பௌதிகப் பரிசுகளை மதித்துப் போற்றுவதிலோ எந்தத் தவறும் இல்லை. ஆனால், கடவுள் மீதான பக்திக்கு பதிலாக தொழில்சார்ந்த லட்சியம் இடமாற்றம் செய்யப்படும் போது, ஒரு குறிப்பிட்ட துறையில் ஆற்றும் சேவைக்காக ஆண்டவர் ஏற்கனவே வகுத்தளித்த கடமைகள் புறக்கணிக்கப்படும் போது, அல்லது சேவைக்கான கருவிகளாக இருக்க வேண்டிய பொருள்சார்ந்த விஷயங்களே வழிபாட்டிற்குரிய பொருட்களாக மாறும்போது, இருதயத்தின் முன்னுரிமை வரிசை மாறிவிடுகிறது.

உள்ளத்தின் உணர்வுகளைக் காத்துக்கொள்வது என்பது, கடவுள் மீதான அன்பை மையமாகக் கொண்டிருப்பதை உறுதிசெய்வதும், மற்ற அனைத்தின்மீதுள்ள அன்பையும் அவருக்குக் கீழ்ப்பட்ட சரியான வரிசைக்கிரமத்தில் வைப்பதாகும்.

## மனதின் சித்தத்தின் மையம்

இருதயம் விருப்பத்தின் மையமாகவும் விளங்குகிறது. {சில கூடுதலான எடுத்துக்காட்டுகளுக்கு தானியேல் 1:8 , நீதிமொழிகள் 16:9,2கொரிந்தியர்9:7 காணவும். }

"மன உறுதி" என்பதை, வெறும் உறுதியான தீர்மானத்தின் மூலம் தடைகளை முறியடித்து முன்னேறும் திறனாகவே நாம் பொரும்பாலும் கருதுகிறோம். இது அந்த எண்ணத்தின் ஒரு பகுதியை வெளிப்படுத்தினாலும், வேதாகமம் இன்னும் முழுமையான ஒரு கண்ணோட்டத்தை அளிக்கிறது. மன உறுதி என்பது வெறும் வலிமையின் வெளிப்பாடு மட்டுல்ல, அது இருதயத்தின் அகவாழ்வினால் - அதாவது நமது பற்றுகள், குணம் மற்றும் நாம் எவற்றிற்கு மிக உயர்ந்த மதிப்பளிக்கிறோம் ஆகியவற்றால் -



வடிவமைக்கப்படும் ஒன்றாகும்.

வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் மன உறுதி ஏன் சமமான அளவில் பயனப்படுத்தப்படுவதில்லை என்பதை இது விளக்குகிறது. நமக்கு மிகவும் முக்கியமான விஷயங்களில் நாம் அதிக உறுதியை வெளிப்படுத்துகிறோம். ஆழ்ந்த பற்றுதல் இருக்கும் இடங்களில், மன உறுதி வலுப்பெறுகிறது. அன்பு அல்லது பற்றுறுதி எங்கே வலுவாக இருக்கிறதோ, அங்கே மனவுறுதியும் வலுப்பெறுகிறது. இருதயம் பிளவுப்படும்போதோ அல்லது ஈடுபாடின்றி இருக்கும்போதோ, பெரும்பாலும் மன உறுதி பலவீனமடைகிறது. மனவுறுதி தனித்துச் செயல்படுவதில்லை, மாறாக, அது இருதயத்தில் குடிகொண்டுள்ளது.

எபேசியர் 6 ஆம் அதிகாரத்தில் பவுல் இந்த உள்ளான நிலையை எடுத்துரைக்கிறார், அங்கு அவர் " மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யவேண்டும்" என்று அறிவுறுத்துகிறார். (எபேசியர் 6:6)இந்த அறிவுரை, புறச் செயலுக்கும் அகத்தில் உள்ள நேர்மைக்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துரைக்கிறது. ஒரு கிறிஸ்தவர், கீழ்ப்படிதலுள்ளவராகத் தோன்றுவதற்கு மட்டுமல்ல, அகத்தில் தேவனுடைய சித்தத்தோடு இசைந்திருக்கவும் அழைக்கப்படுகிறார்.

எஸ்றாவிடம் இந்த பாணியை நாம் காணலாம் :"கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், இஸ்ரயேலிலே கட்டளைகளையும் நீதிநியாயங்களையும் உபதேசிக்கவும், எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான்." (எஸறா7:10) அவருடைய கீழ்ப்படிதல் செயல்புரியும் தருணத்தில் தொடங்கவில்லை, மாறாக இருதயத்தில் மேற்கொள்ளப்பட்ட முந்தைய ஆயத்தத்திலேயே அது தொடங்கியது. அங்கேயே அவருடைய விருப்பம் உருவானது, அங்கிருந்தே அது செயலாக வெளிப்பட்டது.

மனவுறுதி பாதுகாப்பற்ற நிலையில் விடப்பட்டால், அது கட்டுப்பாடற்ற உணர்ச்சிகளாலோ அல்லது ஆசைகளாலோ அடித்துச் செல்லப்படக்கூடும். உதாரணமாக, கோபம், கடுமையான சொற்கள், உறவுகளின் பாதிப்புகள் மற்றும் பாவமான செயல்களுக்கு வழிவகுக்கலாம். அத்தருணத்தில் அத்தகைய எதிர்வினைகள் நியாயமானவையாகத் தோன்றலாம். ஆனால் உணர்ச்சி தணிந்ததும், அதில் உள்ள தவறு பொரும்பாலும் தெளிவாகிவிடுகிறது. மனித சித்தம் சத்தியத்தினாலும், உயர்ந்த கோட்பாடுகளாலும் வழிநடத்தப்படாதபோது, மனித விருப்பம் எவ்வளவு எளிதாகத் தவறான பாதையில் திசைதிருப்பப்படக்கூடும் என்பதை இது உணர்த்துகிறது.

ஆகவே, மனவுறுதி அல்லது சித்தம் பயிற்றுவிக்கப்பட வேண்டும். ரோமர் நிருபத்தில் பவுல் இந்த எதிர்பார்ப்பைத் தெளிவாகக் குறிப்பிடுகிறார். இந்த எதிர்ப்பார்ப்பை பவுல் ரோமரில் தெளிவாக்குகிறார். " நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். (ரோமர்12:2)இந்த வசனம் போதனையளிப்பதாகவும் ஊக்கமளிப்பதாகவும் இருக்கிறது. வீழ்ச்சியடைந்த மனதினால் தேவனுடைய சித்தத்தை இயல்பாகப் புரிந்துகொள்ள முடியாது என்பதற்காகவே இது போதனையாக கொடுக்கப்படுகிறது.

உலகம் இடைவிடாது நம் மீது தாக்கத்தை ஏற்படுத்தி, நமது விருப்பங்கள், அனுமானங்கள் மற்றும் தேர்வுகளை வடிவமைக்கிறது. ஆண்டவரின் சத்தியத்தால் நமது மனதின் சித்தம் புதுப்பிக்கப்படாவிட்டால், அது காலத்தின்

போக்குக்கு ஏற்ப மாறிப்போகும்.

ரோமர் 12:2 ம் வசனம் ஊக்கமளிப்பதாக இருக்கிறது, ஏனெனில் , நமக்குள் மாற்றங்கள் சாத்தியமானது என்பதை அது கற்பிக்கிறது. கடவுளின் விருப்பத்தை நாம் உடனடியாகப் புரிந்துகொள்ளாதபோது சோர்வடையத் தேவையில்லை. மாற்றம் என்பது உடனடியாக நடப்பது அரிதாகவே உள்ளது. இடுக்கமான பாதையில் எடுத்துவைக்கப்படும் ஒவ்வொரு அடியும் வெவ்வேறு அனுபவங்கள், சோதனைகள், பாடங்கள் மற்றும் ஆண்டவரின் இரக்கங்களைக் கொண்டுவருகிறது. சரீரத்தின் ஒவ்வொரு உறுப்புக்கும் உள்ள தேவைகளை தேவன் அறிவார், மேலும், நம்மைத் தம்முடைய குமாரனின் சாயலுக்கு ஒத்தவர்களாக மாற்றுவதற்கு, எல்லாவற்றையும் நம்முடைய மிக உயர்ந்த ஆவிக்குரிய நன்மைக்காகப் பயன்படுத்த அவரால் கூடும். குறிக்கோள் கொண்ட சித்தத்திற்கான மிகச் சிறந்த உதாரணம் நம் ஆண்டவரிடம் காணப்படுகிறது. "பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும், ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆககக்கடவது என்று ஜெபம்பண்ணினார்." (லூக்கா 22:42)

அவருடைய கீழ்ப்படிதல் செயலற்ற சரணாகதி அல்ல, மாறாக, பிதாவுக்குச் செலுத்தப்பட்ட உண்மையுள்ள கீழ்ப்படிதலாக இருந்தது. பயிற்சி பெற்ற மனவுறுதி எத்தகையது என்பதை அவரிடம் நாம் காண்கிறோம். அது சுய -ஆட்சி அல்ல, மாறாக முழுமையாகச் சரணடைதலுக்கான நம்பிக்கையாகும். இந்தச் சரணடைதல் மகிழ்ச்சியற்ற ஒரு பணிந்துபோகுதல் அல்ல. மாறாக, தனது விருப்பத்தை கடவுளை நோக்கிச் செலுத்தும் கிறிஸ்தவர், நிலையான அமைதி, வலிமை மற்றும் இளைப்பாறுதல் ஆகியவற்றின் ஒரே ஊற்றை நோக்கி மேலும் மேலும் நெருங்கிச் செல்கிறார்.

## அடையாளத்தின் மையம்

இருதயமும் அடையாளத்தையும் வடிவமைக்கிறது.வேதாகமம் "அடையாளம் " (identity) என்ற நவீனச் சொல்லைப் பயன்படுத்தாவிட்டாலும், இருதயத்தை ஒரு உள்ளார்ந்த எதார்த்தமாகவே அது தொடர்ந்து முன்வைக்கிறது, இந்த இருதயத்தின் மூலமாகவே



தேவன் நம்மை அறிகிறார், நியாயம் தீர்க்கிறார் மற்றும் நாம் உண்மையில் யார் என்பதை வரையறுக்கிறார்.

நாம் பெரும்பாலும் "அடையாளம் - அதாவது "உண்மை தன்மை" - என்று அழைப்பது, இருதயத்தின் நிலையோடு நெருங்கிய தொடர்புடையது. நீதிமொழிகள் 23:7, இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். "அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்,",

நமது ஆழ்ந்த சிந்தனைகள்,மதிப்பீடுகள் மற்றும் நாட்டங்கள் ஆகியவை தோன்றும் இடமே இருதயம் ஆகும். அதே வேளையில், இதை கவனமாகப் புரிந்துகொள்ள வேண்டும். பாவமான எண்ணங்களின் இருப்பு, விசுவாசியின் அடையாளத்தைத் தீர்மானிக்க அனுமதிக்கப் படக்கூடாது. அது ஒரு சோர்வூட்டும் மற்றும் முழுமையற்ற முடிவாக இருக்கும். மாறாக, அது இருதயத்தைக் காத்துக்கொள்வதன் முக்கியத்து வத்தை வலியுறுத்துகிறது. கவனிக்கப்படாமல் விடப்பட்டால், இருதயம் பாவத்தாலும் உலகத்தாலும் வடிவமைக்கப்படக்கூடும், ஆனால் அது கிறிஸ்துவால் உருவாக்கப்பட்டு வேதவசனத்தால் வழிநடத்தப்படும்போது, அது ஒரு புதுப்பிக்கப்பட்ட அடையாளத்தின் அடித்தளமாக அமைகிறது.

வேதாகமம் அடையாள மாற்றத்தை மரணம் மற்றும் புதிய வாழ்வு ஆகியவற்றின் அடிப்படையில் விவரிக்கிறது. விசுவாசி தனது பழைய சுபாவத்தை மேம்படுத்துவதற்கு மட்டுமல்லாமல், அதை அகற்றிவிட்டுப் புதிய சுபாவத்தை அணிந்துகொள்வதற்கும் அழைக்கப்பட்டுள்ளார். ரோமர் நிருபத்தில் பவுல் இவ்வாறு எழுதுகிறார். "நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு,

பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். "(ரோமர் 6:6)பாவம், சுய விருப்பம் மற்றும் உலகியல் ஆசைகளால் ஆளப்பட்ட அந்தப் பழைய வாழ்க்கை, நாம் யார் என்பதற்கான அடித்தளமாகத் தொடர முடியாது. இயேசுவின் மீட்பின் புண்ணியத்தின் மூலமாக அது கடவுளிடம் ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும்.

இது நமது நடத்தையை மட்டுமல்ல, நம்மை நாமே நோக்கும் விதத்தையும் மாற்றுகிறது. நாம் நம்மால் வலிமையானவர்களாகவோ, தகுதி வாய்ந்தவர்களாகவோ அல்லது பாதுகாப்பானவர்களாகவோ இருப்பதில்லை. அல்லது நாம் நம்முடைய சொந்த முயற்சியால் வலிமையானவர்களாகவோ, தகுதியானவர்களாகவோ, அல்லது பாதுகாப்பானவர்களாகவோ ஆவதில்லை. அதுபோலவே, கடந்தகாலப் பாவங்களாலோ, இயற்கையான திறமைகளாலோ, அல்லது உலகியல் சாதனைகளாலோ நாம் இறுதியாக வரையறுக்கப்படுவதும் இல்லை. நாம் கிருபையினால் மீட்கப்பட்ட பாவிகளும், கடவுளின் தாழ்மையான ஊழியர்களும், கிறிஸ்துவின் அவயவங்களுமாய் இருக்கிறோம். நாம் நம்முடைய சொந்த பலத்தினால் வெற்றிபெறுவதில்லை, மாறாக, நம் இரட்சிப்பின் தலைவரைப் பின்பற்றுவதினாலேயே வெற்றிபெறுகிறோம்.

இருப்பினும், பழைய சுபாவத்தின் மரணத்துடன் வேதாகமம் நின்றுவிடுவதில்லை. "பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்" என்று"எபேசியர் 4:22-24ல் பவுல் எழுதுகிறார். கொலோசேயர் 3:9-10 அதே அறிவுறுத்தலை வழங்குகிறது

இதுவே அடையாளத்தின் உண்மையான அடித்தளம். புதிய சுபாவமானது நாம் புதிதாக கண்டுப்பிடிக்கும் ஒன்றல்ல. மேலும், அது தனிப்பட்ட லட்சியம், கலாச்சார அங்கீகாரம் அல்லது உள்ளத்து விருப்பம் ஆகியவற்றின் அடிப்படையில் கட்டமைக்கப்படுவதும் அல்ல. இது கிறிஸ்துவில் உருவாக்கப்பட்டு, சத்தியத்தால் புதுப்பிக்கப்பட்டு, தேவனுடைய நீதியால் வடிவமைக்கப்படுகிறது. நமது அடையாளம் நாமாகவே உருவாக்கிக்கொண்டது அல்ல, அது கிறிஸ்துவை மையாமாகக் கொண்டது.

வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடி நம்முள் உற்றுநோக்கவும், "எனக்கு என்ன வேண்டும் ?" என்று கேட்கவும் உலகம் நம்மைத் தூண்டுகிறது. ஆனால்" கடவுள் என்னிடமிருந்து எதை எதிர்பார்க்கிறார் ? "என்று கேட்கும்படியே வேதாகமம் நமக்குக் கற்றுக்கொடுக்கிறது. ஆரம்பத்தில், இது சுதந்திரத்தை இழப்பது போலத் தோன்றலாம். ஆனால் பாவத்திற்கு அடிமையாயிருப்பது சுதந்திரம் அல்லவே. ஆசைகளுக்கு அடிமையாக இருப்பது நம்முடைய உண்மையான சுபாவத்தை அடைவதல்ல, கிறிஸ்துவுக்கு உரியவர்களாக இருப்பதிலேயே உண்மையான சுதந்திரம் உள்ளது. அவருக்குள் மட்டுமே, அவருடைய பலியின் புண்ணியதால், கடவுள் நம்மை எத்தகையவர்களாகப் படைத்தாரோ அத்தகையவர்களாக நம்மால் மாற முடியும்.

ஆகவே, கிறிஸ்துவில் நம் அடையாளத்தை நிலைநிறுத்துவதே இருதயத்தைக் காத்துக்கொள்வதற்கு அடிப்படையானதாகும். இவ்வுலகமே நம்மை வரையறுக்குமானால், நம் இருதயம் தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கும் ஆசைகளுக்கும் தாக்கங்களுக்கும் உட்பட்டதாகவே இருக்கும். ஆனால் கிறிஸ்துவினால் நாம் வரையறுக்கப்படும்போது, நம் இருதயம் உறுதியான ஓர் அடித்தளத்தின் மீது நிலைநிறுத்தப்படுகிறது. பழைய மனிதன் சிலுவையில் அறையப்பட்டான், புதிய மனிதன் உருவாக்கப்பட்டு வருகிறான். இதுவே விசுவாசியின் உண்மையான சுயரூபம், அதாவது, தனக்குள் உற்றுநோக்குவதன் மூலம் கண்டறியப்படும் சுயதன்மையல்ல, மாறாக, கிறிஸ்துவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டுப் புதுப்பிக்கப்பட்ட வாழ்வு - அந்தப் புதிய சிருஷ்டி.

## நடைமுறையில் இருதயத்தைக் காத்துக்கொள்ளுதல்

இருதயத்தைக் காப்பது என்பது, ஒருவரின் அக வாழ்க்கையைச் செதுக்கி வடிவமைக்கும் செயலூக்கமிக்க மற்றும் நோக்கமுள்ள ஒரு பணியாகும். இது பாவத்திற்குரிய நாட்டங்களை ஒடுக்குவது மட்டுமல்ல, மாறாக, உணர்வுகளைத்



தொடர்ந்து சீரமைப்பதும், மனவுறுதியைப் பயிற்றுவிப்பதும், கிறிஸ்துவில் நம் அடையாளத்தை நிலைநிறுத்துவதுமே ஆகும்.

இப்பணி நிறைவேற்றப்படுவதற்கான முதன்மையான வழியை வேதாகமம் வழங்குகிறது.

உலகம், மாம்சம் மற்றும் எதிரியின் அழுத்தங்களிலிருந்து நம் இருதயத்தைப் பாதுகாக்க வேண்டுமானால், அது தொடர்ந்து தேவனுடைய வார்த்தையினால் அறிவுறுத்தப்பட்டுப் பலப்படுத்தப்பட வேண்டும். தனிப்பட்ட வாழ்க்கையிலோ அல்லது சபைக்குள்ளோ என எந்தச் சூழலிலும், "வேதாகமம் என்ன சொல்கிறது?" என்று கேட்பதே இருதயத்தின் முதல் எதிர்வினையாக அமையும் வகையில் அது பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

நமது சொந்தப் பகுத்தறிவு சரியானதாகத் தோன்றினாலும், அதை மட்டுமே சார்ந்திருக்காமல் இருப்பதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். நமக்குள் புதியசிருஷ்டி வளர்ந்து வந்தாலும், நாம் இன்னும் வீழ்ச்சியடைந்த நிலையிலேயே இருக்கிறோம், வாய்ப்பு கிடைத்தால், தவறான செயல்களை நியாயப்படுத்த நம்முடைய மாம்சம் எப்போதும் தயாராகவே இருக்கிறது.

வேதாகமத்தின் வழிநடத்துதலுக்குக் கீழ் நம் எண்ணங்களையும் விருப்பங்களையும் கொண்டுவரத் தவறினால், நம் இருதயத்தைப் பாதுகாப்பற்ற நிலைக்கு ஆளாக்கிவிடுகிறவர்களாக இருப்போம்.

இருதயம் கடவுளுடைய வார்த்தையில் ஆழமாக மூழ்கும்போது, அது இயல்பாகவே ஞானத்தின் ஊற்றை நோக்கித் திரும்புகிறது. இது மிகுந்த பாதுகாப்பை அளிக்கிறது. இருப்பினும், அறிவு மட்டும் போதாது, நாம் கற்றுக்கொண்டதைச் செயல்படுத்தவும் தயாராக இருக்க வேண்டும். உலகின் மாறிவரும் நெறிமுறைகளை எதிர்கொள்ளும்போது, "இது ஏற்றுக்கொள்ளத்தக்கதா ? "என்ற மட்டும் நாம் கேட்கக்கூடாது. அந்தத் தரம் நெகிழ்வானது என்பது போல. அதற்குப் பதிலாக, "இது தேவனுடைய தரத்துடன் ஒப்பிடும்போது எப்படி இருக்கிறது ? "என்று நாம் கேட்க வேண்டும். வேறு எந்தத் தரநிலையும் போதுமானதல்ல.

இருதயம் இத்தகைய வடிவம் பெறும்போது, உலகின் ஈர்ப்பு அதன் பிடியை இழக்கத் தொடங்குகிறது. வேதாகமம் உலகின் வேற்றுமையை மட்டுமல்ல, கிறிஸ்துவில் உள்ள வாழ்வின் நிறைவையும் வெளிப்படுத்துகிறது. எவ்வளவு இன்பம், வெற்றி அல்லது வசதியானாலும், பாவத்தின் சுமையை நீக்க முடியாது. அந்தப் பணியை கிறிஸ்துவால் மட்டுமே நிறைவேற்ற முடியும். அந்த நிஜத்தில் நாம் வாழும்போது, இருதயத்தின் அன்பானது முழுமையாகக் கடவுளை நோக்கி ஈர்க்கப்படுகிறது. அவருக்குக் கீழ்ப்படிவதற்கான மன உறுதி பலப்படுகிறது, மேலும், நமது அடையாளம் நீதியில் இன்னும் உறுதியாக நிலைநிறுத்தப்படுகிறது.

## கிறிஸ்துவுக்குள் மட்டுமே இருதயத்தைக் காத்துக்கொள்ளுதல்

நமது மைய வசனமான நீதிமொழிகள் 4:23ன் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொள்ளும்போது, இருதயத்தைக் காத்துக்கொள்வதை வெறும் வெளிப்புற ஒழுக்கச் சீரமைப்பதோடு சுருக்கிவிடாமல் இருக்க நாம் கவனமாக இருக்க வேண்டும்.இந்தக் கட்டளை என்பது வாழ்க்கையின் வெளிப்புறத்தை மெருகூட்டுவதற்கோ, மதப்பற்றுள்ளவர் போலக் காட்டிக் கொள்வதற்கோ அல்லது மற்றவர்களின் அங்கீகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்கோ விடுக்கப்பட்ட அழைப்பு மட்டுமல்ல அத்தகைய விஷயங்கள் மனிதர்களைக் ஈர்க்கக்கூடும், ஆனால் அவை இருதயத்தைக் காப்பதில்லை.

வேதபாரகர்களுக்கும் பரிசேயர்களுக்கும் நம் ஆண்டவர் விடுத்த எச்சரிக்கைகள் இதைத் தெளிவாக்குகின்றன. மத்தேயு 23 ல், வெளியே நீதியுள்ளவர்களாகக் காணப்பட்டாலும் உள்ளுக்குள் அசுத்தத்தால் நிறைந்திருந்தவர்களை இயேசு கடிந்துகொண்டார். மதச் சடங்குகள் புனிதமான தோற்றத்தை உருவாக்கக்கூடும், ஆனால் அவை இருதயத்தை மாற்றாமல் அப்படியே விட்டுவிடுகிறன்றன. எனவே, இருதயத்தைக் காத்துக்கொள்வது என்பது வெறும் வெளிப்புறச் செயல் மட்டுமல்ல. அது நமது உள்ளான வாழ்க்கையை - அதாவது நமது உணர்வுகள், விருப்பம் மற்றும் அடையாளம் ஆகியவற்றை -

தேவனுக்கு முன்பாகத் தொடர்ந்து கொண்டுவருவதாகும், இதன் மூலம் அவைகள் அவரால் புதுப்பிக்கப்பட முடியும்.

ஆயினும், இங்கேயும் கூட, நம்முடைய சொந்த பலத்தால் இருதயம் பாதுகாக்கப்படுவதில்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நாம் ஊக்கத்துடனும் விழிப்புணர்வுடனும் இருக்க வேண்டும், ஆனால், இவை மட்டுமே நம்மை நீதிமான்களாக்கிவிடாது. கிறிஸ்து ஒருவரின் மீதே நம் நம்பிக்கை இருக்கவேண்டும். அவருடைய மீட்கும் பொருளின் புண்ணியத்தினால், நம்மை "பழைய மனிதனின்" பாவங்களிலிருந்து சுத்திகரிக்கிறது. மற்ற எல்லா அடித்தளங்களும் இறுதியில் வீழ்ந்துபோகின்றன. சாதனைகள் மங்கிப்போகின்றன, அங்கீகாரம் நம்மை மனிதர்களுக்கு அஞ்சும் அடிமைத்தனத்தில் ஆழ்த்துகிறது, மேலும் இன்பம், சுகபோகம் மற்றும் வெற்றி ஆகியவற்றால் ஆத்துமாவின் பாரத்தைத் தாங்கிக்கொள்ள முடிவதில்லை. ஆனால், கிறிஸ்துவில் நிலைநிறுத்தப்பட்ட இருதயம் அசைக்க முடியாத ஒரு அடித்தளத்தின் மீது இளைப்பாறுதல் அடைகிறது.

இதுவே கிறிஸ்தவரின் உண்மையான பாதுகாப்பு. கிறிஸ்துவுக்கு அருகில் இருப்பதன் மூலம் நாம் நம் இருதயத்தைக் காத்துக்கொள்கிறோம் - அதாவது, நாம் இருப்பதன் மூலம் நாம் நம் இருதயத்தைக் காத்துக்கொள்கிறோம் - அதாவது, நம் அன்பை அவருடைய ஆளுகைக்கும், நம் விருப்பத்தை நம் பரம பிதாவின் சித்தத்திற்கும், நம் அடையாளத்தை கிறிஸ்துவின் பலியின் மேன்மைக்கும் உட்படுத்துகிறோம். அவரில் மட்டுமே இருதயம் சுத்திகரிக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு, இளைப்பாறுகிறது.

ஆகவே, இருதயத்தைக் காத்துக்கொள்வது என்பது பதற்றத்துடன் நம்மை நாமே ஆராய்ந்து வாழ்வதல்ல, மாறாக, இருதயத்தை முழுமையாக அறிந்தவரும் அதைக் காக்க வல்லவருமானவர் மீது நம்பிக்கையோடு சார்ந்திருந்து வாழ்வதே ஆகும். "எல்லாவற்றிற்கும் மேலாக உன் இருதயத்தைக் காத்துக்கொள்" என்ற கட்டளை இன்றும் அவசியமானதாகவே உள்ளது. அதேவேளையில், அதற்கிணையான ஆறுதலும் நமக்கு உறுதியாக உண்டு - கிறிஸ்துவுக்குள் காக்கப்படும் இருதயம் பாவத்திலிருந்து பாதுகாக்கப்படுவதோடு, அவருடைய சாயலுக்கு எற்ப மறுரூபமாக்கப்படுகிறது.

### பொறுமையான மனத்தாழ்மை

# கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொள்ளுதல்



— Brett Blackwell

"பரியாசக்காரனைக் கடிந்துகொள்ளாதே, அவன் உன்னைப் பகைப்பான், ஞானமுள்ளவனைக் கடிந்துகொள், அவன் உன்னை நேசிப்பான்." (நீதிமொழிகள் 9:8)

இந்த நீதிமொழி பல காரணங்களுக்காக ஒரு "கடினமான கூற்று" ஆகும். முதலாவதாக, கண்டிப்பை மனப்பூர்வமாகக் கூறுவது கடினம், பெரும்பாலான சந்தர்ப்பங்களில், அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வது அதைவிடக் கடினம்.இரண்டாவதாக, அந்த நீதிமொழி தீவிர நிலைகளை மட்டுமே கையாள்கிறது. இது கண்டனத்திற்குரிய இரண்டு வெவ்வேறு தரப்பினரைச் சுட்டிக்காட்டுகிறது. ஏளனம் செய்பவர் மற்றும் ஞானி கண்டனத்தினால் இரண்டு முரண்பட்ட விளைவுகள் ஏற்படுகின்றன - அவை வெறுப்பு மற்றும் அன்பு.இருப்பினும், வேதாகமத்தில் உள்ள பல சவாலான பகுதிகளைப் போலவும், நீதிமொழிகள் புத்தகத்தில் காணப்படும் பல முரண்பாடுகளைப் போலவும், இந்தக் கடினமான கூற்று ஆண்டவரின் கோட்பாடுகளைப் பின்பற்றுபவர்களுக்குப் பல சிறப்பான பாடங்களை வழங்குகிறது. இந்த நீதிமொழியிலிருந்து பெறப்படும் புரிதல், தங்கள் குணநலன்களை மேம்படுத்திக்கொள்ள விரும்பும் எவருக்கும் சிறப்பான பயனை அளிக்கிறது. அத்துடன் ஆவிக்குரிய வளர்ச்சியில் நாட்டம் கொண்ட கிறிஸ்தவர்களுக்கு இது ஒரு சிறப்பான ஆசீர்வாதத்தையும் வழங்குகிறது.

வேதாகமத்தில் "கண்டித்தல்" என்ற சொல்லுக்குப் பல்வேறு வடிவங்கள் உள்ளன. இதே போன்ற சொற்களின் மென்மையான வடிவங்கள், எபிரெய மற்றும் கிரேக்க மூலப் பிரதிகளில் "போதனை" அல்லது வெறுமனே "பதில்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இதன் தீவிரமான வடிவங்கள் ஒழுங்குபடுத்துதல், கண்டித்தல், கடிந்துகொள்ளுதல் அல்லது தீர்ப்பு அளித்தல் என்றும் மொழிபெயர்க்கப்படுகின்றன. நீதிமொழிகள் 9:8 உள்ள நமது வேதப்பகுதியைப் பொறுத்தவரை, " reproof" " (கடிந்துரைத்தல் / திருத்துதல்) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரெயச் சொல் (Strong's H3198) சரியாக இருத்தல்" என்ற பொருளைக் கொண்டுள்ளது. இச்சொல் மென்மையானதாகவோ அல்லது மிதமானதாகவோ தோன்றினாலும், அது உணர்த்தும் ஆற்றல் மற்றும் விளைவு ஆகியவற்றைப் பொறுத்தவரை எவ்வித கேள்விக்கு இடமில்லை. "வழக்காடுவோம் வாருங்கள் [H3198] என்று கர்த்தர் சொல்லுகிறார், உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும், அவைகள் இரத்தாம்பரச்சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும். (ஏசாயா 1:18) என்று ஏசாயா மூலமாக யெகோவா தேவன் கூறுகிறார்.

பாவத்திற்கும் பரிபூரணத்தின் தரத்திற்கும் இடையிலான முரண்பாட்டிலேயே இப்பகுதியின் வல்லமை அடங்கியுள்ளது, மேலும், இது தனது அடையாளங்களினால், களங்கமற்ற தேவ ஆட்டுக்குட்டியை அழகாக முன்னறிவிக்கிறது. ஒன்றாகச் சரியான நிலையில் இருப்பது " என்பது யெகோவா தேவனின் பார்வையில் நீதிமான் நிலையை அடைவதைக் குறிக்கிறது, ஆயினும், பழைய ஏற்பாடு முழுவதும் "முடிவு செய்தல்" நியமித்தால், "முறையிடுதல், "சிட்சித்தல்", "கண்டித்தல், திருத்துதல்" போன்ற பல்வேறு அர்த்தங்களில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே வார்த்தைதான் இதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

வேதாகமத்தின்படி, கடிந்துகொள்ளுதல் என்பது பரந்த பயன்பாட்டைக் கொண்டிருப்பதால், உயர் தரத்திலான திருத்தத்தைக் குறிக்கும் ஒரு பொதுவான சொல்லாகப் பயன்படுத்துவது பொருத்தமானதாகத் தோன்றுகிறது. கடிந்துகொள்ளுதலின் பிரதான நோக்கம், கடவுளுடனேயே ஒப்புரவாவது அல்லது பாவநிவாரணம் அடைவதே ஆகும். ஒருவரைக் கடிந்துகொள்ள முயற்சிப்பதன் விளைவுகளை நீதிமொழிகள் 9:8 தெளிவாக எடுத்துரைக்கிறது. பரிகாசம் செய்பவனைக் கடிந்துகொள்ள வேண்டாம் என்றும், அதற்குப் பதிலாக ஞானமுள்ளவனைக் கடிந்துகொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகிறது. கண்டிப்பதன் விளைவு, கண்டிக்கப்படுபவரின் தன்மையைப் பொறுத்து, கண்டிப்பவர் மீது வெறுப்பு அல்லது அன்பு வெளிப்படுகிறது.

### பரியாசம் செய்பவனைக் கண்டித்தல்

ஏளனம் செய்பவருக்குக் கண்டனம் தெரிவிப்பதன் மூலம் உதவ முயல்வது கண்ணியமான அல்லது கனிவான செயல் என்று ஒருவர் நினைக்கலாம். ஆனால் அத்தகையவர் சந்தேக மனப்பான்மை கொண்டவர், ஞானத்தைத் தேடினாலும், தனது அகங்கார மற்றும் பிடிவாத குணம் காரணமாக அதை அவரால் கண்டடைய முடிவதில்லை. (நீதிமொழிகள் 14:6, 21:24, 22:10)பரிகாசம் செய்பவர்கள் திருத்தத்திற்குச் சாதகமாகப் பதிலளிக்க மாட்டார்கள் என்று வேதாகமம் நமக்குத் திரும்பத் திரும்பச் சொல்கிறது. "புத்திமதியைத் தள்ளிவிடுகிறவன் தன்



ஆத்துமாவை வெறுக்கிறான்." என்று நீதிமொழிகள் 15:32 கூறுகிறது. நீதிமொழிகள் 1 -ல் கடினமான மனதுடையவர்கள் கண்டிப்புரையைச் செவிமடுத்துக் கர்த்தருக்குப் பயப்படும்படி ஞானத்தின் குரல் அழைக்கிறது, ஆனால் அவர்களோ அத்தகைய அறிவுரையையும் ஞானத்தையும் புறக்கணித்து, கண்டிப்புரையை நிராகரிக்கிறார்கள். அவர்களுக்குப் பயங்கரமான காரியம் நேரிடும்போது, கர்த்தர் அவர்களுக்குப் பதிலளிக்கமாட்டார். "ஆகையால் அவர்கள் தங்கள் வழியின் பலனைப் புசிப்பார்கள், தங்கள் யோசனைகளினால் திருப்தியடைவர்கள்.(நீதிமொழிகள் 1:23-31)இது பிடிவாதத்தையும் தாண்டிய ஒன்று - இது இருதயத்தின் நலனைக் குறித்த திட்டமிட்ட அலட்சியம், மேலும் அழிவை நோக்கிய ஒரு பாதையுமாகும்.

நமது வசனத்திற்கு முந்தைய வசனமான நீதிமொழிகள் 9:7 ல் "பரியாசம் பண்ணுகிறவனை" திருத்த முயல்பவர் அவமானத்தை அடைவார் என்றும், "துன்மார்க்கனை" கடிந்துகொள்ள முயல்பவர் களங்கத்தை அடைவார் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

திருத்தத்தையும் கண்டிப்பையும் வழங்குபவருக்கே இதனால் பாதிப்பு ஏற்படுகிறது. மேலும், ஏளனம் செய்பவர்கள் மற்றும் தீயவர்களுடன் சகவாசம் கொள்வதும் கூட, மூடர்களுக்குத் தோழனாக இருப்பதற்குச் சமமானதே, இதன் விளைவு தீங்காகவே அமையும். (நீதிமொழிகள் 13:20)

ஏளனம் செய்பவர்களைக் குறித்த வேதாகமத்தின் பிற பகுதிகள், (தற்போதைய சூழலில்) அவர்களின் இருதயத்தில் வேரூன்றியுள்ள இந்த மோசமான மனப்பான்மையிலிருந்து அவர்கள் மீண்டு வருவதற்கான எந்த அறிகுறியையும் காட்டுவதில்லை, எனவே அவர்களைக் கண்டிப்பதோ அல்லது திருத்த முயல்வதோ பயனற்றது மட்டுமல்ல, அது ஒரு கண்ணியாகவும் அமையக்கூடும் என்பது



உறுதியாகிறது. (ஏசாயா29:20-21)

எனவே, ஒருவரது இருதயத்தைக் காத்துக்கொள்ளும் பொருட்டு, ஏளனம் செய்பவரைக் கடிந்துகொள்ளும் முயற்சியில் ஈடுபடக்கூடாது. அத்தகையவர்களைக் கடிந்துகொள்வது, அதிகபட்சமாகப் பார்த்தால், நேரத்தையும் முயற்சியையும் வீணடிக்கும் செயலேயாகும். இதன் விளைவுகள் பயனற்றதாக இருப்பது மட்டுமல்லாமல், கண்டிக்க முற்படுபவருக்குத் தேவையற்ற பழிச்சொல், தீங்கு மற்றும் வெறுப்பு ஆகியவற்றையும் - அதாவது மிகுந்த பாதிப்பையும் இவை ஏற்படுத்துகின்றன.

## ஞானமுள்ள மனுஷனைத் திருத்துதல்

இதற்கு நேர்மாறாக, ஒரு ஞானியின் கண்டிப்புக்குச் செவிசாய்ப்பதன் விளைவு அன்பாகும் - இது, பெறப்பட்ட திருத்தத்தின் மீது காட்டப்படும் மரியாதையின் ஒரு வலுவான வெளிப்பாடாகும்.

இந்த அன்பு, அந்தப் பாடத்தின் மீதான உண்மையான பாராட்டுணர்வை வெளிப்படுத்துகிறது. அத்தகைய நேர்மையான மற்றும் உண்மையான எதிர்வினையை வெளிப்படுத்தும் வகையில் கண்டனத்தைப் பெற்றுக்கொள்வது, சந்தேகத்திற்கு இடமின்றி அந்த ஞானிக்குக் கிடைத்த ஒரு ஆசீர்வாதமாகும்.

இந்த முடிவு பரியாசம் செய்பவரின் கண்ணிக்கு நேர்மாறானது, இதில் காயம், தழும்புகள் அல்லது தீங்கு ஏதுமில்லை, நன்மை மட்டுமே உள்ளது. இச்சூழ்நிலையில், கண்டனம் அல்லது அறிவுரை கூறுவதனால் கிடைக்கும் பலனை அதனை வழங்குபவர் மற்றும் பெறுபவர் ஆகிய இருவருமே உணர்கிறார்கள்.

திருத்தத்தையோ அல்லது



கண்டிப்பையோகூட மிகவும் சாதகமாக ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையைக் கொண்டிருப்பது அரிதான ஒன்றாகத் தோன்றுகிறது. குணநலன் மேம்பாட்டின் மூலம் இத்தகைய சிறந்த நிலை எவ்வாறு நிஜமாகலாம் என்பதைப் புரிந்துகொள்ள வேதாகமம் உதவுகிறது. திருத்தத்தை நாடுபவர் கடவுளுடன் சரியான உறவைக் கொண்டிருக்க விரும்புகிறார். தான் முழுமையற்றவன் என்பதையும் குறைபாடுடையவன் என்பதையும் உணர்ந்துகொள்ளும் ஒரு ஞானி, தன்னை (குறைபாடுகளிலிருந்து)மேம்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்பை உயர்வாகக் கருதுகிறார். சாலொமோன், "ஞானத்தையும் உபதேசத்தையும் அறிந்துகொள்ள" வேண்டும் என்ற தனது விருப்பத்தை வெளிப்படுத்துவதன் மூலம் நீதிமொழிகள் புத்தகத்தை தொடங்குகிறார். "இவைகளால் ஞானத்தையும் போதகத்தையும் அறிந்து புத்திமதிகளை உணர்ந்து,"(நீதிமொழிகள் 1:2) "விவேகம், நீதி, நியாயம், நிதானம் என்பவைகளைப்பற்றிய உபதேசத்தை அடையலாம்."(நீதிமொழிகள் 1:3) ஞானி தனக்குள்ள பலவீனங்களையும் குணநலன் சார்ந்த குறைபாடுகளையும் உணர்ந்து, தன் நடத்தையைச் சீரமைத்துக்கொள்ள முயல்கிறான். அவன் "இவைகளைக் கேட்டு, அறிவில் விருத்தி அடைய" விரும்புகிறான்.(நீதிமொழிகள் 1:5)

மூடர்கள் ஞானத்தையும் போதனையையும் அலட்சியம் செய்கிறார்கள், ஆனால் ஞானியோ, கர்த்தருக்குப் பயப்படுவதே அறிவின் ஆரம்பம் என்பதை உணர்ந்துகொள்கிறான். (நீதிமொழிகள் 1:7)ஞானம் கர்த்தரிடமிருந்தே வருகிறது என்பதை அவர் புரிந்துகொள்கிறார். (நீதிமொழிகள் 2:6, 9:10,, சங்கீதம் 111:10)

பரலோகத் தந்தையே ஞானத்தின் ஊற்று என்பதை உணர்வதற்கும், அவர் மீதான பயபக்தியே நற்பண்பு வளர்ச்சியின் அடிப்படை என்பதை ஏற்றுக்கொள்வதற்கும் மனத்தாழ்மை தேவை. "கர்த்தருக்குப் பயப்படுதல் ஞானத்தைப் போதிக்கும், மேன்மைக்கு முன்னானது தாழ்மை" என்று நீதிமொழிகள் 15:33 கூறுகிறது. நீதிமொழிகள் புத்தகத்தில் உள்ள ஞானத்தின் மிகச்சிறந்த பாடங்களில் ஒன்றான "நல்ல குணநலன்களை வளர்த்துக்கொள்வதற்கு" தேவைப்படுவது ஒரு தாழ்மையான இருதயமே. திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற்குத் தாழ்மை அவசியம்.

ஞானியின் பண்புகளில் ஒன்றான "தாழ்மை"யை ஆராய்வது, ஆவிக்குரிய வளர்ச்சி குறித்த ஒரு முக்கிய பாடத்தை நமக்கு அளிக்கிறது. குழந்தைகள் பெரும்பாலும் திருத்தங்களைச் சிறப்பாக ஏற்றுக்கொள்கிறார்கள், அவர்களிடம் இன்னும் அகங்காரம் வளரவில்லை என்பதும், அவர்களின் இருதயங்களும் மனங்களும் எளிதில் பயிற்சிப் பெறக்கூடிய நிலையில் இருப்பதே இதற்கான ஒரு காரணமாகும். தாங்கள் சிறு குழந்தைகளைப் போல, குறிப்பாகத் தாழ்மையுள்ளவர்களாக மாறாவிட்டால், பரலோக இராஜ்யத்தில் நுழையத் தகுதி பெறமாட்டார்கள் என்று நம் ஆண்டவர் தம் சீஷர்களுக்குக் கற்பித்தார். (மத்தேயு 18:3-4)

ஒழுக்கமுள்ள ஒரு குழந்தையை விட, பெற்றோரின் பயிற்சிக்குச் சிறப்பாகப்

பதிலளிக்கக்கூடியவர் வேறு யார் இருக்க முடியும் ?"என் மகனே, உன் தகப்பன் புத்தியைக் கேள், உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே. அவைகள் உன் சிரசுக்கு அலங்காரமான முடியும், உன் கழுத்துக்குச் சரப்பணியுமாயிருக்கும். "(நீதிமொழிகள் 1:8-9)

தவறுகளைச் சுட்டிக்காட்டும்போதோ அல்லது திருத்தப்படும்போதோ ஏற்படக்கூடிய தர்மசங்கடம் அல்லது அவமானம் போன்றவற்றைவிட, அந்தத் திருத்தத்தையே ஒரு விவேகி அதிகம் மதிக்கிறார். திருத்தம் என்பது ஆரம்பத்தில் அகங்காரத்தை தியாகம் செய்வதாகவும், பணிவை ஏற்படுத்தும் ஒரு அடியாகவும் தோன்றலாம், ஆனால் உண்மையான உள்ளம் அதனை நீதியின் ஊற்றாகிய கடவுளிடமிருந்து வரும் ஒரு வாய்ப்பாகவே உணர்ந்துகொள்கிறது. குறிப்பிடப்பட்டுள்ளபடி, நீதிமொழிகள் 1:22 முதல் 33 வரையிலான வசனங்களில் ஞானம் விடுக்கின்ற கடுமையான கண்டனங்கள், செவிசாய்க்காத அப்பாவிகளை நோக்கிக் குரல் கொடுக்கின்றன, ஆனால் ஞானமுள்ளவரோ இவ்வார்த்தைகளில் ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட வாக்குறுதியைக் காண்கிறார். "என் கடிந்து கொள்ளுதலுக்குத் திரும்புங்கள், இதோ என் ஆவியை உங்களுக்கு அருளுவேன், என் வார்த்தைகளை உங்களுக்குத் தெரிவிப்பேன்." (நீதிமொழிகள் 1:23) "ஜீவனுக்கேதுவான கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொள்ளும் காது ஞானிகளிடத்தே தங்கும்." (நீதிமொழிகள் 15:31) திருத்தத்தின் மூலமாகவே ஞானம் பெறப்படுகிறது என்பதை நமக்கு இவைகள் உணர்த்துகிறது. இது ஒருவர் முதலில் ஞானியாகி, அதன்பிறகு திருந்துவதற்குக் கற்றுக்கொள்வது என்பதல்ல. ஞானத்தின் வளர்ச்சி என்பது ஒரு சுறு சுறுப்பான செயல் முறையாகும், இது பணிவு மற்றும் ஆண்டவர் மீதான பயம் ஆகியவற்றில் தொடங்கி, அவற்றில் வேரூன்றி நிலைத்திருக்கிறது. மற்றொருவரின் அறிவுரையைக் கேட்பதற்கு பணிவான இருதயம் ஒரு முன்நிபந்தனையாகும், போதனை, திருத்தம் மற்றும் கண்டிப்பு ஆகியவற்றின் மூலம் கற்பிக்கப்படும் பாடங்களை ஏற்று மதிப்பிடுவதைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை.

ஒருவருக்குக் கண்டனம் அல்லது அறிவுரை கூறும்போது, அதை வெளிப்படுத்தும் விதம் அது ஏற்றுக்கொள்ளப்படும் விதத்தைப் பாதிக்கலாம். உதாரணமாக, ஒருவரைத் திருத்தும் செயல் கடுமையான முறையிலோ அல்லது மரியாதையற்ற வகையிலோ மேற்கொள்ளப்பட்டால், அதைப் பெறுபவரின் உணர்வு ரீதியான எதிர்வினை தீவிரமடைந்து, அவர்கள் அதைக் கேட்க மறுக்கக்கூடும். சூழ்நிலையைச் சரியாகக் கவனித்து அதை அறியும் தகுதி இல்லாத ஒருவர் அல்லது சொந்த தவறான கணிப்புகளால் தடையுற்றவரோ ஒருவரைக் கடிந்துகொண்டால், அந்தக் கடிந்துரை நல்ல முறையில் ஏற்றுக்கொள்ளப்படுமா ? (மத்தேயு7:3-5)

## ஐந்து உதாரணங்கள்

வேதாகமத்தில் கண்டனம் அல்லது திருத்தம் எவ்வாறு அளிக்கப்படுகிறது மற்றும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்பது குறித்த ஒரு ஆய்வு, இக்கருத்துகளைப் புரிந்துகொள்ள நமக்கு உதவுகிறது. காலவரிசைப்படி அமைந்துள்ள பின்வரும் ஐந்து உதாரணங்களைக் கவனியுங்கள்.

(1)**சர்வவல்லமை குறித்த கடவுளின் பதிலளிக்க முடியாத கேள்விகள்** யோபுவை மனத்தாழ்மைக்குள்ளாக்கியது. யோபுவைக் குறித்து தேவன் கூறிய கடிந்துகொள்ளுதல் நீண்டதொரு கேள்விகள் மற்றும் ஒப்பீடுகளின் வரிசையாக அமைந்திருந்தது, இவற்றில் ஒவ்வொன்றிற்கும் இறுதியாக யோபுவோ அல்லது அவரது நண்பர்களோ அல்ல, மாறாக தேவன் மட்டுமே பதிலளிக்கவோ அல்லது அவற்றுக்கான விளக்கத்தை அளிக்கவோ முடியும். யோபு தனது சுயத்தை சார்ந்த மனப்பான்மையை உணர்ந்தபோது, அவரது எதிர்வினை வெளிப்படையான ஒப்புதலும் மனந்திரும்புதலுமாக இருந்தது. (யோபு42:1-6) யோபுவின் மூன்று நண்பர்களின் அறிவுரைகள் அவரது சூழ்நிலையின் எதார்த்தத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை, அதேபோல, அவர்களின் கண்டனங்களும் தேவனுடைய கொள்கைகளின் அடிப்படையில் அமைந்திருக்கவில்லை. எனவே அவர்களது கண்டனத்தை யோபுவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. (யோபு32:3)

(2)**நாத்தான் கையாண்ட புத்திசாலித்தனமான அதே சமயம் சொல்லப்பட்ட கண்ணியமான உவமை, தாவீது தானே விடுத்த தீர்ப்பின் மூலம் அவரே பணிவு கொள்ளும் நிலையை ஏற்படுத்தியது.** தாவீது தனது சொந்தக் குற்றத்தை உணராத நிலையில் இருந்ததால், நாத்தான் ஒரு கற்பனையான கதையின் மூலம் தாவீதின் நீதியுள்ள உணர்வைத் தூண்டும் உத்தியை அவர் கையாண்டார். அந்த காரியம் தாவீதின் சொந்தப் பாவத்திற்கு ஒரு உருவகமாக அமைந்தது. அந்த உருவகக் கதையில் வரும் எதிர்மறைக் கதாபத்திரமான "அந்த மனுஷனுக்கு" எதிராகத் தாவீது தீர்ப்பளித்த பிறகு, அவரே அந்த மனிதன் என்பதை நாத்தான் வெளிப்படுத்தினார். இவ்வாறு தனக்குத்தானே

தீர்ப்பளித்துக்கொண்ட அந்த நிகழ்வு தாவீதை மனத்தாழ்மைக்குள்ளாக்கியது. (சங்கீதம் 51)

(3)**பரிசேயர்களின் இருதயங்கள், அவர்கள் அறிக்கையிட்ட தீர்ப்புகளின் மூலமாகவே வெளிப்படுத்தப்பட்டன.** பரிசேயர்கள் பல சந்தர்ப்பங்களில், நேரடியாகவும் உவமைகள் மூலமாகவும் ஆண்டவர் இயேசுவால் கடிந்துகொள்ளப்பட்டனர், "தீய திராட்சைத் தோட்டக்காரர்கள் குறித்த உவமையைக் கேட்ட பிறகு, பரிசேயர்கள் அந்த உவமையில் இடம்பெற்ற எதிர்மறைக் கதாபாத்தரங்களைக் கண்டித்தனர். தீய திராட்சைத் தோட்டக்காரர்களின் உவமையைக் கேட்ட பிறகு, பரிசேயர்கள் அந்த உவமையில் வரும் எதிர்மறையான கதாபாத்திரங்களைக் கண்டனம் செய்தனர். (மத்தேயு 21:41) அந்த உவமை தங்களைப் பற்றியது என்பதை உணர்ந்தபோது, அவர்கள் இயேசுவைப் பிடிக்க முயன்றனர், இதன் மூலம் தங்கள் கடினமான இருதயங்களின் பிடிவாதமான நிலையை அவர்கள் வெளிப்படுத்தினர்.

(4) **இயேசுவின் கனிவான ஊக்கம் பேதுருவின் துயரத்தில் ஒரு ஆறுதலை ஏற்படுத்தியது.**

பேதுரு ஆண்டவரை மறுதலித்ததற்காகவும் (அதற்குக் காரணமான அதிகப்படியான தன்னம்பிக்கைக்காகவும்), மனிதராக இருந்த இயேசுவாலும், பின்னர் உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசுவாலும் அவர் முன்கூட்டியே கடிந்துகொள்ளப்பட்டார். அவருக்கு அளிக்கப்பட்ட அந்தத் திருத்தம் பேதுருவின் வளர்ச்சியையும் சீரமைப்பையும் நோக்கமாகக் கொண்டிருந்தது, அந்தக் கடிந்துரை ஆண்டவரின் இரக்கத்தின் ஒரு கனிவான வெளிப்பாடாக இருந்தது. (மத்தேயு 18ம் அதிகாரம் காண்க) யோவான் பதிவு செய்துள்ளபடி, அன்பான முறையில் அளிக்கப்பட்ட ஆண்டவரின் ஊக்கத்தை பேதுரு தாழ்மையுடன் ஏற்றுக்கொண்டார். (அதிகாரம் 21)

(5)பவுலின் எழுத்துக்களில் காணப்படும் கடிந்துகொள்ளும் முறைகள். எருசலேம் சபையின் தலைவராகப் பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்த அப்போஸ்தலன் பேதுரு, யூத வழக்கங்கள் தொடர்பான தனது பாசாங்குத்தனத்திற்காகப் பவுலால் கடிந்துகொள்ளப்பட்டார். (கலாத்தியர் 2:11-14) ஆயினும், திருச்சபையில் ஒருவருக்கொருவர் வகித்த முக்கியப் பங்குகளை அவர்கள் இருவரும் மதித்தார்கள். பின்னர் பவுல், தனிமனிதனுக்காகவும் மந்தையின் நன்மைக்காகவும், கடிந்துகொள்ளுதலை எவ்வாறு கவனமாகக் கொடுப்பது மற்றும் பயன்படுத்துவது என்பதைத் தீமோத்தேயுவுக்குக் காட்டுகிறார். (1தீமோத்தேயு 5:1-2, 20)



கடிந்துகொள்ளுதல் குறித்த வேதப்பூர்வமான கோட்பாடுகள், தாழ்மையையும் கர்த்தருக்குப் பயப்படுதலையும் கற்றுக்கொள்வது ஆகிய அடிப்படைகளைச் சார்ந்தவை. இதே அடிப்படையில், திருச்சபை உறுப்பினர்கள் ஒருவரையொருவர் எவ்வாறு நோக்க வேண்டும் என்பது குறித்து பேதுரு இந்தச் சிறந்த ஆலோசனையை வழங்குகிறார்." அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள், பெருமையுள்ளவர்களக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். (1பேதுரு 5:5)

ஒழுங்குபடுத்துதல் அல்லது சிட்சை என்பது அந்த நேரத்தில் பெரும்பாலும் வேதனையானதாக இருந்தாலும், ஆவிக்குரிய முதிர்ச்சிக்காக அதை எதிர்க்காமல் ஏற்றுக்கொள்ள வேண்டும். எபிரெயர் 12:3-15 ல் உள்ள பாடங்களைச் சிந்தித்துப் பாருங்கள். "அவர்கள் தங்களுக்கு நலமென்றுதோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள், இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார். எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும் , ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும். (எபிரெயர் 12:10-11) "தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறதுபோல கர்த்தரும் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார்." (நீதிமொழிகள் 3:12)

### போலியான இரக்கத்தின் கொடூரம்

# இருதயத்தை காப்பதற்கான ஞானம்



— Todd Alexander

"நீதிமான் தன் மிருகஜீவனைக் காப்பாற்றுகிறான், துன்மார்க்கருடைய இரக்கம் கொடுமையே.." (நீதிமொழிகள் 12:10)

"இருதயத்தைக் காப்பதற்கான ஞானம்" என்ற இந்தக் கட்டுரையின் மையப்பொருள், ஆழ்ந்த ஆவிக்குரிய பகுத்தறிவையும், நமது வாழ்க்கைப் பாதையை வழிநடத்தும் நோக்கங்கள் மற்றும் கோட்பாடுகள் குறித்த தீவிரமான சுயபரிசோதனையையும் மேற்கொள்ளுமாறு நம்மை அழைக்கிறது.

நீதிமொழிகள் 12:10 நமக்கு ஒரு முக்கியமான மற்றும் சவாலான முரண்பாட்டை முன்வைக்கிறது. இதன் முதல் பகுதியை நாம் எளிதாகப் புரிந்துகொள்ளலாம். நீதிமான் ஒருவன், தன் படைத்தவரின் குணாதிசயத்தை வெளிப்படுத்தும் விதமாக, தன் பராமரிப்பில் உள்ள விலங்குகளிடமும் நீதியுடனும் கருணையுடனும் நடந்துகொள்கிறான். ஆனால், இதன் இரண்டாவது பகுதி ஒருவித உறுத்தலை ஏற்படுத்துகிறது - "மென்மையான இரக்கங்கள் எவ்வாறு "கொடுமையானவையாக" இருக்க முடியும்?

இந்தத் திருமுறை தெய்வீக ஞானத்தை அளிக்கிறது, நம் இருதயங்களைப் பாதுகாப்பதற்கு அவசியமாகத் திகழ்கிறது, மேலும் ஒரு முக்கிய எச்சரிக்கையாகவும் அமைகிறது. இரக்கமானது கடவுளின் நீதியின் கோட்பாடுகளால் வழிநடத்தப்பட வேண்டும் என்பதை இது நமக்குக் கற்பிக்கிறது. கருணைமிக்கதாகத் தோன்றும் ஒன்று, அவருடைய கொள்கைகளிலிருந்து பிரித்துப் பார்க்கப்படும்போது, முற்றிலும் மாறுபட்ட ஒன்றாக மாறிவிடக்கூடிய தருணங்களும் உண்டு. இரக்கம் பாவத்தை மன்னிக்கும்போதோ, தேவையான திருத்தத்தைத் தவிர்க்கும்போதோ, அல்லது மாம்சத்தை சத்தியத்திலிருந்து மறைக்கும்போதோ, அது சிறிதளவும் இரக்கமுள்ளதாக இருக்காது. மாறாக, அது ஒரு போலியாக மாறக்கூடும் - அதாவது இரக்கமுள்ளதாகத் தோன்றும் மாம்சத்தின் இச்சையைத் திருப்திப்படுத்தும் ஒரு செயலாக, ஆனால் இறுதியில் அது ஆவிக்குரிய தீங்குக்கு வழிவகுக்கும்.



இது "கொடுமையானது", ஏனெனில், பெரும்பாலும் காயத்தை உண்டாக்கும் அதே பாவத்தையே இது பாதுகாக்கிறது. நித்தியமான ஆவிக்குரிய சுகத்தை விட, தற்காலிகமான மற்றும் மாம்சத்திற்குரிய சுகத்திற்கே இது முன்னுரிமை அளிக்கிறது.

வீழ்ச்சியடைந்த இந்த உலகத்திலும், வீழ்ச்சியடைந்த நம் சொந்த இயல்புகளுடனும் இருக்கும் வேளையில், மனிதநேயம் சார்ந்த இந்தத் தவறான "இரக்கம்" நம்மிடம் இடைவிடாமல் கிசுகிசுத்துக்கொண்டே இருக்கிறது. இது மிகக் குறைந்த எதிர்ப்பைக் கொண்ட ஒரு பாதை. "நீதிமானாக" இருப்பதைவிட "நல்லவராக"த் தெரிய வேண்டும் என்ற விருப்பமே இது.

ஒரு போலியான சமாதானத்தின் பெயரால், சங்கடமான மோதல்களைத் தவிர்க்கும் பாதையும் இதுவே. ஆனால், கடவுளுடைய வார்த்தை நம்மை ஒரு உயர்ந்த தரநிலைக்கு அழைக்கிறது. நம் இருதயங்களைப் பாதுகாத்துக்கொள்ள, கடவுளின் குணப்படுத்தும் மற்றும் புதுப்பிக்கும் இரக்கத்திற்கும், தீயவர்களின் கொடூரமான மற்றும் வஞ்சகமான "மென்மையான இரக்கங்களுக்கும்" இடையிலான வேறுபாட்டை நாம் அறிந்துகொள்ளக் கற்றுக்கொள்ள வேண்டும் முதலாவது வாழ்வுக்கும் மீட்புக்கும் வழிவகுக்கிறது, இரண்டாவது பாவத்திற்கு இடமளிக்கும்போது தீங்கிற்கே வழிவகுக்கிறது.

## கடவுளின் இரக்கத்தை நாம் எவ்வாறு பெறுகிறோம்

போலியானதை அடையாளம் காண முதலில் நாம் உண்மையானதை நன்கு அறிந்திருக்க வேண்டும். உண்மையான, தெய்வீக இரக்கத்தின் தன்மை என்ன, அதை நாம் எவ்வாறு பெறுகிறோம்? வேதவசனங்கள் இதைத் தெளிவாகக் கூறுகின்றன. கடவுளின் இரக்கத்தை நாம் நம்முடைய செயல்களால் சம்பாதிப்பதில்லை, மாறாக, நாம்

அதற்குத் தகுதியற்றவர்கள் என்பதை உணர்ந்து தாழ்மையுடன் அதற்காக மன்றாடுகிறோம்.

லூக்கா 18 ல் காணப்படும் பரிசேயன் மற்றும் ஆயக்காரன் குறித்த உவமையின் மூலம், நம் ஆண்டவர் தமது அளவற்ற ஞானத்தோடு நமக்கு ஒரு மிகச் சிறந்த உதாரணத்தை அளித்துள்ளார். ஆலயத்தில் நின்று கொண்டிருந்த அந்தப் பரிசேயன்... "தேவனே, நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். " (லூக்கா 18:11) அவனது ஜெபம் அவனது சொந்த நீதியின் பட்டியலாகவே இருந்தது. அவனுக்கு இரக்கத்தின் தேவை எதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை, எனவே, அவனால் அதைப் பெறவும் முடியவில்லை.

இதை அந்த ஆயக்காரனுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். "ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்க ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு - தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்



என்றான்." (லூக்கா 18:13)இது பெருமையால் இறுகிப்போன இருதயமாக இல்லாமல், சத்தியத்தினால் உடைந்த ஒரு இருதயத்தின் கதறல். கடவுளின் இரக்கத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரே நிலை இதுதான்."அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன், ஏனெனில் தன்னை உயர்த்துகிற வனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார். " (லூக்கா18:14)

இதுவே நமது முழு கிறிஸ்தவ வாழ்விற்கான நுழைவாயிலாகும். பாவத்தால் பாதிக்கப்பட்ட நமது நிலையை உணர்ந்து, மீட்புவிலையின் மூலம் சாத்தியமான கடவுளின் தகுதியற்ற கிருபையின் மீது நம்மை முழுமையாகச் சார்ந்திருப்பதன் மூலம் நாம் இதைத் தொடங்குகிறோம். நாங்கள் எங்கள் "நீதியின் கிரியைகளை" அல்ல, மாறாக நொறுங்கிய மற்றும் மனஸ்தாபமுள்ள எங்கள் இருதயங்களையே கொண்டு வருகிறோம்.

## தேவனுடைய இரக்கத்தின் புதுப்பிக்கும் வல்லமை

இங்கேயே நாம் மிக முக்கியமான வேறுபாட்டைக் காண்கிறோம். உலகம் "இரக்கத்தை" அளிக்கும்போது, அது பெரும்பாலும் பாவத்திற்கான ஒரு சாக்காகவே (நியாயம் கற்பிக்கிறதாகவே) அமைகிறது. ஆனால் கடவுள் இரக்கத்தை அளிக்கும்போது, அது பாவத்திற்கான முறிவு அல்லது மாற்று மருந்தாகத் திகழ்கிறது. கடவுளின் இரக்கம் என்பது, நம்மை வீழ்ந்துபோன நிலையிலேயே விட்டுவிடும் செயலற்ற மன்னிப்பு அல்ல, அது ஒரு செயல்மிக்க, வல்லமைமிக்க, படைப்பாற்றல் கொண்ட வல்லமையாகும்.

அப்போஸ்தலனாகிய பேதுரு இந்த சத்தியத்தை அறிவிக்கிறார். "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக, அவர் இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்." (1பேதுரு 1:3,4)கடவுளின் இரக்கமே நமது மறுபிறப்பின் உந்துசக்தியாகும். அது நம்மைப் ஜெநிப்பிக்கிறது, நம்மை ஒரு புதிய சிருஷ்டியாக மாற்றுகிறது, மேலும் நமக்கு ஒரு "ஜீவனுள்ள நம்பிக்கையை" அளிக்கிறது."

அப்போஸ்தலனாகிய பவுல் தீத்துவுக்கு எழுதிய நிருபத்தில் இந்த நோக்கத்தை உறுதிப்படுத்துகிறார்."நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்." (தீத்து3:5)

"மறுஜென்ம முழுக்கினாலும் " மற்றும் "பரிசுத்த ஆவியின் புதுப்பித்தல்" ஆகிய சொற்றொடர்களைக் கவனியுங்கள். கடவுளின் இரக்கம் ஒரு சுத்திகரிக்கும் காரணியாகும். இதன் நோக்கம் நம்மைப் பாவத்தில் சுகமாக இருக்கச் செய்வதல்ல, மாறாக நம்மைப் பாவத்திலிருந்து சுத்திகரிப்பதே ஆகும். இதுவே நம்முடைய பரிசுத்தமாக்குதலையும், கிறிஸ்துவைப் போன்ற தன்மையில் நாம் வளருவதையும் ஊக்குவிக்கும் வல்லமையாகும்.

திரும்ப நீதிக்குக் கொண்டுவருவதே உண்மையான இரக்கத்தின் நோக்கமாகும் - இதற்குக் குறையாக இருக்கும் அல்லது இதற்கு

முரணாகச் செயல்படும் எந்தவொரு "இரக்கமும்" போலியானதாக இருக்கலாம்.

**கடவுளின் கட்டளைக்கு அப்பாற்பட்ட இரக்கம்.**

"தீயோரின் கனிவான இரக்கங்களை" இப்போது நாம் புரிந்துகொள்ள முடியும். அவை "கொடூரமானவை" ஏனெனில், கடவுளின் இரக்கம் எதை அழிப்பதற்காக உருவாக்கப்பட்டதோ - அதாவது பாவத்தை - அவையே அவற்றைப் பேணி வளர்க்கின்றன. இந்தத் தவறான இரக்கம் மாம்சத்திற்கு மென்மையானதாகத் தோன்றினாலும், அது ஆவிக்கு எதிரியாக இருக்கிறது. நம்மைத் தவறான பாதையில் உறுதிப்படுத்துவது எதிரியின் முத்தமே, மாறாக, நம்மை மீண்டும் கடவுளிடம் திருப்புவது நண்பன் ஏற்படுத்தும் காயமே. இந்தக் கொடூரமான கருணை செயல்படுவதற்கான தீவிரமான உதாரணங்களை வேதாகமம் வழங்குகின்றன.

## "ஒரு தந்தையின் கொடூரமான கருணை" : ஏலி

இஸ்ரயேலின் பிரதான ஆசாரியராகிய ஏலியின் சம்பவத்தைவிட மனதை உருக்கும்சம்பவம் வேறெதுவும் இல்லை என்று சொல்லலாம். "ஏலியின் குமாரர் பேலியாளின் மக்களாயிருந்தார்கள், அவர்கள் கர்த்தரை அறியவில்லை..(I சாமுயேல் 2: 12) அவர்கள் ஆசாரியத்துவத்தைக் கெடுத்து, ஆசரிப்புக் கூடாரத்தை அசுத்தப்படுத்தினார்கள். ஏலிக்கு அது தெரிந்திருந்தது. (I சாமுயேல் 2:22-24) அவருடைய பதில் என்னவாக இருந்தது ? அது ஒரு நண்பர் ஏற்படுத்தும் நியாமான "காயமா" ? அல்லது கடவுளின் சட்டத்தின்படி தேவைப்பட்ட கண்டிப்பா ? இல்லை, அது பலவீனமான, பயனற்ற, மற்றும் இறுதியில் "கொடுமையான கருணை" யாகவே இருந்தது. "என் குமாரரே, வேண்டாம், நான் கேள்விப்படுகிற இந்தச் செய்தி நல்லதல்ல, கர்த்தருடைய ஜனங்கள் மீறி நடக்கிறதற்குக் காரணமாயிருக்கிறீர்களே" என்று அவர் கூறினார். (I சாமுயேல் 2:24) இந்த கண்டிப்பு அவர்களின் பாவத்தைத் தடுப்பதற்கு எந்தப் பயனும் அளிக்கவில்லை. ஏலியின் தோல்வி குறித்த கடவுளின் மதிப்பீடு மிகவும் அதிர்ச்சியூட்டுவதாக இருந்தது. "என் வாசஸ்தலத்திலே செலுத்தும்படி நான் கட்டளையிட்ட என் பலியையும், என் காணிக்கையையும், நீங்கள் உதைப்பானேன் ? என் ஜனமாகிய இஸ்ரயேலின் காணிக்கைகளிலெல்லாம் பிரதானமானவைகளைக் கொண்டு உங்களைக் கொழுக்கப் பண்ணும்படிக்கு, நீ என்னைப்பார்க்கிலும் உன் குமாரரை மதிப்பானேன் என்கிறார். (I சாமுயேல் 2:29)

ஏலியின் "இரக்கம்" என்பது தவறான அன்பாக இருந்தது. கடவுளுடனான உடன்படிக்கையை விடத் தன் மகன்களுடனான உறவுக்கே அவர் முன்னுரிமை அளித்தார், இது, பிற்காலத்தில் நம் ஆண்டவர் கூறிய கொள்கையை நேரடியாக மீறுவதாக அமைந்தது. ."தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல, மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல." (மத்தேயு10:37) ஏலியின் தவறான இரக்கத்தின் விளைவு சீரமைப்பு அல்ல, மாறாகக் கொடுமையானதாகவே இருந்தது. தீர்ப்பு தவிர்க்க முடியாததாக மாறும் வரை, அவனது குமாரர்கள் தங்கள் பாவத்தைத் தொடர அது இடமளித்தது. கடவுள் சாமுயேலை நோக்கி - "அவன் குமாரர் தங்கள்மேல் சாபத்தை வரப்பண்ணுகிறதை அவன் அறிந்திருந்தும், அவர்களை அடக்காமற்போன பாவத்தினிமித்தம், நான் அவன் குடும்பத்துக்கு என்றும் நீங்காத நியாயத்தீர்ப்புச் செய்வேன் என்று அவனுக்கு அறிவித்தேன்." என்றார். (I சாமுயேல் 3:13) தன் மகன்களைக் கண்டிக்காமல் விட்டதில் ஏலி காட்டிய அந்த "மென்மையான இரக்கம்" ஒரு கொடூரமான செயலாக அமைந்தது, அது அவர்களின் அழிவை உறுதிப்படுத்தியதோடு, அவனது ஒட்டுமொத்த குடும்பத்தையும் நாசமாக்கியது.

## ஒரு இராஜாவின் "கொடூரமான இரக்கம்": சவுல்

சவுல் இராஜாவின் தோல்வியில் இரண்டாவது வலிமையான உதாரணம் காணப்படுகிறது. அமலேக்கியர்களைக் குறித்து தேவன் சவுலுக்குத் தெளிவான மற்றும் சந்தேகத்திற்கு இடமில்லாத ஒரு கட்டளையை அளித்தார். "இப்பொழுதும் நீ போய், அமலேக்கை மடங்கடித்து, அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரித்து, அவன்மேல் இரக்கம் வைக்காமல், புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையும், ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்றுபோடக்கடவாய் என்கிறார் என்று சொன்னான். " (I சாமுயேல் 15:3) அந்தக் கட்டளை உறுதியானதும், அக்கிரமத்தில் மூழ்கியிருந்த ஒரு தேசத்தின் மீதான தெய்வீகத் தீர்ப்பாகவும் அமைந்திருந்தது.

ஆனால் சவுலின் இரக்கம் தேவனுடைய இரக்கத்தோடு ஒத்துப்போகவில்லை. ."சவுலும் ஜனங்களும் ஆகாகையும், ஆடுமாடுகளில் முதல்தரமானவைகளையும், இரண்டாந்தரமானவைகளையும், ஆட்டுக்குட்டிகளையும், நலமான எல்லாவற்றையும் அழித்துப்போட மனதில்லாமல் தப்பவைத்து, அற்பமானவைகளும் உதவாதவைகளுமான சகல வஸ்துக்களையும் முற்றிலும் அழித்துப் போட்டான்." (I சாமுயேல் 15:9) இது கடவுளுக்கு நேரடி கீழ்ப்படியாமை கொண்ட ஒரு "மென்மையான இரக்கம்" ஆகும்.

தீர்க்கதரிசியான சாமுயேல் சவுலைக் கேள்வி கேட்டபோது, அவனது தற்காப்பு வாதம் அவனது உண்மையான நோக்கத்தை வெளிப்படுத்தியது. முதலாவதாக, "கர்த்தருக்குப் பலியிடுவதற்காகவே" அவைகளைத் தப்பவிட்டதாக அவன் கூறினான். (I சாமுயேல் 15:21)

இது மதப்பற்று என்ற போர்வையில் கீழ்ப்படியாமையை மறைப்பதற்கான ஒரு வழக்கமான முயற்சியாகும். ஆனால் வற்புறுத்தப்பட்டபோது, அவர் உண்மையை ஒப்புக்கொண்டார். "அப்பொழுது சவுல் சாமுயேலை நோக்கி - நான் கர்த்தருடைய கட்டளையையும் உம்முடைய வார்த்தைகளையும் மீறினதினாலே பாவஞ்செய்தேன், நான் ஜனங்களுக்குப் பயந்து, அவர்கள் சொல்லைக் கேட்டேன். "(I சாமுயேல் 15:24)

போலி இரக்கத்தின் மற்றொரு வேர் இதோ :மனிதர்களுக்கு அஞ்சும் குணம். சவுல் மக்களைத் திருப்திப்படுத்தவும், அவர்கள் பார்வையில் பிரபலமான மற்றும் "இரக்கமுள்ள" இராஜாவாகத் திகழவும் விரும்பினான். அவனுக்குள் இருந்த மனித பயம், தேவ பயத்தைவிட மேலோங்கி நின்றது. தவறாகப் பயன்படுத்தப்பட்ட இந்தக் கருணை மிகவும் கொடுமையானதாக இருந்ததால், அது சவுலுக்குத் தன் இராஜ்யத்தையே இழக்கச் செய்தது. அது தெய்வீகக் கட்டளையை விட மனிதனின் கருத்தை மேன்மைப்படுத்திய ஒர் கருணையாக இருந்தது. சாமுயேலின் கண்டனம் ஒரு நித்தியமான கொள்கையாக நிலைத்து நின்றது. "அதற்குச் சாமுயேல் - கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்." (I சாமுயேல் 15:22)

## எதிராளியின் “ இரக்கம்”: வனாந்தரச் சோதனை

கீழ்ப்படியாமைக்குத் தூண்டும் வகையிலான இந்தக் கொடூரமான இரக்கத்தின் போக்கு, எதிராளியிடமிருந்தே தோன்றுகிறது. வனாந்தரத்தில் இயேசுவைச் சாத்தான் சோதித்ததைச் சிந்தித்துப் பாருங்கள். நம் ஆண்டவர் நாற்பது நாட்கள் உபவாசம் இருந்த பிறகு, சாத்தான் அவரிடம் வந்தான். "அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து - நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான்"(மத்தேயு4:3) இது தவறான கருணைக்கான அழைப்பு அல்லாமல் வேறென்ன ? "இயேசுவை, உம்மீது கருணை காட்டுங்கள். நீர் பசியால் வாடுகிறீர். உமக்கு வல்லமை இருக்கிறது. நீர் துன்பப்பட வேண்டியதில்லை. உமது சௌகரியத்திற்கு முன்னுரிமை அளியுங்கள்." இந்த "மென்மையான கருணை" என்பது, கடவுளின் சித்தத்திற்கு கீழ்ப்படிவதை விட மாம்சம் சார்ந்த தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கும்படியான ஒரு சோதனையாக இருந்தது. இயேசுவின் பதில் கருணை காட்டுவதாக அமையவில்லை, மாறாக, அது தேவனுடைய வார்த்தையாகவே இருந்தது. "அவர் பிரதியுத்தரமாக - மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்." (மத்தேயு4:4)

சாத்தானின் "இரக்கம்" என்பது கடவுளின் சித்தத்திற்கு கீழ்ப்படியாமல் போவதற்கான ஒரு சோதனையாக இருந்தது. "தீயோரின் கனிவான இரக்கங்கள்" என்பதன் சாராம்சம் இதுவே. அவை கொடூரமானவை, ஏனெனில், கடவுளுக்கு நாம் செலுத்தும் கீழ்ப்படிதலிலிருந்து நம்மைப் பிரிப்பதும், ஆவிக்குரிய வாழ்க்கையைப் புறக்கணித்து மாம்ச இச்சைகளுக்கு இடமளிப்பதுமே அவற்றின் இறுதி நோக்கமாக இருக்கிறது.

## “ நண்பன் உண்டாக்கும் காயங்கள் நம்பிக்கைக்குரியவை”

இந்த உதாரணங்கள் நம் இருதயங்களை ஆராய்ந்து பார்க்க நம்மை ஊக்குவிக்க வேண்டும். வீழ்ச்சியடைந்த மனிதர்களாகிய நாம், ஏன் இரக்கத்தைத் தவறாகப் பயன்படுத்துவதற்கு இவ்வளவு எளிதில் ஆளாகிறோம் ? அதற்கான காரணங்களை வேதத்தில் நாம் கண்டிருக்கிறோம்.

(1)தவறான அன்பு - கடவுளை விட நம் குடும்பத்தினரையும் நண்பர்களையும் நாம் மேலாக மதிக்கிறோம். (ஏலி)

(2) மனுஷருக்கான பயம் - மனிதர்களுக்குப் பயப்படுதல் நாம் மனிதர்களின் அங்கீகாரத்தை நாடுகிறோம், அதேவேளையில் மோதல்களைக் கண்டு அஞ்சுகிறோம். (சவுல்)

(3) சுய - திருப்தி - துன்பத்தைத்



தவிர்க்கும் விருப்பத்திற்கும் நமது சொந்த சௌகரியத்திற்கும் நாம் முன்னுரிமை அளிக்கிறோம் (சாத்தானின் தூண்டுதல்)

இயல்பாகவே பலர் மோதல்களை (பிரச்சனைகள்) விரும்புவதில்லை, அத்துடன் கனிவான அன்பான மற்றும் சகிப்புத்தன்மை கொண்டவர்களாகத் திகழவே விரும்புகிறார்கள். ஆனால் இந்தக் கண்ணியில் சிக்கிக்கொள்ளாமல் இருக்குமாறு கடவுளின் ஞானம் நமக்கு எச்சரிக்கை விடுக்கிறது. "சிநேகிதன் அடிக்கும் அடிகள் உண்மையானவைகள், சத்துரு இடும் முத்தங்களோ வஞ்சனையுள்ளவைகள்." (நீதிமொழிகள் 27:6 )"நண்பன் அடிக்கும் அடிகள் " என்பவை உண்மையான, தெய்வீக இரக்கத்தின் வெளிப்பாடாகும். இது அன்புடன் உண்மையைச் சொல்லும் செயலாகும். (எபேசியர் 4:15)அது சங்கடமானதாக இருக்கும்போதும் கூட, ஒரு சகோதரனைத் தீயிலிருந்து மீட்டெடுக்கும் அந்த வேதனையான, ஆனால் அவசியமான ஒழுங்குமுறை இதுவே. இதுவே குணமளிக்கும் கருணை. மாறாக, "எதிரியின் முத்தங்கள்" என்பவை "தீயோரின் கனிவான இரக்கங்கள்" ஆகும். அவை வஞ்சனைக்குரியவை. அவை நல்ல உணர்வைத் தருகின்றன. அவை கருணை வார்த்தைகள்- "சமாதானமில்லாதிருந்தும் - சமாதானம் சமாதானம் என்று சொல்லி, என் ஜனத்தின் காயங்களை மேற்பூச்சாய்க் குணமாக்குகிறார்கள்."(எரேமியா 6:14)

இவை பாவத்தை நியாயப்படுத்தும், பாவிக்கு ஆதரவாகத் தட்டிக்கொடுக்கும் மற்றும் அவர் எப்படி இருக்கிறாரோ அப்படியே அவர் நலமாக இருக்கிறார் என்று அவரிடம் கூறும் செயல்களாகும். இது ஒரு ஆவிக்குரிய கொடூரமாகும். இது, புற்றுநோய் கட்டியைக் கண்ட ஒரு மருத்துவர், நோயாளிக்கு ஒரு லாலிபாப் (lollipop) மிட்டாயைக் கொடுத்துவிட்டு, "இனிய நாளாக அமையட்டும்" என்று கூறி அனுப்புவதைப் போன்றது. தற்காலிகமான அந்தத் தயவு உண்மையில் ஒரு கொடிய செயலாகும், ஏனெனில், அது பாவமாகிய "புளித்த மாவு" (1கொரிந்தியர் 5:6)பரவுவதற்கு இடமளித்து காயத்தை ஆழமாக்குவதோடு, இறுதியான நிலையை மிக மோசமானதாக மாற்றிவிடுகிறது. இத்தகைய இணக்கமான போக்கு ஒருபோதும் சூழ்நிலையைச் சீரமைக்காது.

### உண்மையான சுகம் பெறுதல் : "மனந்திரும்புதலும் சீர்திருத்தலும்"

உண்மையான இரக்கம் என்பது பாவத்தை மன்னித்துவிடுவது அல்லவென்றால், குணமடைவதற்கான வழிதான் என்ன ?அது மனந்திருப்புதலும், சீர்திருத்தலுமே என்று வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது. உண்மையான இரக்கம், மனந்திரும்புதலுக்கு வழிவகுப்பதற்காகப் பாவத்தை எதிர்கொள்கிறது, அது பாவத்தைத் தவிர்த்துச் செல்வதில்லை. தீர்க்கதரிசியாகிய யோயேலின் அழைப்பே இதற்கு முன்மாதிரியாகும். "ஆதலால் நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள், அவர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர் அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார். (யோயேல் 2:12-13)

நம் பாவத்தை மறைப்பதன் மூலமல்ல, மாறாக அதற்காக நம் இருதயத்தைக் கிழித்துக்கொள்வதன்" மூலமே நாம் கடவுளின் இரக்கத்தைப் பெறுகிறோம். பேதுருவின் வாழ்வில் இது மிக அழகாக வெளிப்படுகிறது. ஆண்டவரை மறுதலித்த அந்தப் பயங்கரமான பாவத்திற்குப் பிறகு.... "அப்பொழுது கர்த்தர் திரும்பி, பேதுருவை நோக்கிப்பார்த்தார்.சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன வசனத்தை உடனே பேதுரு நினைவுகூர்ந்து, "(லூக்கா 22:61)அந்தப் பார்வை, தாராள மனப்பான்மையையோ அல்லது "போலி இரக்கத்தையோ" வெளிப்படுத்துவதாக இருக்கவில்லை. அது பேதுருவின் இருதயத்தைத் துளைத்த ஒரு சத்தியம் நிறைந்த பார்வையாக இருந்தது. உண்மைத் தோற்றம். அதன் விளைவு ?"பேதுரு வெளியே போய், மனங்கசந்து அழுதார்" (லூக்கா 22:62)

இது மரணத்தை விளைவிக்கும் உலகத்திற்குரிய துயரம் அல்ல, மாறாக, "இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்கும்" தேவனுக்கேற்ற துக்கம்" ஆகும். (2கொரிந்தியர் 7:10)



பேதுருவை இயேசு மீட்டெடுத்தபோது (யோவான் 21) வெளிப்பட்டஆண்டவரின் அந்த உண்மையான இரக்கத்தைச் சந்தித்த அந்த உண்மையான மனந்திம்புதலே, இயேசுவை மறுதலித்து உடைந்த நிலையில் இருந்த பேதுருவை ஆதி திருச்சபையின் பாறையாக மாற்றியது. அவரது தோல்விக்கு சாக்குப்போக்கு சொல்லும் அந்த "கொடூரமான கருணையின்" மூலமாக அல்லாமல், மனம்மாறும் வேதனையான செயல்முறையின் மூலமாகவே அவரது குணலட்சணம் செதுக்கப்பட்டது.

## தெய்வீக ஒழுங்குமுறையின் நோக்கம்

இதனால்தான் கடவுளின் இரக்கத்தில் பெரும்பாலும் கண்டிப்பும் அடங்கியிருக்கிறது. இது உலகிற்கு முரண்பாடாகத் தோன்றினாலும், ஞானமுள்ள இருதயங்கொண்டவர்களுக்கு இது ஒரு ஆழமான சத்தியமாகும். "அன்றியும்- என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்துகொள்ளப்படும்போது சோர்ந்துபோகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள்." (எபிரெயர் 12:5-6)

"நீங்கள் ஒருவரை நேசித்தால், அவர்களை ஒருபோதும் "சாட்டையால் அடிக்கவோ அல்லது கண்டிக்கவோ மாட்டீர்கள்" என்று போலியான இரக்கம் கூறுகிறது. ஆனால் "நான் உன்னை நேசிப்பதினால் நான் உன்னை சிட்சிப்பேன்" என்று தேவனுடைய இரக்கம் கூறுகிறது. ஏன் ? ஏனெனில், "எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும், ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்." (எபிரெயர் 12:11)

கடவுளின் இரக்கம் கொடூரமானது அல்ல. அவரே தெய்வீக அறுவை சிகிச்சை நிபுணர், பாவமென்னும் புற்றுநோயை அகற்றி, நாம் குணமடைந்து "நீதியின் சமாதானமான கனியை" அருளும்படிச் செய்வதற்காக, ஒரு தற்காலிகமான மற்றும் நம்பிக்கைக்குரிய "காயத்தை" ஏற்படுத்த அவர் தயாராக இருக்கிறார். இத்தகைய இரக்கத்தையே நாமும் கடைப்பிடிக்குமாறு அழைக்கப்பட்டுள்ளோம். "சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள், நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு." (கலாத்தியர் 6:1) இதன் நோக்கம் கண்டனம் செய்வதல்ல, சலுகை காட்டுவதும் அல்ல, இது சீரமைப்பதே ஆகும்.

## தெய்வீக இரக்கத்தைக் கொண்டு உங்கள் இருதயத்தைக் காத்துக் கொள்ளுங்கள்

பொல்லாதவர்களின் "மென்மையான இரக்கங்களை" அடிக்கடி போற்றும் ஒரு உலகில் நாம் வாழ்கிறோம். இது, வரம்புமீறிய செயல்களை "அன்பு" என்றும், நீதியைக் கடைப்பிடிப்பதை "பிறரைத் தீர்ப்பிடுதல்" என்றும் அழைக்கும் ஒரு காலகட்டமாகும். இதுவே ஒரு எதிரியின் "வஞ்சகமான முத்தத்தின்" உச்சகட்டமாகும். மனுக்குலத்தைத் தன் பாவத்திலேயே அழிந்துபோக விட்டுவிடுவதால், இது கொடூரமானதாக உள்ளது.

கடவுளின் திட்டமே உண்மையான ஒரே சுகமளிக்கும் வழியாகும் - ஈடுபலியின் மூலம் பாவத்தை நீக்குவதும், அவருடைய பரிசுத்த ஆவியின் மூலம் இருதயத்தைப் புதுப்பிப்பதுமே. அதுவே மனுக்குலத்திற்குச் சுகமளிக்கக்கூடிய ஒரே வழியாகும்.

ஆகவே சகோதரர்களே, இந்த அறிவுரையை நாம் கவனத்தில் கொள்வோமாக. பாவத்திற்கு இடமளித்து ஆவிக்குரிய தீங்கிற்கு இட்டுச் செல்லும், உலகின் பொய்யான மற்றும் கொடூரமான இரக்கத்தை நிராகரிப்பதன் மூலம் நம் இருதயங்களைக் காத்துக்கொள்வோமாக.

உண்மையான, பக்தியுள்ள இரக்கத்தைப் பின்பற்றிச் செயல்படுத்தத் தேவையான ஞானத்திற்காக நாம் ஜெபிப்போம், அந்த இரக்கமானது, உண்மையைச் சொல்லத் துணிவுள்ளதாகவும், நீதியை நிலைநாட்ட வல்லமைமிக்கதாகவும், ஒரு ஆத்துமாவின் உண்மையான குணமடைதலையும் மீட்சியையும் நாடும் அளவுக்கு அன்பு நிறைந்ததாகவும் இருக்க வேண்டும். அத்தகைய இரக்கம், மிகுந்த இரக்கமும் நீதியில் பரிபூரணமும் கொண்ட நம் கடவுளின் தன்மையை வெளிப்படுத்துகிறது.

# கடுமையான உலகில் மென்மையான சொற்கள்

"மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும், கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும். ஞானிகளின் நாவு அறிவை உபயோகப்படுத்தும், மூடரின் வாயோ புத்தியீனத்தைக் கக்கும்." (நீதிமொழிகள் 15:1,2)



— Tom Ruggirello

வார்த்தைகளின் ஆற்றலை நாம் பெரும்பாலும் குறைத்து மதிப்பிடுகிறோம். அவை அன்பு, வெறுப்பு மற்றும் அவற்றுக்கு இடைப்பட்ட பல்வேறு உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன. வார்த்தைகளால் போரைத் தொடங்கவோ அல்லது அமைதியை ஊக்குவிக்கவோ முடியும். (யாக்கோபு3:5)அவற்றின் மூலம் நாம் நமது நம்பிக்கைகள், விருப்பங்கள் மற்றும் நோக்கங்களை வெளிப்படுத்துகிறோம். "மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும், அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள். (நீதிமொழிகள் 18:21) வேறு வார்த்தைகளில் சொன்னால், ஒருவருடைய வார்த்தைகளின் "பலன்" அந்த வார்த்தைகளைப் பேசுபவர் மீதே விளைவுகளை ஏற்படுத்தும். நமது வார்த்தைகள் நம் இருதயத்தின் நிலையை வெளிப்படுத்துகின்றன என்பதை அறிந்துகொள்ளும்போது, இருதயத்தைப் பாதுகாப்பதில் நாவைக் கட்டுப்படுத்துவது ஒரு இன்றியமையாத பகுதி என்பதை நாம் உணரலாம்.

### கட்டி எழுப்பும் அல்லது தகர்த்தெறியும் ஆற்றல்

நீதிமொழிகள் 15:2, ஞானியின் நாவு அறிவை எப்படிக் கையாளுகிறது என்பதை விவரிக்கிறது. இந்த எளிய கூற்று, நாம் பேசும் எதையும் முதலில் உண்மையாகவே இருக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது. பொய்என்று தெரிந்த ஒன்றைச் சொல்வது, தூய்மையற்ற நோக்கத்தை வெளிப்படுத்துகிறது. ஆனால், உண்மைக் கூற்றுகளும் புண்படுத்தக்கூடும். இப்படிப்பட்ட உண்மை கூட பல சமயங்களில் சீர்செய்யப்பட வேண்டும் என்பதை அப்போஸ் தலனாகிய பவுல் புரிந்துகொண்டார். "அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயு மிருப்பதாக."(கொலோசேயர் 4:6)

"கிருபை நிறைந்த" சொற்கள், நாம் பேசுவதற்கு ஒரு புதிய பரிமாணத்தை அளிக்கின்றன. ஒரே மாதிரியான இரண்டு வாக்கியங்கள், கேட்பவர் மீது முற்றிலும் மாறுபட்ட தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும். கடுமையான, கோபமான தொனியில் ஒரு கருத்தைச் சொல்லும்போது, அது தற்காப்பு உணர்வுடன் கூடிய கோபமான எதிர்வினையைத் தூண்டக்கூடும்.

ஆனால், அக்கறையுடனும் கனிவுடனும் பேசும்போது, அந்தப் பதில் பொதுவாகச் சிறப்பாக ஏற்றுக்கொள்ளப்படும். நீதிமொழிகளில் விவரிக்கப்பட்டுள்ள அந்த "மென்மையான" அல்லது கனிவான பதில்தான் அதிக பலன் தரக்கூடியது. எனவே, பேசும் தொனி கூட ஒருவரை ஊக்குவிக்கவோ அல்லது மனதளவில் சிதைக்கவோ கூடும். கடுமையான மற்றும் விமர்சனப்பூர்வமான சொற்களைப் பயன்படுத்தும் போக்கு அதிகரித்து வரும் இன்றைய உலகில், இந்தக் கொள்கை அரிதாகவே கருத்தில் கொள்ளப்படுகிறது.

"உப்பால் சாரமேற்றப்பட்ட" என்ற சொற்றொடர் அர்த்தமுள்ளதாக உள்ளது. உப்பு ஒரு இயற்கையான பதப்படுத்தும் பொருள், அது தூய்மைப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" (மத்தேயு5:13) என்று இயேசு கூறினார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், சுவிசேஷ யுகத்தைச் சேர்ந்த திருச்சபையானது தன்னைச் சுற்றியுள்ள வர்கள் மீது ஒரு தூய்மைப்படுத்தும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. "பட்டயக்குத்துகள்போல் பேசுகிறவர்களும் உண்டு, ஞானமுள்ளவர்களுடைய நாவோ ஔஷதம்." (நீதிமொழிகள் 12:18)

பயனுள்ள சொற்கள் ஆவிக்குரிய நலனை வளர்க்கின்றன. உண்மையான சொற்கள், தக்க தருணத்தில் பேசப்படும் போது, மற்றவர்களை மேம்படுத்தும் தன்மை கொண்டவை.

### ஊக்கமளிக்கும் வார்த்தைகள்



பெர்னார்ட் மெல்ட்சர் (Bernard Meltzer) என்ற வானொலி நிகழ்ச்சித் தொகுப்பாளர் பின்வரும் கூற்றை வெளியிட்டதாகக் கருதப்படுகிறது : "பேசுவதற்கு முன், நீங்கள் சொல்லப்போகும் விஷயம் உண்மையானதா, கனிவானதா, அவசியமானதா மற்றும் பயனுள்ளதா என்று உங்களையே கேட்டுக்கொள்ளுங்கள். அதற்கான பதில் "இல்லை" என்றால், நீங்கள் சொல்லவிருப்பதைச் சொல்லாமலே விட்டுவிடுவது நல்லது."

மற்றவர்களை இழிவுபடுத்துவதைத் தவிர்ப்பது மட்டுமல்லாமல் மற்றவர்களை, குறிப்பாக அந்த பரம அழைப்பை ஏற்றுக்கொண்டவர்களை தங்களால் இயன்றவரை ஊக்கப்படுத்துவதும் ஒரு கிறிஸ்தவரின் கடமையாகும். இடுக்கமான பாதை சவாலானதாகவும், சில சமயங்களில் மனச்சோர்வை ஏற்படுத்துவதாகவும் கூட இருக்கலாம். .உண்மையுடன் சேவை செய்ய வேண்டும் என்ற ஒருவரின் தூய விருப்பம், பெரும்பாலும் மனித இயல்பு சார்ந்த குறைபாடுகளையே சந்திக்க நேரிடுகிறது. எனவே, அக்குறைகளை ஈடுசெய்ய கிறிஸ்துவின் புண்ணியத்தைச் சார்ந்திருப்பது ஒரு பொதுவான நடைமுறையாக அமைகிறது. அர்ப்பணிப்புக்கான உயரிய லட்சியங்களையும், நம்முடைய பாவ இயல்பின் யதார்த்தத்தையும் சமநிலைப்படுத்துவது சவாலானதாக இருக்கலாம்.

ஊக்குவித்தல்(“Encourage”) என்ற சொல், "வலிமைப்படுத்துதல்" அல்லது "மனதை உறுதிப்படுத்துதல்" என்று பொருள்படும் ஒரு பழைய பிரெஞ்சுச் சொல்லிலிருந்து உருவானது.

சுயத்தை பலி செலுத்தும் பாதையில் பயணிக்கும் சகோதரர்கள், தாங்கள் தனித்து இல்லை என்பதை அறிந்துகொள்ள வேண்டியது பெரும்பாலும் அவசியமாகிறது. மற்றவர்களும் இதே போன்ற சவால்களை எதிர்கொள்வதைக் காண்பது அவர்களுக்கு உதவியாக இருக்கும். கூடப் பயணிக்கும் சக பயணிகளின் ஊக்கமளிக்கும் வார்த்தைகள், அவர்களின் சுமையைக் குறைப்பதோடு, சகோதரர்களுக்கு இடையிலான பிணைப்பையும் வலுப்படுத்துகின்றன.

விரைவில் தம்மை பேதுரு மறுதலிப்பார் என்று அவரிடம் சொன்ன பிறகு, இயேசு- "நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன், நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்". (லூக்கா22:32 )மிகவும் நேசித்த ஒருவரை மறுதலித்துவிட்டதை உணர்ந்து மனங்கசந்து கண்ணீர் விட்ட போது, அந்த வார்த்தைகள் பேதுருவின் மனதில் சில மணிநேரங்களுக்கு பிறகு ஆழமாக எதிரொலித்தது. (மத்தேயு26:75) ஆனால் ஆண்டவரை மறுதலித்த பிறகும் கூட தாம் மன்னிக்கப்பட்டதாகவும், கடவுளுக்குத் தாம் மதிப்புமிக்கவராகத் திகழ்வதாகவும் பேதுரு பின்னர்சகோதரர்களிடம் கூறியபோது, அவரது சாட்சியம் எத்தகைய வல்லமை வாய்ந்ததாக இருந்திருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள்

ஒவ்வொரு தோல்வியும் ஒரு கற்றல் அனுபவமாக அமையக்கூடும். அந்தத் தத்துவத்திற்குப் பேதுரு ஒரு சிறந்த உதாரணமாகத் திகழ்ந்தார், அந்த நிகழ்வு ஆண்டவருக்குத் தங்களை அர்ப்பணித்த பலரின் உள்ளங்களைத் தொட்டுள்ளது. தடுமாற்றம் ஒரு கற்றல் அனுபவமாக மாறும்போது, அது தோல்வியாகாது. இயேசுவின் நம்பிக்கையூட்டும் வார்த்தைகள் பேதுருவின் மீட்சிக்கான பாதையாக அமைந்தது. இயேசு தனக்காக ஜெபித்திருந்தார் என்பதை நினைவுகூர்ந்தது, பேதுரு தனது, வாழ்நாள் முழுவதும் தன்னுடன் கொண்டிருந்த ஒரு நிலையான பலத்தின் ஊற்றாக அதை அமைத்துகொண்டார். மற்றவர்கள் நம் மீது அக்கறை கொண்டுள்ளனர் என்பதையும், நாம் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள் என்பதையும் நாமும் தெரிந்துகொள்ள வேண்டும். அந்த அறிவு ஒரு பெரும் பலத்தின் ஊற்றாக அமையலாம்.

## நாம் நாமே நியாயம் தீர்க்க வேண்டும்



"நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்." (1கொரிந்தியர் 11:31)"நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான், பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான்,

இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும்."(லூக்கா6:45 )

சில சமயங்களில் நமது சொந்த நோக்கங்களை அறிந்துகொள்வது கடினமாக இருக்கலாம். நமது வார்த்தைகள் எதிர்மறையாக அமைந்தால், நாம் அறியாமலேயே மற்றவர்களைக் குறை கூற முற்படக்கூடும். நாம் பேசும் வார்த்தைகள் பெரும்பாலும் நம் இருதயத்தின் நிலையை வெளிப்படுத்துகின்றன. நம் வார்த்தைகளை ஆராய்வது நம் இருதயத்தை மதிப்பிட உதவும், இது ஆளுமை வளர்ச்சிக்கான ஒரு இன்றியமையாத பயிற்சியாகும். நிச்சயமாக, இத்தகைய மதிப்பீட்டை அளவுக்கு அதிகமாகக் கொண்டு செல்லலாம், அப்போது நாம் மற்றவர்களை மட்டுமல்லாமல், நம்மையே கூட மிகக் கடுமையாக விமர்சிக்கும் நிலைக்கு ஆளாகக்கூடும். எனவே, நேர்மையான சுய மதிப்பீட்டிற்கும், நம்முடைய குறைபாடுகளுக்காகக் கடவுள் செய்துள்ள ஏற்பாட்டைப் புரிந்துகொள்வதற்கு இடையே சரியான சமநிலை தேவைப்படுகிறது.

விசுவாசிகள் இவ்வுலகின் மீது ஒரு குறிப்பிடத்தக்க நன்மையைக் கொண்டுள்ளனர், நாம் நமது வார்த்தைகளைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது, அவற்றை கிறிஸ்துவின் பரிபூரணமான அளவுகோலோடு ஒப்பிட்டு அளவிட முடியும். நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள தரநிலையை வெளிப்படுத்துவதே அர்ப்பணிக்கப்பட்ட ஒவ்வொரு இருதயத்தின் குறிக்கோளாக இருக்க வேண்டும். எனவே, நம்முடைய வார்த்தைகளே வளர்ச்சிக்கான கருவியாகும். குணநலன் வளர்ச்சி என்பது பொதுவாக மெதுவான மற்றும் சீரான ஒரு செயல் முறையாகும், கர்த்தர் நம்மிடமிருந்து பரிபூரணத்தை எதிர்பார்க்காமல், அதற்கான சிறந்த முயற்சிகளை எதிர்பார்க்கிறார்.

## இருதயத்தின் நோக்கம்

"நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான்." (மத்தேயு12:35)நம் வார்த்தைகளைக் கட்டுப்படுத்துவது என்பது தெளிவாகவே வேதாகமத்தின் ஒரு அறிவுரையாகும். ஆனால், அதைவிட முக்கியமானது, நாம் சிந்திப்பதற்கு அனுமதிக்கும் எண்ணங்களைக் கண்காணிப்பதே ஆகும். ஒவ்வொரு விசுவாசியின் நோக்கமும் கர்த்தரைத் தங்கள் உதடுகளால் மட்டுமல்லாமல், தங்கள் இருதயத்தாலும் துதிப்பதாகவே இருக்க வேண்டும். துதியும் நன்றியறிதலும் இருதயத்தில் இருந்தால், நல்ல வார்த்தைகள் இயல்பாகவே வெளிப்படும்.

தொல்லை தரும் நபர்களை எதிர்கொள்ளும்போது, அவர்களைக் கடவுளின் கண்களின் வழியாகவும், எதிர்காலத்தில் அவர் அவர்களை எத்தகையவர்களாக மாற்றுவார் என்ற கண்ணோட்டத்திலும் பார்ப்பது ஒரு பயனுள்ள அணுகுமுறையாக அமையலாம். காலங்களுக்கான கடவுளின் தெய்வீகத் திட்டத்தை அறிந்துகொள்வது, கடவுளுடைய இராஜ்யத்தின் செல்வாக்கின் கீழ் மக்கள் எவ்வாறு வளர்ச்சியடைவார்கள் என்பது குறித்த ஒரு அற்புதமான கண்ணோட்டத்தை அளிக்கிறது. மற்றவர்களின் எதிர்மறைப் பண்புகள் குறைந்து, இறுதியில் அவை முறியடிக்கப்படும்போது அவர்களிடத்தில் உருவாகக்கூடிய நன்மைகளை மனதிற்கொள்வது, அவர்களை அணுகுவதிலும் அவர்களுக்குப் பதிலளிப்பதிலும் பயனுள்ளதாக அமையலாம்.

இயேசுவே கூட, தம் எதிரிகளை எதிர்கொண்டபோது இந்த விலைமதிப்பற்ற அணுகுமுறையைப் பயன்படுத்தியிருக்கலாம்.

## விமர்சனம் எப்போது அவசியமாகிறது?

"மேலும், பேதுரு அந்தியோகியாவுக்கு வந்தபோது, அவன்மேல் குற்றஞ் சுமந்ததினால், நான் முகமுகமாய் அவனோடே எதிர்த்தேன்." (கலாத்தியர் 2:11 )தம்முடைய யூத சகோதரர்களைப் புண்படுத்த விரும்பாத அப்போஸ்தலனாகிய பேதுரு, அவர்கள் முன்னிலையில் புறஜாதி சகோதரர்களிடமிருந்து விலகி நின்றார். இதற்காகப் பேதுருவை வெளிப்படையாக எதிர்க்க வேண்டிய கட்டாயம் பவுலுக்கு ஏற்பட்டது. இது குழுக்களிடமும் அவர் கூறிய செய்தி வெவ்வேறு விதமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருந்ததால், அவ்விரு குழுக்களின் முன்னிலையிலும் அவ்வாறு செய்வது அவசியமென பவுல் கருதியிருக்கலாம். யூதர்கள் தங்களை யூதரல்லாத தங்கள் சகோதரர்களைவிட உயர்ந்தவர்களாகக் கருதக்கூடாது. கிறிஸ்துவினுடைய தகுதியினாலேயே நீதிமானாக்கப்படுதல் உண்டாயிற்றே தவிர நியாயப்பிரமாணத்தினாலல்ல என்பதால், தாங்கள் சமமான நிலையில் இருக்கிறோம் என்பதை யூதரல்லாதவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அது திருச்சபைக்கு ஒரு அடிப்படையான சத்தியமாக மாறிய, முக்கியமானதொரு போதனைக்குரிய தருணமாக இருந்தது. பேதுருவின் பதில் பதிவு செய்யப்படவில்லை. அவர் அந்த விமர்சனத்தைப் புரிந்துகொண்டு, அந்தக் கண்டிப்பை ஏற்றுக்கொண்டார் என்பதை இது உணர்த்துகிறது. அவருடைய இரண்டாவது நிருபத்தின் இறுதி வார்த்தைகளில், பவுல் மீதான அவரது அன்பும் மரியாதையும் தெளிவாகத் தெரிகின்றன. (2பேதுரு

3:15, 16)ஒரு அப்போஸ்தலர் கூட விமர்சனத்தை ஏற்றுக்கொண்டு அதிலிருந்து கற்றுக்கொள்ள முடியும் என்பதற்கு இது ஒரு அர்த்தமுள்ள முன்னுதாரணமாக அமைகிறது. விமர்சனத்தை உணர்ச்சிவசப்படாமல் மதிப்பிடுவது கடினமாக இருக்கலாம், ஆனால் அதிலிருந்து ஏதேனும் பலனைப் பெற வேண்டுமானால், புண்பட்ட உணர்வுகளை ஒதுக்கி வைக்க வேண்டும்.

விமர்சனத்தைப் பகிர்ந்துகொள்ளும்போது இருதய நோக்கமும் இன்றியமையாதது. சபையில் நடந்துகொண்டிருந்த ஒரு தவறைச்சரிசெய்ய பவுல் விரும்பினார். அது சுட்டிக்காட்டப்பட்ட பிறகு, அவர் அதை மேலும் நீட்டிக்கவில்லை. அவர் தனிப்பட்ட தாக்குதல்களில் ஈடுபடவில்லை, அத்தருணத்தில் உள்ள விஷயத்தை மட்டுமே விவாதித்தார். விமர்சனம் செய்ய வேண்டிய சூழல் ஏற்படும்போது, அதை முன்வைப்பதன் நோக்கம் ஒருவரை மேம்படுத்துவதாகவும் செம்மைப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.

## வீட்டில் வேலை ஸ்தலத்தில் திருச்சபையில்



"கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம், பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள். அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல, நீங்கள் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்."(எபேசியர் 4:29, 31, 32)

அப்போஸ்தலரின் அறிவுரை நாம் உணர்வதை விட நம்முடைய எண்ணங்கள் மற்றும் உணர்ச்சிகள் மீது நமக்கு அதிகக் கட்டுப்பாடு உள்ளது என்பதை உணர்த்துகிறது. கோபம் இருதயத்திலிருந்து எழுகிறது, தீய சிந்தனைகளிலிருந்தே தீய சொற்கள் பிறக்கின்றன. தவறான சிந்தனைகளை வெல்ல முடியும் என்றாலும், அதற்கு நாவைக் கட்டுப்படுத்துவதை காட்டிலும் தீவிரமான முயற்சி தேவைப்படுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் கர்த்தரைப் பின்பற்றுகிறவர்கள், கிறிஸ்து போதித்தவற்றிற்குத் தங்கள் எண்ணங்களையும் இசைவாக அமைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். "எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாய் இருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்து கிறவர்களாயிருக்கிறோம். (2கொரிந்தியர் 10:4,5)

நாம் கற்பனைகளுக்கு அல்லது மாம்சத்திற்குரிய சிந்தனைகளுக்கு எதிராகப் போராடுகிறோம் என்பதைப் பவுல் தெளிவுபடுத்தினார். தீங்கு விளைவிக்கும் எண்ணங்களை அகற்றுவதற்கு, அவற்றை நேர்மறையான மற்றும் ஆக்கபூர்வமான எண்ணங்களைக் கொண்டு இடமாற்றம் செய்வதே ஒரே வழியாகும். சமீபத்திய ஒரு கலந்துரையாடலையோ அல்லது நாம் கற்றுக்கொண்ட ஒரு சத்தியத்தையோ நினைவுகூர்வது, நம் எண்ணங்களைக் கட்டுப்படுத்த உதவுவதோடு மட்டுமல்லாமல், தெய்வீகக் கொள்கைகள் மீதான நம் கவனத்தை ஆழப்படுத்தவும் உதவுகிறது.

"சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி." (எபேசியர் 5:19)இந்த அறிவுரை பொதுவாக சகோதரர்கள் கூடிவரும் நேரங்களில் பயன்படுத்தப்படுகிறது. ஆயினும், மனதிற்குள் ஒரு பாடலைப் பாடுவதோ அல்லது ஒரு சங்கீதத்தை வாசிப்பதோ, வீழ்ச்சியடைந்த நமது மாம்சத்தின் கற்பனைகளுக்குப் பதிலாக அமையக்கூடும்.

சில சமயங்களில், நாவைக் கட்டுப்படுத்துவதற்கு ஒருவரின் இல்லற வாழ்க்கை மாறுபட்டதொரு சூழலை அளிக்கிறது. இயல்பாகவே, நம் சொந்தக்

குடும்பத்தினரிடம் மனம் திறந்து பேசவும், கருத்துக்களைத் தயக்கமின்றிப் பகிர்ந்துகொள்ளவும் நாம் அதிகம் விரும்புகிறோம். ஆனால் இங்கேயும் கூட, ஆக்கபூர்வமான அல்லது நற்பயன் அளிக்கக்கூடிய எண்ணங்களையும் வார்த்தைகளையும் மட்டுமே அனுமதிக்க நாம் விழிப்புடன் இருக்க வேண்டும்.

## கடுமையான உலகில் மென்மையான பதில்கள்

ஒருவர் தன்னைச் சுற்றியுள்ள சூழலின்



தாக்கத்திற்கு ஆளாகாமல் இருப்பது கடினம். இன்றைய உலகம் பெரும்பாலும் கடுமையானதாகவும், மன்னிக்கும் மனப்பான்மை யற்றதாகவும், மாறுப்பட்ட கருத்துக்களைக் கொண்டவர்களை விமர்சிப்பதாகவும் உள்ளது.எண்ணங்களையும் வார்த்தைகளையும் கட்டுப்படுத்துவதற்காகக் கர்த்தர் அருளியுள்ள கருவிகளை உலகம் அங்கீகரிப்பதோ அல்லது பயன்படுத்துவதோ இல்லை. அந்தச் சரிவுப் பாதையைப் பின்பற்ற விரும்பாத விசுவாசிகள், தங்கள் எண்ணங்களையும் வார்த்தைகளையும உணர்வுபூர்வமாகக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். இவ்வகையில், மென்மையான பதில் என்பது வெறும் நல்ல பழக்கவழக்கம் சார்ந்த விஷயம் மட்டுமல்ல, அது காத்துக்கொள்ளப்பட்ட ஓர் இருதயத்தின் சான்றாகும். மற்றவர்களைத் திருத்த வேண்டிய அவசியம் ஏற்படும் போது , அந்த நபரை இழிவுபடுத்தாமல் அந்த நபரின் தவறைச் சரிசெய்வதே நோக்கமாக இருக்க வேண்டும். மென்மையான பதில் பெரும்பாலும் சிறந்ததொரு எதிர்வினையைக் கொண்டுவரும், அத்துடன் அது கடவுளின் அன்பை மிகச் சரியாகப் பிரதிபலிக்கும்.

"கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைக ளெவைகளோ, நீதியுள்ளவைக ளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ள வைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள். " (பிலிப்பியர் 4:8)பிறரிட மிருந்து கற்றல் அறிஞர்கள் அறிஞர்களிட மிருந்து கற்றுக்கொள்கிறார்கள்

## பிறரிடமிருந்து கற்றல்

# ஞானிகள் ஞானிகளிடமிருந்து கற்றுக்கொள்கிறார்கள்



"ஞானிகளோடே சஞ்சரிக்கிறவன் ஞானமடைவான், மூடருக்குத் தோழனோ நாசமடைவான்." (நீதிமொழிகள் 13:20)

- Jim Parkinson

மேலே உள்ள மையக் கருத்து, நம்மைச் சுற்றி இருக்க நாம் தேர்ந்தெடுக்கும் நபர்கள் நமது குணநலன் வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கிறார்கள் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது.

இதிலிருந்த நாம் அறிந்துகொள்வது என்னவென்றால், ஞானிகளுடன் நடப்பதன் மூலம் - அதாவது அவர்களின் அறிவுரைகளைக் கேட்டு, அவர்களின் முன்மாதிரியிலிருந்து கற்றுக்கொள்வதன் மூலம் - நாமும் ஞானிகளாக மாற முடியும். இதற்கு மாறாக, நாம் சீர்கேடு விளைவிக்கும் தாக்கங்களைத் தவிர்க்கவும், தெளிவான மனசாட்சியைப் பேணவும் வேண்டும். இவ்விதமாக, ஒரு கிறிஸ்தவர் தன் இருதயத்தைக் காத்துக்கொள்ள வேண்டிய மற்றொரு நடைமுறை வழியை நீதிமொழிகள் 13:20 நமக்குக் காட்டுகிறது . அதாவது, நம்மைச் சூழ்ந்துகொள்ளவும் நம்மை வடிவமைக்கவும் நாம் அனுமதிக்கும் தாக்கங்களை கவனமாகத் தேர்ந்தெடுப்பதே அந்த வழியாகும். பாவத்திலிருந்து இருதயத்தைக் காத்துக்கொள்ளவும், கடவுளுடன் நெருங்கிய ஐக்கியத்தைத் தக்கவைத்துக்கொள்ளவும் விரும்பும் எவருக்கும் இது ஒரு முக்கியமான கொள்கையாகும்.

**பேசுவதை விடக் கேட்பதன் மூலம் நான் அதிகம் கற்றுக்கொள்ள முடியும்**

ஞானத்தைத் தேடுவதன் நோக்கம், நம் இருதயத்தை எப்படிக் காத்துக்கொள்வது என்பதைச் சிறப்பாகப் புரிந்துகொள்வதே ஆகும். ஞானமுள்ளவர்களுடன் இணைந்து நடப்பதன் பலன்களை நாம் பெற வேண்டுமானால், முதலாவதாக, ஆண்டவருக்கு உகந்த ஞானத்தைக் கற்றுக்கொள்ளக்கூடியவர்களின் வார்த்தைகளுக்குச் செவிசாய்க்கவும், நம் பேச்சை நிறுத்தி அமைதி காக்கவும் நாம் தயாராக இருக்க வேண்டும்.

தற்போதைய கலாச்சாரச் சூழலைக் கருத்தில் கொள்ளுங்கள். நம் விரல் நுனியில் தடையின்றி கிடைக்கும் தகவல்கள் நிறைந்த உலகில் வாழ்ந்த போதிலும், நாம் மூளை யுகத்தில் Brain Age அல்ல, பாதுகாப்பின்மை யுகத்திலேயே வாழ்கிறோம். தாழ்வு மனப்பான்மை கொண்டவர்கள் பொதுவாக தாங்களே அதிகம் பேச வேண்டும் என்று பிடிவாதமாக இருப்பார்கள், ஆனால் தங்களுக்கு எல்லாம் தெரியும் என்று நினைப்பவர்கள் புதிதாக எதையும் கற்றுக்கொள்வதற்கு மிகக் குறைந்த இடத்தையே விட்டுவைக்கிறார்கள்.

பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு இருதயம், செவிச் சாய்க்கும் அளவுக்குத் தாழ்மையுள்ளதாக இருக்க வேண்டும். பேசுவதைவிடக் கேட்பதன் மூலமே நாம் அதிகம் கற்றுக் கொள்கிறோம். ஞானமான அறிவுரைகளைக் கேட்டுப் பயனடைந்தவர்கள் அல்லது அவற்றை நிராகரித்துத் துன்பமடைந்தவர்கள் குறித்த சில வேதப்பூர்வமான உதாரணங்களைச் சிந்திக்கப் பாருங்கள். தாவீது இராஜாவின் மகனான அம்னோன் தன் சகோதரியின் பேச்சைக் கேட்க மறுத்தான், இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, அதனால் அவன் தன் உயிரையே இழக்க நேரிட்டது. (2சாமுயேல் 13)"இராஜாவாகிய தாவீது தனது படைத்தலைவனும் சகோதரி மகனுமான யோவாபின் பேச்சைக் கேட்காமல், (போருக்குச் செல்வதற்காக) மக்களைக் கணக்கெடுத்தார். இதனால் 70,000 பேர் தங்கள் உயிரை இழந்தனர் (2சாமுயேல் 24)முன்னதாக, தாவீது என்னும் இளைஞனின் வார்த்தைகளுக்குச் சவுல் இராஜா செவிசாய்த்தபோது, கோலியாத் என்னும் ராட்சிதனின் அச்சுறுத்தலிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டார், எஞ்சியிருந்த பெலிஸ்திய எதிரிகள் ஓடிப்போனார்கள். மேலும் எதிரிகளின் பாளையம் கொள்ளையிடப்பட அவர்களுக்குக் கிடைத்தது. (1சாமுயேல்17:31)

யூதர்களின் தலைவனும் பரிசேயனுமான நிக்கொதேமு, இயேசுவிடம் வந்து, " ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் " என்று கூறினார். "பின்வருமாறு கூறினார். (யோவான் 3:1,2)இருப்பினும், பரிசேயர்கள்,



வேதபாரகர்கள் மற்றும் சதுசேயர்கள் ஆகியோரில் பெரும்பாலோர் இயேசுவிடம் குறை காணவே முயன்றனர் (மத்தேயு21-22) "எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருப்பதை நீங்கள் காணும் போது அதின் அழிவு சமீபமாயிற்றென்று அறியுங்கள்." என்று இயேசு பேசிய போது அவருடைய சீடர்கள் அதைக் கவனித்துக் கேட்டனர். மேலும், "அப்பொழுது யூதேயாவிலிருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகவும், எருசலேமிலிருக்கிறவர்கள் வெளியே புறப்படவும், நாட்டுப்புறங்களிலிருக்கிறவர்கள் நகரத்தில் பிரவேசியாமலிருக்கவும் கடவர்கள். (லூக்கா 21:20)என்று இயேசு கூறினார்.

கிபி 68 ல் வெஸ்பாசியனின் ரோமானியப் படை (Vespasian's Roman army) எருசலேமை நோக்கி முன்னேறி, 69 -ல் பின்வாங்கியதை அவர்கள் கண்டபோது, அவர்கள் யோர்தான் நதியைக் கடந்து தப்பிச் சென்றனர். அடுத்த ஆண்டு, நகரத்தையும் ஆலயத்தையும் அழிப்பதற்காக தீத்து இராயன் ரோமானியப் படையை மீண்டும் அழைத்து வந்தான், அப்போது பல பரிசேயர்கள் தங்கள் உயிரை இழந்தனர், சதுசேயர்கள் தங்கள் உயிரையும், வாழ்வாதாரத்தையும் இழந்தனர்.

அதேபோல, சுவிசேஷ யுகத்தின் இந்த இறுதிக் கட்டத்தில் நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். "வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன், பாழாக்கும் அருவருப்பு பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது...." (மத்தேயு24:15-18) எனவே நாம், "அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வரவேண்டும்.." (வெளிப்படுத்துதல் 18:1-5) அதேபோல, நம்முடைய ஆவிக்குரிய வாழ்வும் ஆபத்தில் இருக்கக்கூடும். இந்தத் தீவிரமான எச்சரிக்கைக்குக் கண்டிப்பாகச் செவிசாய்ப்போம். "உன் செவியைச் சாய்த்து, ஞானிகளுடைய வார்த்தைகளைக் கேட்டு, என் போதகத்தை உன் இருதயத்தில் வை. உன் நம்பிக்கை கர்த்தர் மேல் இருக்கும்படி, இன்றையதினம் அவைகளை உனக்குத் தெரியப்படுத்துகிறேன்." (நீதிமொழிகள் 22:17, 19)

## தவறுகளிலிருந்து கற்றுக்கொள்ளுதல்

வெற்றிகரமான ஒரு மனிதரிடம் நடத்தப்பட்ட புகழ்பெற்ற நேர்காணல் ஒன்று உண்டு. "நீங்கள் எப்படி இவ்வளவு பெரிய வெற்றியை அடைந்தீர்கள்? - சரியான முடிவுகள். சரியான முடிவுகளை எடுக்க உங்களுக்கு எப்படி முடிந்தது? - அனுபவங்கள் - அப்படியானால், அந்த அனுபவம் உங்களுக்கு எப்படி கிடைத்தது? தவறான முடிவுகள் எடுத்ததன் விளைவாக!

ஞானம் : ஒரு நல்ல மனிதன் தன் தவறுகளிலிருந்து கற்றுக்கொள்கிறான். ஒரு ஞானியோ மற்றவர்களின் தவறுகளிலிருந்து கற்றுக்கொள்கிறான். வேதாகமத்தில் நமக்காகப் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள நல்ல மற்றும் தீய உதாரணங்கள் ஆகிய இரண்டிலிருந்தும் கற்றுக்கொண்டு, ஞானிகளுடன் இணைந்து நடக்க விரும்பும் கிறிஸ்தவருக்கு இது மிகவும் பயனுள்ளதாகும்.

## நாம் நமது சூழலால் பாதிக்கப்படுகிறோம். ஆனால், அதன் விளை பொருட்களால் அல்ல

நேர்மையற்ற மற்றும் பிடிவாத குணம் கொண்டவர்களை நெருங்கிய நண்பர்களாக ஆக்கிக்கொள்ளக்கூடாது. அதேவேளையில், மனந்திரும்பும் பாவிகள் தங்கள் போக்கை மாற்றிக்கொள்ள உதவவும் அவர்களை ஊக்குவிக்கவும் நாம் தயாராக இருக்க வேண்டும். ஏனெனில், "உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்." (1கொரிந்தியர் 6:9-11) "உங்கள் போதகர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனம் பண்ணுகிறதென்னவென்று" பரிசேயர்கள் இயேசுவின் சீஷர்களிடம் கேட்டார்கள். அது நியாயமான கேள்விதானே? ஆயினும், இயேசு அவர்களைத் தேடிச் சென்றதைவிட, வரி வசூலிப்பவர்களும் பாவிகளுமே இயேசுவிடம் வந்தார்கள். (மத்தேயு 9:10-13) வரி வசூலிப்பவரான மத்தேயு, இயேசுவின் சீஷராக அப்பொழுது அழைக்கப்பட்டிருந்தார். அப்போது மற்ற வரி வசூலிப்பவர்களுக்கும் ஆர்வம் ஏற்பட்டிருக்காதா? ஒருவேளை தங்கள் வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்வது குறித்தும் அவர்கள்



சிந்தித்திருக்கலாம். இயேசு அவர்களைத் திருப்பி அனுப்பியிருக்க வேண்டுமா? மாறாக, மனம்மாறுவதற்கும் நேர்மையான வாழ்க்கை வாழ்வதற்குமான வழியை அவர் அவர்களுக்குக் காட்டினார்.

சக கிறிஸ்தவர்களுக்குப் பெரும் தீங்கிழைத்த ஒருவருடன் நட்புகொள்வதைப் பற்றி யார் நினைத்திருப்பார்கள்? ஆயினும், தர்சு நகரத்தைச் சேர்ந்த சவுலிடம் (பிற்காலத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் என்று அறியப்பட்டவர்) ஏற்பட்ட மாற்றத்தை பர்னபா விரைவாகக் கண்டுகொண்டார் (அப்போஸ்தலர் 9:26- 28, 11:22-30) மனந்திரும்பும் இன்றைய வரிவசூலிப்பவர்களையும் பாவிகளையும் உற்சாகப்படுத்துவதில் நாமும் விழிப்புடன் இருப்போமாக.

அப்போஸ்தலனாகிய பவுல்

தீமோத்தேயுவை எச்சரித்தார் - அவ்வாறே இப்பொழுது நம்மையும் எச்சரிக்கிறார் - "கடைசி நாட்களில்" (அப்போஸ்தலனாகிய பேதுரு "கடைசி நாட்கள்" (பன்மை) என்பது முழு சுவிசேஷ யுகத்தில் உள்ளடக்கியது என்று பொருள் கொள்கிறார்) அப் 2:17

"கடைசி நாள் (ஒருமை) என்பது அதன் அறுவடை தொடங்கும்போதே ஆரம்பமாகிறது (யோவான் 6:39-40) ஆபத்தான காலங்கள் வரும், அப்போது மனிதர்கள்... தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும்... இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு. (2தீமோத்தேயு3:1-5) எந்த எச்சரிக்கை அந்த மக்களுக்கு எதிரானது மட்டுமல்ல, அவர்களை ஆளும் மனப்பான்மைக்கு எதிரானதுமாகும். இருதயத்தைப் பாதுகாக்க வேண்டுமானால், சுயநலம், அகங்காரம் அல்லது பரிசுத்தமற்ற தாக்கங்களால் அது வடிவமைக்கப்படக்கூடாது. (1கொரிந்தியர் 15:33)

அதே வேளையில், பவுல் ஒரு தேவையான சமநிலையை அளிக்கிறார். ஒழுக்கக்கேடான செல்வாக்குகளிலிருந்து நாம் விலகி இருக்க வேண்டியிருந்தாலும், உலகத்தை நம்மால் முழுமையாகத் தவிர்த்துவிட முடியாது, ஏனெனில், அப்படிச் செய்வதற்கு நாம் "உலகத்தை விட்டு வெளியேற" வேண்டியிருக்கும். (1கொரிந்தியர் 5:9-13) இருப்பினும், பிரிதல் அவசியமாகும் போது, நம்முடைய மனப்பான்மை வெறுப்புணர்வை வெளிப்படுத்தாமல், திருத்தும் நோக்கத்தை கொண்டதாக இருக்க வேண்டும் : "மேலும், இந்த நிருபத்தில் சொல்லிய எங்கள் வசனத்துக்கு ஒருவன் கீழ்ப்படியாமற்போனால், அவனைக் குறித்துக்கொண்டு, அவன் வெட்கப்படும்படிக்கு அவனுடனே கலவாதிருங்கள். ஆனாலும் அவனைச் சத்துருவாக எண்ணாமல் சகோதரனாக எண்ணி, அவனுக்குப் புத்திசொல்லுங்கள்." (2தெசலோனிக்கேயர் 3:14-15)

யாருடைய நட்பை நாம் நாடுகிறோம் என்பதைத் கவனமாகத் தேர்ந்தெடுப்பதன் மூலம் நம் இருதயங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்றும், அதன் வழியாக இக்காலத்தில் மேலோங்கியிருக்கும் சுயநல மனப்பான்மையின் தாக்கத்திற்கு ஆளாவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் இந்த அப்போஸ்தலர் அறிவுரைகள் நமக்கு நினைவூட்டுகின்றன. இந்தக் கொள்கை நெருங்கிய நட்புக்கு மட்டுமல்லாமல், இவ்வுலகில் நாம் நடந்துகொள்ளும் முறைக்கும் பொருந்தும். உலகில் இருந்து தங்களால் முடிந்தவரை அதிகமாகப் பெற்றுக்கொண்டு, பதிலுக்கு மிகக் குறைவாகவே கொடுப்பதற்கு யாரும் முயற்சிக்கக் கூடாது. (எபேசியர் 4:28)

தம்மை அனுப்பிய இயேசு கிறிஸ்துவுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் ஒரு கிறிஸ்தவரின் மனப்பான்மை அமையலாமா ? நாம் ஒவ்வொருவரும் பெறுவதை விட அதிகமாகக் கொடுப்பதற்கு முயல வேண்டும். விவசாயம், தொழில் நுட்பம், கணக்கியல் அல்லது வேறு ஏதேனும் நேர்மையான பணி என எதுவாக இருந்தாலும், அது உலகிற்கு ஆசீர்வாதம் அளிப்பதாகவும், கிறிஸ்துவின் இராஜ்யத்தில் உலகிற்காக நாம் செய்யவிருக்கும் காரியங்களின் ஒரு முன்னோட்டமாகவும் அமையட்டும்.

நாம் பெறுவதை விட அதிகமாகக் கொடுக்கும் இந்த மனப்பான்மை, நமது பணிக்கு அப்பாலும் நீடிக்க வேண்டும். நம்மால் இயன்றவரை மற்றவர்களுக்கு உதவ வேண்டும். சில சமயங்களில் நாம் முன்னுரிமைகளைத் தீர்மானிக்க வேண்டியிருக்கும். "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம். (கலாத்தியர் 6:10) ஆயினும், நம் எதிரிகளைக்கூட நாம் புறக்கணிக்கக்கூடாது. "அன்றியும், உன் சத்துருபசியாயிருந்தால் அவனுக்குப் போஜனங்கொடு, அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு, நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய்." (ரோமர் 12:20).

**ஒரு நல்ல உதாரணத்தைக் கண்டால் அதைப் பின்பற்றுங்கள், நல்ல உதாரணம் ஏதும் இல்லையென்றால், நீங்களே ஒன்றை உருவாக்குங்கள்.**

என்னை பின்பற்றுங்கள்" (மத்தேயு8:22, 9:9) என்று இயேசு தம்முடைய சீஷர்களிடம் கூறினார். இதன் மூலம், நாம் இயன்றவரை அவரது முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அப்போஸ்தலனாகிய பவுல் அவ்வாறே செய்கிறார். நாமும் அதையே செய்யுமாறு நம்மை ஊக்குவிக்கிறார். "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" (1கொரிந்தியர் 11:1)

மிகவும் உண்மையுள்ள கிறிஸ்தவர்களைக் கூட நாம் வழிபடக் கூடாது என்றாலும், அவர்களின் முன்மாதிரிகளைக் கவனிப்பதன் மூலம் நாம் கற்றுக்கொள்ளலாம். நமக்கு அவ்வப்போது திருத்தம் தேவைப்படுகிறது. "மூடன் தன் தகப்பன் புத்தியை அலட்சியம் பண்ணுகிறான், கடிந்துகொள்ளுதலைக் கவனித்து நடக்கிறவனோ விவேகி." (நீதிமொழிகள் 15:5) நாம் செய்து கொண்டிருக்கும் காரியத்திற்குப் பதிலாக வேறு ஒன்றைச் செய்ய வேண்டும் என்று சில சமயங்களில் நம்மிடம் சொல்லப்படலாம். அந்த விமர்சனம் சரியா, தவறா, அல்லது அதில் இரண்டும் கலந்திருக்கிறதா? அத்தகைய கண்டிப்பை அமைதியாகக் கேட்டு, பின்னர் அதைச் சீர்தூக்கிப் பார்ப்பது நல்லது.

அத்தகைய அறிவு, நடைமுறைப்படுத்தப்படும்போதுதான் பயனுள்ளதாக அமைகிறது. அமலேக்கியர்களைக் குறித்துத் தான் என்ன செய்ய வேண்டும் என்பது சவுல் இராஜாவுக்குத் தெரிந்திருந்தது, ஆனால் அவர் அதற்கு மாறாகச் செயல்பட்டு, அதற்காகக் கடுமையான விலையைக் கொடுத்தார். (1சாமுயேல்15) எரிகோவிலிருந்து கிடைத்த கொள்ளைப் பொருட்களைக் குறித்து என்னச் செய்யக்கூடாது என்பது ஆகானுக்குத் தெரிந்திருந்து, அவன் அதைச் செய்தான் (யோசுவா 7) இதனால் முப்பத்தாறு இஸ்ரயேலர்கள் தங்கள் உயிரை இழந்தனர். இறுதியில் ஆகானும் அவரது குடும்பத்தினரும் கூட தங்கள் உயிரை இழக்க நேரிட்டது. இதற்கு மாறாக, நகரில் உள்ள அனைவரையும் கொல்லத் திட்டமிட்டிருந்த யோவாப் என்னும் போர்வீரனிடம் ஒரு ஞானமுள்ள பெண் பேசினாள், அவள் தனது ஞானமான

அறிவுரையால் அநேக மக்களைக் காப்பாற்றினாள். (2சாமுயேல் 20:16)"நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்." (யோவான்13:17)



அறிவைப் பெற்றிருப்பது பெரும்பாலும் ஒரு நல்ல விஷயம், ஆனால், அந்த அறிவை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று அறிவதே ஞானமாகும். நம் அன்றாட வாழ்வில் நல்ல முன்மாதிரிகள் இல்லை என்று நாம் கண்டால், நாம் சோர்வடையக் கூடாது. நம்மைச் சுற்றியுள்ளவர்களால் நாம் பாதிக்கப்பட முடியுமானால், அவர்களையும் நம்மால் பாதிப்புக்குள்ளாக ஆக்க முடியும். நாம் போதிப்பதை நாமே எவ்வாறு நடைமுறைப்படுத்துகிறோம் என்பதை மற்றவர்கள் காணச் செய்வதன் மூலம் இதைச் சிறப்பாகச் சாதிக்கலாம்.

எட்கர் கெஸ்ட் எழுதிய " Edgar Guest" (நாம் காணும் பிரசங்கங்கள் Sermons We See ) என்ற கவிதையில் வருவது போல - "பிரசங்கத்தைக் கேட்பதை விட, அதைக் கண்ணால் காண்பதையே நான் பெரிதும் விரும்புகிறேன், வெறும் வழியைச் சொல்வதை விட, என்னுடன் நடந்து வருவதையே நான் அதிகம் விரும்புகிறேன். "உங்கள் அண்டை வீட்டார் வாசிக்கும் ஒரே "வேதாகமம்" உங்கள் வாழ்க்கையாகவே இருக்கவேண்டும்.

## தெளிவான மனசாட்சிக்கு ஈடானவை வாழ்வில் மிகச்சிலவற்றை

நம்மைச் சுற்றியுள்ள தாக்கங்களை கவனமாகச் சிந்தித்துப் பார்க்குமாறு வேதாகமம் நம்மை அறிவுறுத்துகிறது. நம் இருதயத்தை நாம் திறம்படக் காத்துக்கொள்ள விரும்பினால், நீதியில் வளர நம்மை ஊக்குவிக்கும் தோழர்களையே நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். நாம் கவனக்குறைவாக இருந்தால், நம்மை வடிவமைக்க நாம் அனுமதிக்கும் தாக்கங்களுக்கு ஏற்ப நமது வளர்ச்சி திசைமாறிப்போகக்கூடும். உதாரணமாக, உலகில் வஞ்சகம் பரவலாகக் காணப்படுகிறது. "யாருக்கும் தெரியாது" என்ற உறுதியின் மூலம், ஒரு நபர் இலாபகரமான அல்லது மகிழ்ச்சிக்குரிய, ஆனால் அவமானகாரமான ஒரு செயலில் ஈடுபடத் தூண்டப்படலாம். இருப்பினும், அத்தகைய சோதனைகளுக்கு நாம் அடிபணியும்போது, நம்மிடம் உள்ள மிக மதிப்புமிக்க சொத்துக்களில் ஒன்றான தெளிவான மனசாட்சியை இழந்துவிடுவோம். இன்னும் மோசமான விஷயம் என்னவென்றால், மறைத்து வைக்கப்பட்ட பாவம் இருதயத்தை அச்சத்திற்கு ஆளாக்குகிறது. நம்மைப் பாவத்தில் தள்ளிய அதே காரணிகள், அந்தப் பாவத்தைப் பற்றிய அறிவைப் பயன்படுத்தி, நம்மை மேலும் சமரசங்களுக்கு இணங்கிப்போகும்படி கட்டாயப்படுத்தக்கூடும்.

"கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள், அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள், உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்." (மத்தேயு7:15) என்று இயேசு கூறியிருக்கிறார். தம் வாழ்வின் இறுதி நாட்களை நெருங்கும் போது, அப்போஸ்தலனாகிய பவுல் " நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்." (அப்போஸ்தலர் 20:29, 30) என்று கூறி மேலும் எச்சரித்தார்.

உலகிலும் சபையிலும் அத்தகைய தாக்கங்களைத் தவிர்க்கவும், அதற்குப் பதிலாக, கிருபையிலும் அறிவிலும் நாம் வளர உதவும் தாக்கங்களை நாட நாம் முயல வேண்டும். அதே சமயம், சங்கீதக்காரர் வெளிப்படுத்திய மனப்பான்மையையும் நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும். "தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான், தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்." (சங்கீதம் 51:17)

பாவம் செய்துவிட்டு மனம் வருந்துபவருக்கு ஆறுதல் அளிக்க நாம் தயாராக இருக்க வேண்டும், அதே வேளையில், நாமே சோதனையில் வீழ்ந்துவிடாமல் இருப்பதிலும் கவனமாக இருக்க வேண்டும். ."கற்பனையின் பொருள் என்னவெனில், சுத்தமான இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே." இதுவே நம் ஒவ்வொருவருக்கும் இலக்காக இருக்க வேண்டும். (1தீமோத்தேயு1:5)

சரியானதைச் செய்வதற்கு ஒருவருடைய மனசாட்சி அவரை எப்போதாவது உறுத்துமா? ஒவ்வொரு கிறிஸ்தவரும் இதைச் சிந்தித்துப் பார்க்கட்டும் : - குற்ற உணர்வற்ற மனசாட்சியைப் பராமரிப்பது, அதைச் சரிசெய்வதை விட எளிதானது. நம்மைச் சுற்றி

கோபப்படுவதில் நிதானம்

# சுயக்கட்டுப்பாட்டின் முக்கியத்தவம்



"பலவானைப்பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன், பட்டணத்தைப் பிடிக்கிறவனைப்பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்" (நீதிமொழிகள் 16:32) ) — Ernie Kuenzli

மேலே உள்ள மையக் கருத்து, நமது ஆவியை ஆளுகை செய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. இதைச் செய்வதற்கு, ஒருவர் சுயக்கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும்.

அவ்வாறு செய்வது ஒரு கிறிஸ்தவர் தன் இருதயத்தைக் காத்துக்கொள்ளும் வழியாகும், ஏனெனில், இது சுயநலம் தன் உள்ளான வாழ்க்கையை ஆளாதிருப்பதை உறுதி செய்கிறது.

நீதிமொழிகள் 16:32 இந்தச் சுயக் கட்டுப்பாட்டை ஒரு நகரத்தைக் கைப்பற்றும் செயலோடு ஒப்பிடுகிறது. மேலும் வெளிப்புற எதிரிகளை வெல்வதைவிட இருதயத்தின் உந்துதல்களை வெல்வதே மேலான வெற்றி என்று இது கற்பிக்கிறது. நீதிமொழியின் முதல் பகுதி, கோபத்தைக் கட்டுப்படுத்துவதில் உள்ளசிரமத்தை வலியுறுத்துகிறது. கோபம் விரைவாகத் தோன்றி வெளிப்படத் துடிக்கிறது. அத்துடன், அது வெடித்து வெளிப்பட்ட பிறகு பெரும்பாலும் தன்னைத்தானே நியாயப்படுத்திக்கொள்ளவும் முயல்கிறது. இருதயத்தைப் பாதுகாக்க வேண்டுமானால், அத்தகைய உந்துதல்கள் கட்டுப்பாடின்றி ஆதிக்கம் செலுத்த அனுமதிக்கக்கூடாது.

புதிய ஏற்பாட்டிலும் சுயக்கட்டுப்பாட்டின் மீதான அதே முக்கியத்துவத்தை நாம் காண்கிறோம். கிறிஸ்தவப் பண்புநலனை விவரிக்கும்போது, அப்போஸ்தலனாகிய பேதுரு இவ்வாறு எழுதுகிறார்."இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே ...கூட்டி வழங்குகள். இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்." (2பேதுரு 1:5,6,10,11) சுயக்கட்டுப்பாடு என்பது கிறிஸ்தவப் பண்பின் இன்றியமையாத ஒரு கூறாகவும், இருதயத்தைக் காத்துக் கொள்வதற்கு மிக அவசியமான ஒன்றாகவும் இருக்கிறது.

கிறிஸ்தவப் பண்பின் மிக முக்கியமான ஒரு பகுதியாகத் தன்னடக்கத்தையும் அப்போஸ்தலனாகிய பவுலும் குறிப்பிடுகிறார். " பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள், ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம். ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன், ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன். மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்." (1கொரிந்தியர் 9:24-27)

### சுயக்கட்டுப்பாடு அல்லது இச்சையடக்கம் குறித்த ஐந்து குறிப்புகள்

1கொரிந்தியர் 9 ஆம் அதிகாரத்தில், சுயக்கட்டுப்பாடு குறித்து அப்போஸ்தலர் ஐந்து முக்கியமான கருத்துகளை முன்வைக்கிறார்.

- முதலாவதாக, "வெற்றிபெறும் வகையில் ஓடுங்கள்" (வசனம் 24) என்று அவர் நம்மை ஊக்குவிக்கிறார். கிறிஸ்தவ வாழ்க்கை என்பது குறிக்கோளற்று அலைவதல்ல, மாறாக, நமக்கு முன்னால் ஒரு பரிசு வைக்கப்பட்டிருக்கும் ஒரு ஓட்டப்பந்தயமாகும்.

- இரண்டாவதாக, ஒரு விளையாட்டு வீரர் "எல்லாவற்றிலும் தன்னைத்தானே கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார்" (வசனம் 25) என்பதைப் பவுல்

நமக்கு நினைவூட்டுகிறார். வெற்றிபெறும் ஒரு விளையாட்டு வீரர், வெற்றியை அடைவதற்காகத் தனது வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் கட்டுப்படுத்துகிறார். தனது வெற்றிக்கு உறுதியளிக்கும் வகையிலேயே அவரது கால அட்டவணை, உணவுமுறை, பயிற்சி, எண்ணங்கள் மற்றும் மனப்பான்மை ஆகியவை வடிவமைக்கப்பட்டிருக்கும் நாமும் அவ்வாறே செய்ய வேண்டும்.

- மூன்றாவதாக, "நான் குறிக்கோள் இல்லாமல் ஓடுவதில்லை" என்று பவுல் கூறினார். (வசனம் 26) கவனச்சிதறலுக்கு அவர் இடமளிக்கவில்லை. மாம்ச இச்சைகளுக்கு அடிபணிந்து வாழ்ந்து கொண்டு, அதே வேளையில் நல்லதொரு ஆவிக்குரிய பலனை எதிர்பார்க்கும் நிலையை அவர் அனுமதிக்கவில்லை. வெற்றியெனும் குறிக்கோளே அவரது கிறிஸ்தவ வாழ்க்கையை வழிநடத்தியது.

- நான்காவதாக, பவுல் இவ்வாறு கூறினார் - "நான் காற்றில் சிலம்பம் பண்ணுகிறவன் அல்ல, உண்மையாகவே போராடுகிறேன்" (வசனம் 26)தனது ஆவிக்குரிய நல்நிலை ஆபத்தில் இருப்பதை உணர்ந்து பவுல், அதற்காகப் போராட வேண்டியிருந்தது.

- ஐந்தாவதாக, பவுல் இவ்வாறு முடிக்கிறார் - "நான் என் சரீரத்தை ஒடுக்கி, அதை கீழ்படுத்துகிறேன்" (வசனம் 27) சுயக்கட்டுப்பாடு என்பது மாம்சத்தின் மீதும் செலுத்தப்பட வேண்டும், அது மாம்சத்தை "புதிய சிருஷ்டிக்கு" அடிபணிந்த ஊழியக்காரனாக மாற்ற வேண்டும். மற்றவர்களுக்குப் பிரசங்கித்த பிறகு, தாமே தகுதியற்றவராகப் போய்விடக்கூடாது என்பதே பவுல் எதிர்பார்க்கிறார். உண்மையுடன் கடைப்பிடிக்கப்படும்போது, ஒரு கிறிஸ்தவர் வெற்றியை நோக்கி முன்னேறுகையில், இந்தச் சுயக்கட்டுப்பாடு அவரது இருதயத்தைக் காக்கிறது.

## இயேசு சுயக்கட்டுப்பாட்டிற்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தார்

நமது ஆண்டவராகிய இயேசுவின் முதல் வருகையின்போது, சுயக்கட்டுப்பாடு அவருடைய ஒரு முக்கிய பண்பாகத் திகழ்ந்தது. இயேசுவுக்கு வெறும் 12 வயதாக இருந்தபோதே, தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்காக அவர் தம்மைத்தாமே கட்டுப்படுத்திக்கொண்டார். (லூக்கா 2:41-49) பிதாவின் வார்த்தைகளைப் பேசுவதற்கு அவர் தம்மைத்தாமே கட்டுப்படுத்திக்ககொண்டார். " ஆதலால் இயேசு அவர்களை நோக்கி - நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தின பின்பு, நானே அவரென்றும், நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள்."(யோவான் 8:28)

பிதாவின் வார்த்தைகளைப் பேசுவதற்கு அவர் தம்மைத்தாமே கட்டுப்படுத்திக்கொண்டார். இயேசுதனக்கென எந்தவொரு முன்னேற்போ அல்லது சுய விருப்பமோ இல்லாதவாறு தம்மைத்தாமே கட்டுப்படுத்திக்கொண்டார். "நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை, நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன், எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நிதியாயிருக்கிறது. " (யோவான் 5:30)கெத்செமனே தோட்டத்தில் " ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று"(மத்தேயு26:39)அவர் பரலோகத் தந்தையிடம் உண்மையுடன் ஜெபித்தபோது, தேவனுக்கு அவர் கீழ்ப்படிந்தது அழகாக எடுத்துக்காட்டப்பட்டது. தனது பரலோகத் தந்தை தனக்காக வகுத்த பாதையை விட்டு விலகும்படி, எந்தவொரு மாம்ச இச்சையையும் அவர் அனுமதிக்கவில்லை. கடவுளுக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்த நிலையில், சோதனையிலிருந்து தன் இருதயத்தை அவர் முழுமையாகக் காத்துக்கொண்டார்.

## திருச்சபைக்கு சுயக்கட்டுப்பாடு மிக அவசியம்

தேவன் சபையிடமிருந்தும் அதே அளவிலான சுயக்கட்டுப்பாட்டை எதிர்பார்க்கிறார். சுயக்கட்டுப்பாட்டின் மூலம் தேவனுடைய சத்தியம் மற்றும் நீதியின் கோட்பாடுகளுக்கு ஏற்ப அந்தத் தெய்வீகத் தன்மையைச் சரியாக வழிநடத்துகிறவர்களுக்கு மட்டுமே, அவர் அந்த தெய்வீக இயல்பின் வல்லமையை அருளுவார். "மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள், ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள். "(ரோமர் 8:13) என்று அப்போஸ்தலர் விளக்குகிறார்.

பரிசுத்த ஆவியின் மூலம் சரீரத்தின்

கிரியைகளை அழிப்பது என்பது சுயக்கட்டுப்பாட்டிற்கான ஒரு பொருத்தமான விளக்கமாகும். இவ்விதமாக, தேவனுடைய ஆவி ஆளுகை செய்ய வேண்டிய இடத்தில் மாம்சம் ஆளுகை செய்வதற்கான அனுமதியை மறுப்பதன் மூலம் சுயக்கட்டுப்பாடு இருதயத்தைக் காத்துகொள்கிறது.



**சுயக்கட்டுப்பாட்டின் வரம்பு**

சுயக்கட்டுப்பாட்டின் வரம்பு விரிவானது, அது நம் வாழ்வின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியது. "பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள்." (1கொரிந்தியர் 9:25)

சுயக்கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட எதையும் எதிரி தனக்குரிய இலக்காக மாற்றிக்கொள்கிறான். எனவே, நம் இருதயத்தை முழுமையாகக் காத்துக்கொள்ள வேண்டுமானால், நம்முடைய எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் செயல்கள் ஆகியவற்றை ஆண்டவரின் சித்தத்திற்கு இசைவானதாக மாற்றிக்கொள்ள வேண்டும். இதைக் குறித்து பவுல் இதை இவ்வாறு விளக்குகிறார் - "அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்." (2கொரிந்தியர் 10:5) நாம் வீழ்ச்சியடைந்த, குறைபாடுள்ள ஜீவிகளாக இருப்பதால் சுயக்கட்டுப்பாடு மிக அவசியமாகும். (சங்கீதம் 51:5)

கடவுளுடனும், சத்தியம் மற்றும் நீதிக்கான அவருடைய கோட்பாடுகளுடனும் இணக்கமான நிலைக்கு வருவது நமக்கு அவசியமாகும். "எனக்கு உணர்வைத் தாரும், அப்பொழுது நான் உமது வேதத்தைப் பற்றிக்கொண்டு, என் முழு இருதயத்தோடும், அதைக் கைக்கொள்ளுவேன். உமது கற்பனைகளின் பாதையில் என்னை நடத்தும், நான் அதில் பிரியமாயிருக்கிறேன். என் இருதயம் பொருளாசையைச் சாராமல், உமது சாட்சிகளைச் சாரும்படி செய்யும். மாயையைப் பாராதபடி நீர் என் கண்களை விலக்கி, உமது வழிகளில் என்னை உயிர்ப்பியும்." என்று தாவீது சங்கீதம் 119:34-37ல் எழுதினார். கடவுளின் பிரமாணத்தைக் கடைப்பிடித்தல், அவருடைய கட்டளைகளின்படி நடத்தல், நம் இருதயங்களை அவருடைய சாட்சியங்களின் பக்கம் சாய்த்தல், அத்துடன் நேர்மையற்ற ஆதாயம் மற்றும் வீணான காரியங்களிலிருந்து நம் இருதயங்களையும் கண்களையும் விலக்குதல் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்த வேதப்பகுதியின்படி வாழ்வதற்கு சுயக்கட்டுப்பாடு அவசியமாகும்.



மற்ற கிறிஸ்தவப் பண்புகளுடன் ஒப்பிடுகையில் சுயக்கட்டுப்பாட்டின் முக்கியத்துவம் 2 பேதுரு 1:5-8 ல் காட்டப்பட்டுள்ளது. சுயக்கட்டுப்பாட்டிற்கு முன்னதாக, பேதுரு மூன்று பண்புகளைக் குறிப்பிடுகிறார் - விசுவாசம், சிறந்த ஒழுக்கம் மற்றும் அறிவு. (2பேதுரு 1:5-6) சுயக்கட்டுப்பாட்டிற்குப் பிறகு, பேதுரு மேலும் நான்கு பண்புகளைக் குறிப்பிடுகிறார். சகிப்புத்தன்மை, தேவபக்தி, சகோதர சிநேகம் மற்றும் அன்பு. (2பேதுரு 1:6-7)

ஒருவேளை, சுயக்கட்டுப்பாடு என்பது அறிவைத் தொடர்ந்து வருவதாக இருக்கலாம், ஏனெனில், எதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதையும் அதை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பதையும் நாம் கடவுளுடைய வார்த்தையைப் பற்றிய அறிவின் மூலமாகவே கற்றுக்கொள்கிறோம். விடாமுயற்சி, தேவபக்தி, சகோதர சிநேகம் மற்றும் அன்பு ஆகிய அனைத்தும் கிறிஸ்தவப் பண்பின் கூறுகளாகும், இவை நம் வாழ்வில் சத்தியம் மற்றும் நீதிக்கேற்ப சுயக்கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பதன் மூலம் உண்டாகின்றன. சுயக்கட்டுப்பாடு இல்லாவிட்டால், நம்முடைய வீழ்ச்சியடைந்த மனித இயல்புக்கு முரணான இந்த நற்பண்புகளை நம்மால் ஒருபோதும் வளர்த்துக் கொள்ள முடியாது.

**சுயக்கட்டுப்பாட்டை வளர்த்துக்கொள்வது**

## எப்படி?

ஒரு கிறிஸ்தவர் எவ்வாறு சுயக்கட்டுப்பாட்டை வளர்த்துக்கொள்வது ? முதலாவதாக, நாம் எதை நேசிக்கிறோம் என்பதை மாற்றுவதன் மூலம். வீழ்ச்சியடைந்த பூமிக்குரிய மனிதர்களாகிய நாம், பூமிக்குரியவற்றையே - அதாவது நம்மையே, நம் விருப்பங்களையே மற்றும் நம்மைச் சுற்றியுள்ளவர்களையே நேசிக்கிறோம். மாம்சத்தின் மீது சுயக்கட்டுப்பாட்டை வளர்த்துக்கொள்ள, நாம் இவ்வுலக விஷயங்களைவிட ஆவிக்குரிய விஷயங்களை அதிகமாக நேசிக்கப் பழக வேண்டும். நாம் எதை நேசிக்கிறோம் என்பதை மாற்றிக்கொள்ளாவிட்டால், மாம்சத்தின் மீது சுயக்கட்டுப்பாட்டைப் பெறுவதில் நாம் சிரமப்படுவோம். இதை செய்வதற்கு நாம் மாற்கு 12:30ல் இயேசு சொன்ன வார்த்தைகளை பின்பற்றவேண்டும். "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை." கடவுளை எல்லாவற்றிற்கும் மேலாக நேசிப்பது, அவருடைய சட்டத்தையும் கட்டளைகளையும் எல்லாவற்றிற்கும் மேலாக நேசிக்க நம்மை வழிநடத்துகிறது. கடவுளையும் அவருடைய சட்டத்தையும் எல்லாவற்றிற்கும் மேலாக நேசிப்பது, நமது சுயநலத்தையும் நமது சொந்த விருப்பப்படி செயல்படும் நாட்டத்தையும் நமது "புதிய சிருஷ்டிப்பின்" கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர உதவும்.

சுயக்கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பது என்பது, ஒரு போட்டியில் வெற்றிபெறத் தனது வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தையும் கட்டுப்படுத்தும் ஒலிம்பிக் விளையாட்டு வீரரைப் பின்பற்றுவதைப் போன்றதாகும். சுயக்கட்டுப்பாட்டின் மூலம் நாம் பின்வருவனவற்றைக் கட்டுப்படுத்துவோம்.

- நம் சிந்தனை - ஆவிக்குரிய ஞானத்தின் மீது கவனம் செலுத்துவதன் மூலம்.
- நம் நேரம் - அதை ஆண்டவரின் சேவையில் பயன்படுத்துவதன் மூலம்
- நம் பயிற்சி - நீதியின் கோட்பாடுகளில் கவனம் செலுத்துவதன் மூலம்.
- நம் ஆவிக்குரிய உணவு - சத்தியத்தின் வார்த்தைகளை உண்டு மகிழ்வதன் மூலம்.
- நம் வார்த்தைகளும் செயல்களும் - கிறிஸ்துவைப் போன்ற குணத்தைப் பெறும் நம் ஆவிக்குரிய இலக்கின் மீது அவற்றை மையப்படுத்துவதன் மூலம்.

நம் இருதயம் ஆவிக்குரிய காரியங்களில் நிலைத்திருக்கும் போது, சுயக்கட்டுப்பாட்டை நோக்கிய அடுத்த கட்டம் நம் சிந்தனையில் நிகழ்கிறது. சாலொமோன் கூறியது போல, நாம் யார் என்பதும் நாம் எப்படிப்பட்டவர்கள் என்பதும் நம் சிந்தனைகளாலேயே தீர்மானிக்கப்படுகிறன்றன. "அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்,.."(நீதிமொழிகள் 23:7)

நமது வாழ்க்கையும், குறிப்பாக நமது சொற்களும் செயல்களும் நமது எண்ணங்களிலிருந்தே உருவாகின்றன. நமது சிந்தனையை நாம் எவ்வளவு அதிகமாகக் கட்டுப்படுத்துகிறோமோ, அவ்வளவு அதிகமாக நமது சொற்களையும் செயல்களையும் கட்டுப்படுத்த முடியும். .

அப்போஸ்தலனாகிய பவுல், இதை எப்படிச் செய்வது என்பதை 2கொரிந்தியர் 10:5 ல் நமக்குக் கற்பிக்கிறார். "அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்து கிறவர்களாயிருக்கிறோம்."

இது மலைக்க வைப்பதாகத் தோன்றலாம், ஆனால்2தீமோத்தேயு 1:7ல் பவுல் எழுதுவதுபோல, கர்த்தர் நமக்கு உதவி அளிக்கிறார். "தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்."

பரிசுத்த ஆவியின் மூலம், கடவுள் நமக்குக் கட்டுப்பாட்டு உணர்வையோ அல்லது சுயக் கட்டுப்பாட்டையோ அருளியிருக்கிறார். நம்முடைய சிந்தனைகளைத் தம் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளக் கடவுளுடைய பரிசுத்த ஆவியை நாம் அனுமதிக்க வேண்டும். ஒலிம்பிக் விளையாட்டு வீரர்கள் தங்கள் போட்டி குறித்துச் சிந்திப்பதிலும், அதற்கான உத்திகளைத் திட்டமிடுவதிலும், போட்டியின் காட்சிகளைத் தங்கள் மனக்கண்ணில் ஓட்டிப் பார்ப்பதிலும் அதிக நேரத்தைச் செலவிடுகிறார்கள். போட்டி தொடங்கும்போது என்ன நடக்கும் என்பதற்கு இது அவர்களைத் தயார்படுத்துகிறது. கிறிஸ்தவருக்கும் இதே கொள்கை பொருந்தும். நாம் நமது சிந்தனையை நமது நிகழ்வின் மீது - அதாவது கிறிஸ்தவ வாழ்வுப் பயணத்தின் மீது - செலுத்த வேண்டும். பிலிப்பியர் 4:8



ல் அப்போஸ்தலனாகிய பவுல் நம்முடைய சிந்தனைக்கான அளவுகோலை நமக்கு அளிக்கிறார். "கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்."

எபேசியர் நிருபத்தில் பவுல் எழுதியுள்ளபடி, நம்முடைய நேரம் ஆண்டவருக்குச் சேவை செய்வதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். "நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்." (எபேசியர் 5:16) ஒலிம்பிக் விளையாட்டு வீரர்கள் தங்கள் தயாரிப்பு, பயிற்சி மற்றும் போட்டியின் போது இதைத்தான் செய்கிறார்கள். ஒவ்வொரு கணமும் அவர்களின் நிகழ்ச்சிக்கான ஆயத்தப் பணிகளுக்கே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது, நாமும் இந்த முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும். கொலோசேயர் 4:5 ல் உள்ள பவுலின் அறிவுரையை நாம் பின்பற்றுவோம். "புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து, காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்."ஒலிம்பிக் விளையாட்டு வீரர்கள் போட்டிகளுக்குத் தயாராவதற்காகத் தொடர்ந்து பயிற்சி செய்கிறார்கள்..அவர்கள் நூற்றுக்கணக்கான மணிநேரங்கள் பயிற்சி செய்கிறார்கள், ஆயிரக்கணக்கான செயல்முறைத் தொகுதிகளைச் செய்து காட்டுகிறார்கள். ஆயிரக்கணக்கான சுற்றுகள் நீந்துகிறார்கள் மற்றும் ஆயிரக்கணக்கான மைல்கள் ஓடுகிறார்கள். தங்கள் திறனை மேம்படுத்திக்கொள்ள அவர்கள் தொடர்ந்து பயிற்சி செய்கிறார்கள். நீதியில் பயிற்சி பெறுவதிலும் நாம் அந்த முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும்."உம்முடைய சத்தியத்திலே என்னை நடத்தி, என்னைப் போதித்தருளும், நீரே என் இரட்சிப்பின் தேவன், உம்மை நோக்கி நாள் முழுதும் காத்திருக்கிறேன். "(சங்கீதம் 25:5) என்று தாவீது எழுதுகிறார். ஒரு பயிற்சியாளரைப் போல, கடவுள் நமக்குத் தம்முடைய நீதியைப்போதித்து, அதைக் கடைப்பிடித்துப் பழகும் வகையிலான அனுபவங்களையும் நமக்குத் தருவார்.

ஒலிம்பிக் விளையாட்டு வீரர்கள் தங்கள் உணவுமுறையை கவனமாக நிர்வகிப்பார்கள். ஏனெனில், அது அவர்களின் செயல்திறனைப் பெரிதும் பாதிக்கக்கூடும். தங்கள் வலிமையையும் சகிப்புத்தன்மையையும் அதிகப்படுத்தும் வகையிலான ஆரோக்கியமான உணவுகளை அவர்கள் உட்கொள்கிறார்கள். நாமும் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்குப் பயனளிக்கும் வகையில் நாம் உட்கொள்ளும் உணவைக் கட்டுப்படுத்த வேண்டும்.

இது எரேமியாவின் வார்த்தைகளை நமக்கு நினைவூட்டுகிறது, ."உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன், உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது." (15:16) நாம் தேவனுடைய வார்த்தையை நம் இருதயங்களிலும் மனதிலும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இவ் வார்த்தைகள் நம்முடைய "புதிய சிருஷ்டி"எனும் மனதிற்கு மகிழ்ச்சியையும் பேரின்பத்தையும் அளிக்கின்றன. இவற்றை நம்முள் ஆழமாகப் பதித்துக்கொள்வது, இயேசுவின் சாயலில் வளர நமக்கு உதவும். "அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது. அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன், அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலன் உண்டு." என்று தாவீது சங்கீதம் 19:10-11ல் எழுதுகிறார். விவேகமான விளையாட்டு வீரர்கள் தாங்கள் பேசுவதில் கவனமாக இருப்பார்கள். தற்பெருமை பேசும் அல்லது பொருத்தமற்ற கருத்துகள், அவர்கள் தங்கள் தயாரிப்பு மற்றும் போட்டியின் மீதான கவனத்தைச் சிதறடிக்கக்கூடும்.

சுயக்கட்டுப்பாடு என்பது, கடவுளுக்குப் புகழைச் சேர்க்கும் வகையிலும், நம் சகோதரர்களுக்கும் சக மனிதர்களுக்கும் உதவும் வகையிலும் நாம் பேசுவதைக் கட்டுப்படுத்துவதைக் குறிக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் பெஸ்துவை பார்த்து, " கனம் பொருந்திய பெஸ்துவே, நான் பயித்தியக்காரனல்ல, சத்தியமும் சொஸ்தபுத்தியுமுள்ள வார்த்தைகளைப் பேசுகிறேன்." என்று கூறினார். (அப்போஸ்தலர் 26:25) "நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது."(யோவான் 6:63) என்று இயேசு தம் சீஷர்களிடம் கூறினார். இயேசுவும் பவுலும் சத்தியத்தை உரைத்தார்கள், கடவுளைப் புகழ்ந்தார்கள், மேலும் கடவுளைத் தேடிக்கொண்டிருந்த அனைவருக்கும் ஊக்கமளிக்கவும் உதவவும் முயன்றார்கள் நாமும் அவர்களைப் பின்பற்றுவோமாக. "ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம். " (எபிரெயர் 13:15)

புத்திசாலித்தனமான விளையாட்டு வீரர்கள் தாங்கள் செய்யும் விஷயங்களில் கவனமாக இருப்பார்கள். பயிற்சியில் தாங்கள் செலவிட்ட நேரத்தையும் உழைப்பையும் வீணடிக்கவோ, அல்லது விவேகமற்ற செயல்களால் காயம் அல்லது தகுதி நீக்கம் போன்ற ஆபத்துகளுக்கு உள்ளாகவோ அவர்கள் விரும்புவதில்லை. நாமும் அதே அணுகுமுறையைக் கையாள வேண்டும். சுயக்கட்டுப்பாடு என்பது நமது செயல்களைக் கடவுளின் சித்தத்திற்கு இசைவானதாக மாற்ற வேண்டும். "நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள், அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்."(பிலிப்பியர் 4:9) "சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ள.." வேண்டும். (கொலோசேயர் 1:10)

இதிலிருந்து ஒரு முடிவை நாம் அறியலாம் - சுயநலமின்மையிலிருந்தே சுயக்கட்டுப்பாடு பிறக்கிறது. சாத்தான், யூதாஸ், அனனியா மற்றும் சப்பீரா ஆகியோரைச் சுயநலம் எவ்வாறு பாவம் செய்யத் தூண்டியது என்பதை நாம் காணலாம். அவர்கள் சுயநலம் கொண்டவர்களாகவும், மற்றவர்களுக்கு இழப்பு ஏற்படும் வகையில் தங்கள் சுயநல விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள விரும்புபவர்களாகவும் இருந்தனர். அதை அடைவதற்காக, உண்மை மற்றும் நீதியான கடவுளின் கொள்கைகளை மீறவும் அவர்கள் துணிந்தனர்.

நமக்கு இல்லாத ஒன்றை அடையத் துடிப்பதை நிறுத்திவிட்டு, நம்மிடம் உள்ளதை ஆண்டவரின் சேவைக்காகவும், மற்றவர்களின் நன்மைக்காகவும் பயன்படுத்தத் தொடங்கும்போது சுயக்கட்டுப்பாடு உண்டாகிறது. இயேசு இதை லூக்கா 12:15, 22-23, 31-32ஆகிய வசனங்களில் விளக்கினார். "பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள், ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்றார். ...இப்படியிருக்கிறபடியினால், என்னத்தை உண்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகாரத்தைப்பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகளாயிருக்கிறது. தேவனுடைய இராஜ்யத்தையே தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு இராஜ்யத்தை கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்."

## சுயக்கட்டுப்பாடு நேர்மறையானதாக இருக்க வேண்டும்

இறுதியாக, சுயக்கட்டுப்பாடு வெற்றிபெற வேண்டுமானால், அது நேர்மறையானதாக இருக்க வேண்டும். சுயக்கட்டுப்பாடு என்பது "மாம்சத்தின் குரலுக்கு" இல்லை" என்று மட்டுமே சொல்லாம் என நாம் நினைத்தால், அப்போது நாம் தற்காப்பு ரீதியான தோல்வியைத் தழுவக்கூடிய ஒரு போராட்டத்தை நடத்த வேண்டியிருக்கும்.

.மாறாக, சுயக்கட்டுப்பாடு என்பது நம்முடைய அன்பையும் பாசத்தையும் பரலோகத்தை நோக்கித் திருப்புவதாகும். மத்தேயு 6:20-21ல் இயேசு

இதற்கான திறவுகோலை நமக்கு அளித்துள்ளார்.

"பரலோகத்தில் உங்கள் பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள், அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை. அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயம் இருக்கும்." "பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது." (கொலே 3:2,3)

சுருக்கமாகச் சொன்னால், சுயக்கட்டுப்பாடு என்பது கிறிஸ்தவப் பண்பின் ஒரு முக்கிய அங்கமாகும். "புது சிருஷ்டியை" வளர்ப்பதற்கும், இருதயத்தைக் காத்துக்கொள்வதற்கும் இது அவசியமானது. சுயக்கட்டுப்பாட்டின் மூலம், கிறிஸ்தவர்கள் தங்கள் எண்ணங்கள், விருப்பங்கள், வார்த்தைகள் மற்றும் செயல்களை நீதியின் ஆட்சிக்கு உட்படுத்தி, கிறிஸ்துவைப் போன்ற தன்மையை மேலும் அதிகமாகப் பெற முயல்கிறார்கள். பந்தயத்தில் வெற்றிபெற்று தெய்வீகக் குடும்பத்தின் ஒரு பகுதியாகத் திகழும் வகையில் நாம் "ஓட" வேண்டுமானால், வளர்த்துக்கொள்ள வேண்டிய ஒரு நற்பண்பு சுயக்கட்டுப்பாடாகும்.

# நீதிமொழிகளிலிருந்து ஓர் அறிவுரை

# நமது பாதைகளை வழிநடத்தக் கடவுளை அனுமதித்தல்



— *John Bivol*

"மனுஷருடைய இருதயம் அவனுடைய வழியை யோசிக்கும், அவனுடைய நடைகளை உறுதிப்படுத்துகிறவரோ கர்த்தர்." (நீதிமொழிகள் 16:9)

நமது பாதையை நாமே திட்டமிட்டாலும், நம் வாழ்வில் இறுதி முடிவை எடுப்பவர் கடவுளே என்ற வல்லமையான சிந்தனையுடன் இந்த இதழ் நிறைவடைகிறது. நீதிமொழிகள் þ69 ஐப் போல, கிறிஸ்துவ வாழ்வின் சமநிலையை இவ்வளவு மென்மையாகவும் அதே சமயம் உறுதியாகவும் படம் பிடித்துக் காட்டும் வேதவசனங்கள் மிகச் சிலவே.

ஒரே ஒரு வசனத்தில், நமது கிறிஸ்தவ வாழ்வை வடிவமைக்கும் இரண்டு உண்மைகளை சாலொமோன் ஒன்றிணைக்கிறார் - மனிதச் செயல்பாடு மற்றும் ஆண்டவரின் தெய்வீக தலைமை ஆட்சி. "மனிதனின் இருதயம் தன் வழியைத் திட்டமிடுகிறது" என்று அவர் எழுதும்போது, நாம் திட்டமிடவும், தேர்ந்தெடுக்கவும், நோக்கத்துடன் செயல்படவும் கூடிய சிந்தையை ஆற்றல் கொண்டவர்கள் என்பதை நமக்கு நினைவூட்டுகிறார். இத்திட்டங்கள் வடிவம் பெறும் இடமாக இதயம் காட்டப்படுகிறது. ஆயினும், கர்த்தரே "அவன் நடைகளை உறுதிப்படுத்துகிறார்" என்று வேதாகமம் அறிவிக்கிறது. நமது அனைத்து பயிற்சிகளுக்கும் மேலாகவும், கீழாகவும், அவற்றின் ஊடாகவும் கண்ணுக்குத் தெரியாத கடவுளின் கரம் செயல்படுகிறது, அது அவருடைய பரிபூரண சித்தத்தின்படி விளைவுகளை ஞானத்துடன் வழிநடத்துகிறது.

இதன் பொருள் என்னவென்றால், ஒரு செயலைத் திட்டமிட இருதயம் சுதந்திரமாக இருந்தாலும், தம் ஜனங்களுக்கான அதன் விளைவின் மீது கர்த்தர் முழுமையான இறையாண்மை கொண்ட மேற்பார்வையைச்



செலுத்துகிறார். இது நம் இருதயங்களைப் பாதுகாப்பதற்கான மற்றொரு முக்கியமான வழியைத் தெளிவுபடுத்துகிறது. கிறிஸ்துவின் சீஷர், வாழ்வின் அனைத்து நோக்கங்களையும் முயற்சிகளையும் நீதியின் கோட்பாடுகளுடன் இசைவாக அமைத்துக்கொள்வதற்குப் பொறுப்பானவர் ஆவார். இருதயத்தைக் காத்துக்கொள்வதற்கு, நீதியான திட்டங்களை வகுப்பதைவிட மேலான ஒன்று தேவைப்படுகிறது, அத்திட்டங்களை ஆண்டவரின் மேலான வழிநடத்துதலுக்கு உட்படுத்துவதே அதுவாகும். நாம் ஜெபத்துடன் திட்டமிட்டு, அத்திட்டங்களை மனத்தாழ்மையுடன் அணுகி, கர்த்தர் நம் பாதைகளை நாம் எதிர்பார்த்ததை விட வேறு விதமாக வழிநடத்தும்போது அதற்கு இணங்கிச் செல்லத் தயாராக இருக்கும்போது, நம் இருதயம் காக்கப்படுகிறது.

## இருதயம் நம் வழியைத் திட்டமிடுகிறது

கர்த்தருக்காகக் காத்திருப்பது நமது கிறிஸ்தவ வாழ்வின் ஒரு பகுதியாக இருந்தாலும் (ஏசாயா 4031, புலம்பல் °326) திட்டமிடுவது தடுக்கப்படவில்லை, சொல்லப்போனால், அது இயல்பான ஒன்றாகவே கருதப்படுகிறது. கடவுள் தம் ஜனங்களைச் செயலற்றவர்களாகவோ அல்லது ஆவிக்குரிய இலக்கு இல்லாதவர்களாகவோ இருக்க அழைக்கவில்லை. புது சிருஷ்டிகளாக, நம்முடைய வாழ்க்கை, நடத்தை, சேவை மற்றும் நம்மிடம் உள்ள நேரம், திறமைகள், வாய்ப்புகள் ஆகியவற்றைக் கையாளுதல் குறித்துக் கவனமாகச் சிந்திக்குமாறு நாம் அழைக்கப்படுகிறோம். "ஆனபடியினாலே நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து..."(எபேசியர்°515) இயேசுவும் நம்மை "செலவைக் கணக்கிட" ஊக்குவிக்கிறார். (லூக்கா þ428)தினசரி வாழ்க்கையில், பெரிய மற்றும் சிறிய முடிவுகள் என அனைத்திலும், பரிசுத்தமாக்கப்பட்ட மனமே நமது செயல்களை வழிநடத்த வேண்டும் என்பதை இது நமக்கு நினைவூட்டுகிறது.

நமது இருதயங்களும் மனங்களும் நம் சிருஷ்டிகளின் நீதியான கொள்கைகளால் பயிற்றுவிக்கப்பட்டு வழிநடத்தப்படுவதை உறுதி செய்வதே சவாலாக உள்ளது. பாவம் மற்றும் உலகியல் தாக்கங்களிலிருந்து நம் இருதயத்தைக் காத்துக் கொள்ள வேண்டுமானால், நமது முடிவெடுத்தலையும் திட்டமிடலையும் வழிநடத்த உலகியல் சார்ந்த

லட்சியங்களையோ அல்லது ஆசைகளையோ நாம் அனுமதிக்கக்கூடாது. இயல்பாகவே பாவமற்ற ஆசைகள் கூட, "புது சிருஷ்டிக்கு"தரவேண்டிய முன்னுரிமையைக் குறைத்துக்கொண்டு, உலகத்தின் காரியங்களுக்கு முன்னுரிமை அளிக்கத் தொடங்கினால், அவை தீங்கானவையாக மாறக்கூடும்.

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்கான திட்டமிடலுக்கு, நாம் எச்சரிக்கையுடனும் விழிப்புணர்வுடனும் நடக்க வேண்டியது அவசியம். நாம் எத்தனை முறை நம்மை உணர்ந்துகொள்ளும் சூழ்நிலைகளில் இருந்திருக்கிறோம் ? "நான் அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது" அல்லது "நான் அப்படிச் செய்திருக்கக் கூடாது" உண்மையில் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், அந்த எண்ணம், விருப்பம் அல்லது நோக்கம் ஏன் முதலில் தோன்றியது ?என்பதுதான். நமது எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் செயல்கள் ஆகியவை இருதயத்திலிருந்தே தோன்றுகின்றன என்பதை வேதாகமம் வெளிப்படுத்துகிறது. இருதயத்தின் விருப்பங்களும் அதன் நிலையும் வெளிப்படும் ஒரு வாயிலாகவே வாய் விளங்குகிறது. (நீதிமொழிகள் 2:37, மத்தேயு 15:18)சொல்லாலோ அல்லது செயலாலோ நாம் பாவம் செய்திருப்பதை உணர்ந்தால், அது இருதயத்திலிருந்தே தோன்றியது என்பதை நாம் அங்கீகரிக்க வேண்டும். நாம் மனந்திரும்பி, கிருபாசனத்தில் மன்னிப்பை நாடும்போது சோர்வடையத் தேவையில்லை. இதனால் தான், பரிசுத்த ஆவியும், அன்பின் ஆவியும் நம் இருதயங்களையும் ஆத்துமாக்களையும் சுத்திகரிக்க அனுமதிப்பதும், ஒவ்வொரு எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிதலுக்குள் கொண்டுவருவதும் மிகவும் முக்கியமானது.(2கொரிந்தியர் 10:5)

## திட்டமிடல் இருதயத்தில் தொடங்குகிறது

நமது திட்டங்கள் லட்சியங்கள் மற்றும் விருப்பங்கள் முதலில் இருதயத்தில் தான் தோன்றுகின்றன. சராசரி மனிதரைப் பொறுத்தவரை, இவை பெருமை, பயம் அல்லது சுயநலத்தால் தூண்டப்படலாம். ஆனால், தங்களை ஆண்டவருக்கு அர்ப்பணித்த விசுவாசிகளின் இருதயம் தேவனுடைய வார்த்தையினால் பயிற்றுவிக்கப்பட வேண்டும். அவருக்காக "தினமும் மரிக்கவேண்டும்" என்ற கண்ணோட்டத்துடன் நாம் வாழ வேண்டும். (1கொரிந்தியர் 15:31)

"ஒவ்வொரு எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் செய்து சிறைப்படுத்த.." வேண்டும். (2கொரிந்தியர் 10:5 ) அவருடைய பணிக்காகவும் சகோதரர்களுக்காகவும் நம்முடைய காலத்தையும் திறமைகளையும் எவ்வாறு அர்ப்பணிக்கலாம் என்று சிந்திப்பதும் ஆகும். "பரத்திலிருந்து வரும் ஞானம்"



(யாக்கோபு3:17) என்பது, வேலை, வீடு, சபை மற்றும் வாழ்க்கையின் அனைத்துத் தொடர்புகளிலும் "புது சிருஷ்டிக்கு" ஒரு முதன்மையான வழிகாட்டியாகத் திகழ்கிறது.

அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசிகளாக நாம் நமது வாழ்க்கையைத் திட்டமிடும்போது, தனிப்பட்ட வசதிகள் அல்லது விருப்பத்தை விட உயர்ந்த நோக்கத்துடன் அதைச் செய்ய வேண்டும். நமது திட்டமிடல் பின்வரும் கேள்வியால் வழிநடத்தப்பட வேண்டும்: கிறிஸ்துவின் மூலம் "முற்றிலும் வெற்றிப்பெற்றவர்களாக" திகழும் அந்த ஜனங்களில் ஒருவராக மாற இது எனக்கு உதவுமா ?(ரோமர் 8:37) புது சிருஷ்டியானது, முடிவுகளை வெறும் அனுமதிக்கப்பட்டவை என்பதன் அடிப்படையில் மட்டுமல்லாமல் ஆவிக்குரிய ரீதியில் எவை நன்மை பயக்கும் என்பதன் அடிப்படையிலும் ஆராயக் கற்றுக்கொள்கிறது. அப்போஸ்தலர் நமக்கு நினைவூட்டுகிறபடி, "எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது, எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்பட மாட்டேன்." (1கொரிந்தியர் 6:12) நமது பழைய சுபாவம்,வசதிகள், இன்பம் அல்லது உலகளாவிய ஆதாயம் ஆகியவற்றின் அடிப்படையில் சில செயல்களை நியாயப்படுத்த விரைவாக முற்படுகிறது. ஆனால் பரிசுத்த ஆவியானது நம்மை வளர்ச்சி, சகிப்புத்தன்மை மற்றும் உண்மையுள்ளம் ஆகியவற்றை நாடும் ஒரு உயர்ந்த நிலைக்கு அழைக்கிறார்.

நாம் நம்மை உண்மையோடு சோதித்துப் பார்த்து (2கொரிந்தியர் 13:5) அதற்கேற்ப நம்

மனசாட்சியைப் பயிற்றுவித்தால், நாம் தேர்ந்தெடுக்கும் பாதை மாம்சத்தின் செல்வாக்கிலிருந்து விடுபட்டதா அல்லது அது மாம்சத்தின் சார்பாக நியாயப்படுத்தப்பட்ட முடிவா என்பதை நம்மால் சிறப்பாகப் பகுத்தறிய முடியும்.

இருப்பினும், திட்டமிடுதல் ஒருவிதத் தூண்டுதலையும் ஏற்படுத்துகிறது. நாம் ஏன் திட்டமிடுகிறோம் ? இயல்பாகவே, திட்டமிடுதல் ஒருவித நிம்மதியையும் பாதுகாப்பையும் அளிப்பதே அதற்குக் காரணம். மனிதர்களாகிய நாம் அறியாதவற்றைக் கண்டு அஞ்சுகிறோம், திட்டங்களை வகுப்பது ஒரு திசையையும் எதிர்பார்ப்புகளையும் உருவாக்க உதவுகிறது. வேதாகமம் ஆழ்ந்த திட்டமிடலின் மதிப்பை அங்கீகரிக்கிறது. "ஜாக்கிரதையுள்ளவனுடைய நினைவுகள் செல்வத்துக்கு...ஏதுவாகும். " (நீதிமொழிகள் 215) திட்டமிடல் என்பது நமது நேரத்தையும் பொறுப்புகளையும் விவேகத்துடனும் ஞானத்துடனும் நிர்வகிக்கவும், குறிக்கோளற்ற விதத்தில் அல்லாமல் தெளிவான நோக்கத்துடன் செயல்படவும் நமக்கு உதவுகிறது.

ஆனால், நமது திட்டங்கள் எதிர்பார்த்தபடியே நிறைவேறினால் மட்டுமே நமக்கு அமைதி கிடைக்கும் என்ற நிலை இருக்கும் போது, எளிதாகவே சோர்வும் மன அழுத்தமும் ஏற்படுகின்றன.

எனவே, கடவுளின் மேலான சித்தத்திற்கு முழுமையாகத் தன்னை ஒப்புக்கொடுத்த நிலையில், ஞானத்துடன் திட்டமிடுமாறு புதிய சிருஷ்டி அழைக்கப்படுகிறது. "உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி, அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும்." (நீதிமொழிகள் 163) திட்டங்கள் மாறும்போது, கடவுளின் மேலான வழிநடத்துதலுக்கு எதிராக விசுவாசம் கிளர்ந்தெழுவதில்லை, மாறாக,



அமைக்கப்பட்ட பாதைகளைக் கூட கிறிஸ்துவின் சாயலில் நாம் வளர உதவுவதற்கு ஆண்டவரால் பயன்படுத்த முடியும் என்று நம்பி, அது அவருக்குக் கீழ்ப்படிகிறது. (ரோமர்828/29) இந்த மனநிலையோடு பார்க்கும்போது, மாற்றி அமைக்கப்பட்ட ஒவ்வொரு அடியும் ஒரு மறுரூபமாவதற்கான வழியாக அமைகிறது, இது அன்புடன் நம் வழியை வழிநடத்தும் ஆண்டவர் மீது நம்பிக்கை வைக்க நமக்குக் கற்றுத்தருகிறது.

இருதயத்தைக் காப்பது என்பது, நம்முடைய திட்டங்களைத் திறந்த கரங்களுடன் பற்றிக்கொள்வதாகும். கிறிஸ்தவர் அகந்தையுடன் அல்ல, ஜெபத்துடன் திட்டமிடுகிறார். ஒவ்வொரு நோக்கமும் அமைதியான ஒப்புதலுடன் ஆணடவர் முன் வைக்கப்படுகிறது" ஆதலால் - ஆண்டவருக்குச் சித்தமானால் நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்லவேண்டும்."(யாக்கோபு 415) இருதயங்களை நாம் முழுமையாக ஒப்புக்கொடுக்கும்போது, நம்முடைய திட்டங்கள் ஒரு உயர்ந்த நோக்கத்திற்காகக் கடவுள் பயன்படுத்தக்கூடிய - அல்லது மென்மையாக ஓரம் கட்டி வைக்கக்கூடிய - கருவிகளாக மாறுகின்றன.

## கர்த்தர் நம்முடைய அடிகளை வழிநடத்து கிறார்

வாழ்க்கையில் நாம் எடுக்கும் முடிவுகளும் மேற்கொள்ளும் பாதைகளும், கடவுளின் சித்தத்திற்கு நம் இருதயம் எவ்வளவு ஆழமாக இணங்கிப்போகிறது என்றும், அவருடைய கோட்பாடுகள் நமக்குள் எவ்வளவு உறுதியாக வேரூன்றியுள்ளன என்பதைப் பொறுத்தே, ஓரளவு தீர்மானிக்கப்படுகிறன்றன என்றாலும், நீதிமொழிகள் 169 இன் அடுத்த பகுதி, இறுதியில் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் நம்மிடம் இல்லை என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. தங்கள் சுயாதீனம் அல்லது தன்னாட்சி பறிபோவதாகத் தோன்றுவதை சிலர் அதிருப்தியுடன் பார்க்கலாம். ஆனால் கிறிஸ்துவைப் போன்ற குணநலன்களை வளர்த்துக்கொள்ள விரும்புவோரைப் பொறுத்தவரை, இது சுதந்திரத்தை இழப்பதல்ல, மாறாக, ஆழ்ந்த மற்றும் நிலையான ஆறுதலின் ஊற்றாகும்.

சங்கீதக்காரரின் வார்த்தைகளைச் சிந்தித்துப் பார்க்கலாம் "நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார். அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை, கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார்."(சங்கீதம் 3723/24 )கடவுளின் வழிநடத்தும் கரத்தின் அன்பான தன்மையை, இந்த வேதவசனம் கிறிஸ்தவரின் மனதில் மேலும் ஆழமாகப் பதியவைக்கிறது. இதன் பொருள், ஒவ்வொரு தவறான முடிவையும் கர்த்தர்

தடுத்துவிடுவார் என்றோ, அல்லது ஒவ்வொரு சிரமம், சோதனை அல்லது கண்டிப்பு ஆகியவற்றிலிருந்தும் நம்மை விலக்கி வைப்பார் என்றோ அர்த்தம் அல்ல. இருப்பினும், அவர் தம் ஜனங்களை வழிநடத்துவதாக வாக்களித்துள்ளார். "நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும் போதும், வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்." (ஏசாயா3021)

அவருடைய வழிநடத்துதலுக்கு நாம் செவிசாய்க்கும் வரை, நம்முடைய பயணம் இறையன்பிற்குரிய அல்லது பக்தியுள்ள வாழ்க்கையை நோக்கித் தொடரும். கர்த்தரின் வழிநடத்துதல் கடிந்துகொள்ளுதல் மூலமாக வந்தாலும், அதில் நாம் கவனத்துடன் இருக்க வேண்டும் என்பதை இது நமக்கு நினைவூட்டுகிறது. தாவீதின் வாழ்க்கை இதற்குத் தீவிரமான உதாரணங்களை அளிக்கிறது. ஒன்றுக்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களில், கடவுளுடைய சித்தத்துடன் அவரது சொந்த விருப்பமும் கலந்திருந்தபோது, அவர் அதற்கான விளைவுகளைச் சந்திக்க நேரிட்டது. ஆயினும், பாவம் என்று சுட்டிக்காட்டப்பட்டபோது, அவர் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவும், மன்னிப்பு கோரவும், மன்னிக்கப்பட்டதனால் உண்டாகும் பேரின்பத்தில் நிலைத்திருக்கவும் மனதாயிருந்தார். (சங்கீதம் 321)

அப்போஸ்தலனாகிய பவுலும் நம்மை இவ்வாறு ஊக்குவிக்கிறார்: "தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார், உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியாக போக்கையும் உண்டாக்குவார்."(1கொரிந்தியர் 10:13)நாம் ஆண்டவரைச் சார்ந்திருந்தால், நம்மை நாமே பார்த்துக்கொள்ளும் நிலைக்கு விடப்படமாட்டோம் என்பதை இது நமக்கு உறுதிப்படுத்துகிறது. சோதனைகள் துன்பங்கள் மற்றும் பலவீனமான நேரங்களிலும் அவருடைய மேலான பராமரிப்புச் செயல்பாடு தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இந்தச் சார்ந்திருத்தல் இருதயத்தை மென்மையாக வைத்திருக்கிறது. திட்டங்கள் வெற்றிபெறும் போது நாம் நன்றி செலுத்துகிறோம், திட்டங்கள் மாறும் போது நாம் சோர்ந்துபோவதில்லை. கதவுகள் அடைக்கப்படும்போது, நமது உயர்ந்த ஆவிக்குரிய நன்மைக்கு உகந்த காரணங்களுக்காகவே ஆண்டவர் நம் பாதைகளை மாற்றி அமைக்கிறார் என்று நாம் நம்புகிறோம். இவ்விதமாக, நீதிமொழிகள் Þ69 ல் உள்ள ஞானம் இருதயத்தை அகந்தை மற்றும் மனச்சோர்வு ஆகிய இரண்டிலிருந்தும் பாதுகாக்கிறது.

## கடவுளின் சித்தத்திற்கு பணிந்து நடப்பதற்கான உதாரணங்கள்

தேவனுடைய சித்தத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படிந்து, ஞானமாகத் திட்டமிட்ட உண்மையுள்ள ஊழியர்களின் உதாரணங்களால் வேதாகமம் நிறைந்துள்ளது. ஆபிரகாம், சேருமிடம் தெரியாமலேயே தேவனுடைய அழைப்புக்குக் கீழ்ப்படிந்து, ஒவ்வொரு அடியையும் தேவன் வழிநடத்துவார் என்று நம்பினார். "விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெற்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான்." (எபிரெயர் Þ18)வெற்றி என்பது கடவுளின் தயவைப் பொறுத்தது என்பதை உணர்ந்திருந்த நெகேமியா கவனமான திட்டமிடுதலோடும், மனப்பூர்வமான ஜெபத்தோடும் இணைத்துச் செயல்பட்டார். (நெகெமியா ∘24/8) அதேபோல, யோசேப்பும் மரியாளும் தாழ்மையான கீழ்ப்படிதலுடன் தங்கள் சொந்த எதிர்பார்ப்புகளை விட்டுக்கொடுத்து, கடவுளின் மீட்பின் திட்டம், தங்கள் வழியாக நிறைவேற இடமளித்தனர். "இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள்." (லூக்கா ∘138), "யோசேப்பு நித்திரை தெளிந்து எழுந்து, கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டளையிட்டபடியே தன் மனைவியைச் சேர்த்துக்கொண்டார்." (மத்தேயு ∘l 24 ) நம்பிக்கையாலும் கீழ்ப்படிதலாலும் திட்டங்கள் வடிவமைக்கப்படும் போது, கடவுளே அதன் விளைவை வழிநடத்தி, அந்தப் பணியை ஆசீர்வதிக்கிறார் என்பதை அவர்களுடைய வாழ்க்கை காட்டுகிறது.

இதற்கு மாறாக, நமது பாதையைத் தீர்மானிக்கச் சுய விருப்பத்தை அனுமதிப்பதற்கு எதிரான எச்சரிக்கைகளாலும் வேதாகமம் நிறைந்துள்ளது. சுய விருப்பம் இருதயத்தை ஆளும் போது, சமரசம் செய்து கொள்ளும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளது, இதனால் ஆவிக்குரிய நலன் ஆபத்துக்குள்ளாகிறது. லோத்து விசுவாசத்திற்குப் பதிலாகக் கண்ணால் கண்டதைக் கொண்டு தீர்மானித்து, சோதோமுக்கு அருகில் குடியேறினார், இறுதியில் அவர் தம் வீட்டை இழந்தார். (ஆதியாகமம் Þ310/13இ Þ915/ 26)அனனியாவும் சப்பீராளும் தங்கள் இருதயங்களை தேவனிடமிருந்து மறைத்து வைத்துக்கொண்டு, பக்தி உள்ளவர்கள் போலக் காட்டிக்கொள்ள முயன்றனர், இதன் விளைவாக அவர்கள் கடுமையான நியாயத்தீர்ப்புக்குள்ளானார்கள். (அப்போஸ்தலர் ∘51/ 11)தனிப்பட்ட ஆதாயம் தனது செயல்களைத் தீர்மானிக்க அனுமதித்து, மற்றவர்களுக்குத்

தடையாகவும் மாறினார். (எண்ணாகமம் 22/24இ 3116இ, 2பேதுரு °215, வெளிப்படுத்துதல் °214) முழுமையான கீழ்ப்படிதலையே கடவுள் ஆசீர்வதிக்கிறார், பகுதியளவு பணிதலை அல்ல என்பதை இந்த எடுத்துக்காட்டுகள் நமக்கு நினைவூட்டுகின்றன. சுய விருப்பம் மேலோங்கும் போது, பிலேயாம் கடவுளின் விருப்பத்திற்கு எதிராகச் செயல்பட்டான், நியாயமானவை என்று தோன்றும் தேர்வுகள் கூட ஆவிக்குரிய இழப்புக்கு வழிவகுக்கக்கூடும். அவருடைய சித்தத்திற்கு நாம் எவ்வளவு முழுமையாக நம்மை ஒப்புக்கொடுக்கிறோமோ, அவ்வளவு பாதுகாப்பாக நம் இருதயம் காக்கப்படுகிறது.

**முடிவுரை**



கடவுளுடைய குமாரனின் சாயலுக்கு நாம் முழுமையாக ஒத்திருக்கும்படியாக முயலும்போது, நம்முடைய திட்டங்கள், லட்சியங்கள் மற்றும் விருப்பங்கள் ஆகியவை அவருடைய சித்தத்திற்கு மேலும் மேலும் கீழ்ப்படிந்து அமைய வேண்டும். இருதயத்தைக் காத்துக்கொள்வது குறித்த இறுதிப் பாடங்களில் இதுவும் ஒன்று - வெறும் நீதியான திட்டங்களை வகுப்பதன் மூலம் மட்டும் இருதயம் காக்கப்படுவதில்லை, மாறாக, அத்திட்டங்களை ஆண்டவரின் வழிநடத்துதலுக்கு உட்படுத்துவதன் மூலமே அது காக்கப்படுகிறது.

கடவுள் நமது விருப்பத்தை மீறுவதில்லை, அதேவேளையில், தமது நோக்கத்திற்கு முரணான பாதைகளையும் அவர் அங்கீகரிப்பதில்லை. ஆயினும், தமது ஞானத்தினால் அவர் எப்போதும் நம்மோடு இருந்து உண்மையுள்ளவராகச் செயல்படுகிறார், நாம் செல்லும் பாதைகள் மாற்றப்படும் சூழல்களைக் கூட முதிர்ச்சி, பகுத்தறிவு மற்றும் அவர் மீதான சார்ந்திருத்தல் ஆகியவற்றை நமக்குக் கற்றுக்கொடுக்க அவர் பயன்படுத்துகிறார்.

நமது திட்டங்களை ஆண்டவரிடம் சமர்ப்பிக்கும் போது, உடனடி வசதிகள் அல்லது தனிப்பட்ட விருப்பங்களைக் கொண்டு வெற்றி அளவிடப்படுவதில்லை, மாறாக, நாம் கிறிஸ்துவைப் போன்ற தன்மைக்கு எவ்வளவு நெருக்கமாக ஈர்க்கப்படுகிறோம் என்பதைக் கொண்டே அது அளவிடப்படுகிறது.இவ்வாறு, காத்துக்கொள்ளப்பட்ட இருதயம் ஜெபத்துடன் திட்டமிடவும், தாழ்மையுடன் விட்டுக்கொடுக்கவும், முழுமையாக கடவுளை நம்பவும் கற்றுக்கொள்கிறது. இவ்வகையில், திட்டமிடுதல் என்பது சுய விருப்பத்தின்படியான ஒரு செயலாக அமையாமல், மாறாக, கவனத்துடன் நடப்பதற்கும், விவேகத்துடன் தேர்ந்தெடுப்பதற்கும், கடவுள் நம்மிடம் எதிர்பார்க்கும் ஆவிக்குரிய முதிர்ச்சியை நோக்கிச் சீராக வளர்வதற்கும் ஒரு வாய்ப்பாக அமைகிறது.



## My Strong Tower

In Zion's Rock abiding,
My soul her triumph sings;
In his pavilion hiding,
I praise the King of kings.

Wild waves are round me swelling,
Dark clouds above I see;
Yet, in my fortress dwelling,
More safe I cannot be.

My tow'r of strength can never
In time of trouble fail;
No pow'r of Satan ever
Against it shall prevail.

My Strong Tow'r is he!
To him will I flee;
In him confide, in him abide;
My Strong Tow'r is he!

Hymns of Dawn